# மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல்

முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல்

முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி வளாகம், தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title | : | Maṉṉāṉ Ciṉṉāṇṭik Kataippāṭal |
| Author | : | Dr. A.M. Satyamoorthi<br>7/220 A, Main Road,<br>Ammacattiram - 612 103. |
| Publisher | : | International Institute of Tamil Studies,<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113. |
| Publication No. | : | 333 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1999 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 70GSM Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 Points |
| No. of pages | : | X + 82 |
| Price | : | Rs. 18/- (Rupees Eighteen only) |
| No. of Copies | : | 1,200 |
| Printed by | : | **PAVAI PRINTERS (P) LTD.,**<br>142, J.J.K. Road, Royapettah,<br>Chennai - 14. PH: 8532441 |
| Subject | : | Folklore |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அணிந்துரை

மக்கள் தொன்றுதொட்டு வாய்மொழியாகப் பாடுகின்ற கதையைக் கதைப்பாடல் என்பர். அவ்வகைக் கதைப்பாடல்கள் பல இன்னும் நூலாக்கம் பெறவில்லை. அவற்றுள் ஒன்று **'மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல்'** என்பதாகும்.

சமூகத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டதன் கொடிய விளைவை 'நல்லதங்காள் கதைப் பாடல்' நமக்கு உணர்த்துகின்றது. அதைப் போன்றே மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடலும் பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டதால் ஏற்பட்ட சீரழிவுகளை நமக்குக் காட்டுகிறது.

1986-ஆம் ஆண்டு நடந்த 18-ஆவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கில் முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி இக்கதைப்பாடலை அறிமுகம் செய்யும் வகையில் கட்டுரை படித்தார்.

அதன்பின் 1997-இல் திரு. முருகானந்தம் அவர்கள் மிக சுருங்கிய அளவில் 'மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்' என்னும் நூலைப் பதிப்பித்தார். ஆயின் முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி பதிப்பித்துள்ள இக்கதைப்பாடல் முழுமையாகவும், திரு. முருகானந்தம் பதிப்பித்த கதைப் பாடல்களினின்றும் வேறுபட்ட வகையிலும் அமைந்துள்ளது.

இந்நூலாசிரியர் நாட்டுப்புறக் கதைப் பாடல்களைப் பற்றி ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். அத்துறையில் மிகவும் தோய்ந்தவர். நுண்ணிய புலமையும் ஆய்வு நேர்மையும் கொண்ட முனைவர் அ.ம. சத்தியமூர்த்தி அவர்கள் பதிப்பித்த மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடலை வெளியிடுவதில் இந்நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது.

அரிது முயன்று இந்நூலைப் பதிப்பித்துள்ள நூலாசிரியரைப் பாராட்டுகிறேன். நூலாசிரியர் மேலும் உழைத்து மக்கள் வழக்கில்

நிலவுகின்ற கதைப்பாடல்களைத் தொகுத்துப் பதிப்பிக்கவேண்டும் என்பது என் வேண்டுகோள்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் நூலாக்கம் செய்து தந்த விக்னேஷ் அச்சகத்தார்க்கு எங்கள் நன்றி.

இயக்குநர்

# ஆராய்ச்சியுரை

நாட்டுப்புறக் கதைகளைப் பற்றி டாக்டர் பட்ட ஆராய்ச்சியினைச் செய்து முடித்த நான், 1984-இல் இராமநாதபுரம் சேதுபதி அரசு கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தேன். தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் அம்மாசத்திரம் என்னும் சிற்றூரில் பிறந்து வளர்ந்த என்னோடு நாட்டுப்புறவியலும் இரண்டறக் கலந்துவிட்டது என்றுதான் கூற வேண்டும். என் மக்களோடு நான் ஒன்றி வாழ்ந்ததே அதற்குக் காரணமாகும்.

மக்களோடு ஒன்றி வாழ வேண்டும் என்றெல்லாம் நான் எண்ணிப்பார்த்ததில்லை. அதற்கான வயதும் அப்போது எனக்கில்லை. தாமாகவே இத்தகைய இயல்பு என்னிடம் இருந்திருக்கிறது.

இத்தகைய இயல்பினைப் பெற்ற நான் இராமநாதபுரத்தில் பணியில் சேர்ந்தேன். பணியாற்றிய காலத்தில் நாள்தோறும் அம்மாவட்டத்து மக்களின் வாழ்வியலைக் கூர்ந்து நோக்கி வந்தேன். கள்ளங் கபடமற்ற அம்மக்கள், அசல் நாட்டுப்புறவியல் கூறுகளைத் தங்களிடம் தக்க வைத்துக்கொண்டிருக்கும் பாங்கானாது என்னை மிகவும் கவர்ந்தது.

கல்லூரிப் பணி நேரம் போக எஞ்சிய நேரமெல்லாம் கிராமத்து மக்களிடம் கலந்து பேசுவதையும், அவர்களது திருமணச் சடங்குகள், விழா நிகழ்ச்சிகள் முதலானவற்றில் கலந்து கொண்டு மகிழ்வதையும் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதினேன். அவர்களது 'முளைப்பாரி' நிகழ்ச்சியை அணு அணுவாகக் கண்டு மகிழ்ந்தேன்.

இச்சூழலில்தான் எனது சென்னை நண்பர் திரு. எஸ். வேலு என்பவர் மூலம் எனக்கு அறிமுகமானவர்கள் புத்தேந்தல் என்னும் கிராமத்து மக்கள். அம்மக்கள்தான் இராமநாதபுரத்திலிருந்த காலத்தில் என் மீது உயிரையே வைத்திருந்தனர். அம்மக்கள் மீது நானும் அவ்வாறே அன்பு செலுத்தினேன். அதன் விளைவாக அவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்ததுதான் 'மன்னான் சின்னாண்டிக் கதை' என்னும் இக்கதைப் பாடலாகும்.

## கதைச் சேகரிப்பு

இராமநாதபுரம் சேதுபதி அரசு கல்லூரியிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ளது புத்தேந்தல் என்னும் கிராமமாகும். அவ்வூரில் கோனார் இன மக்கள் மிகுதியாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களது தொழில் விவசாயமும் ஆடுமாடுகள் வளர்ப்பதுமேயாகும். அவ்வூரைச் சேர்ந்த திரு. வேலுவின் உறவினர்தாம் திரு. சண்முகம் என்பவர்.

ஒரு நாள் இரவுப் பொழுதில் திரு. சண்முகத்தோடு கலந்துரையாடிக் கொண்டிருந்தபோது, அவர் தமக்கு அருணகிரிராசன் கதை, சங்கிலிராசன் கதை, கவுரிமாம்பட்டணத்துக் கதை, கைலங்கிரிராசன் கதை, பழுவாமல் இருக்கும் பழுத்த ராசன் கதை, எழுவாமல் இருக்கும் எழுத்துராசன் கதை, மதுரை வீரன் கதை, மன்னவன் முதற்சோனைக் கதை முதலான கதைகள் தெரியும் என்று கூறினார்.

இவருடைய தொழிலும் ஆடுமாடுகள் மேய்த்தலேயாகும். ஆட்டுக் கிடைக்குக் காவலாகப் படுத்திருக்கும்போது கோடைக்காலத்து இரவு நேரத்தில் இத்தகைய கதைப் பாடல்களைத் தம்மைச் சூழ்ந்திருப்போர் மத்தியில் பாடுவது அவர்களது வழக்கம் எனவும் அறிய முடிந்தது.

'தங்களை மிகவும் கவர்ந்த கதை ஒன்றைச் சொல்லுங்களேன்' என்று அவரிடம் கேட்டபொழுது அவரால் சொல்லப்பட்டதுதான் 'மன்னான் சின்னாண்டிக் கதை' என்னும் இக்கதைப் பாடலாகும்.

**கதை கூறும் நேரமும் கேட்பவர்களும்**

கோடைக்கால இரவு நேரங்களில் பொழுது போக்கிற்காகக் கிராமப்புறங்களில் கதை கூறுவது தொன்றுதொட்டு வரும் மரபு ஆகும். சின்னாண்டிக் கதையினைத் தொடர்ந்து அவர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வரை மற்றவர்களுக்குக் கூறுவதாகவும் அறிய முடிகிறது.

வாய்மொழி வழக்கினையுடைய இக்கதைப் பாடலானது 7.2.85 அன்று இரவு முழுமையும் மூன்று ஒலி நாடாக்களில் பதிவு செய்யப்பட்டது. திரு. சண்முகம் படுத்துக்கொண்டே இக்கதைப் பாடலைப் பாடினார். இயற்கைச் சூழலில் பதிவு செய்யப்பட்ட இக்கதையினை இவருக்கு இவரது தந்தையார் கூறியதாகக் குறிப்பிட்டார். வாய்மொழி வழக்கிலிருக்கும் இக்கதையானது அசல் நாட்டுப்புறக் கதைப் பாடலாகும். கதை கூறியவர் இதனை உண்மையாக நிகழ்ந்த கதை என்றே குறிப்பிட்டார். அதற்கு ஆதாரமாக அழகர்மலையில் காராளபுறந்த கருத்தவனம், பேப்பெருமாள், சின்னாண்டி ஆகியோர் சமைந்த இடத்திலுள்ள கல்லிற்கு இன்றும் வழிபாடு நடப்பதாக அவர் காட்டுவது கருதத் தக்கது ஆகும்.

**கதையை அறிமுகப்படுத்துதல்**

கதையைச் சேகரித்த பிறகு, அதனைக் கற்றவர்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் நோக்கில் 1986-இல் நடைபெற்ற இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கிற்கு என்னால் எழுதி அனுப்பப்பட்ட 'சின்னாண்டிக் கதை-ஓர் அறிமுகம்' என்னும் கட்டுரையானது பதினெட்டாவது கருத்தரங்க ஆய்வுக் கோவை-தொகுதி-3 (1986) - இல் வெளியிடப்பட்டுள்ளது.

**மாற்று வடிவப் பதிப்பு**

நாட்டுப்புற இலக்கியத்தின் இன்றியமையாத இயல்புகளுள் ஒன்று அது மாற்று வடிவங்களைப் பெற்றிருக்கும் என்பதாகும்.

அவ்வடிப்படையில் திரு. ச. முருகானந்தம் என்பவர் 1991-இல் பதிப்பித்துள்ள 'மன்னான் சின்னாண்டித் தேவர் கதைப்பாடல்' என்னும் நூல் மன்னான் சின்னாண்டிக் கதையோடு ஓரளவு ஒத்துள்ள நிலையினைக் காண முடிகிறது. மிகச் சுருங்கிய அளவிலான சின்னாண்டித் தேவர் கதைப் பாடலிலிருந்து இப்பொழுது இங்குப் பதிப்பிக்கப்படும் கதைப்பாடல் பெரிதும் வேறுபட்டு அமைந்துள்ளது. இவ்வடிவம் மிக நீண்ட அளவிலான ஒரு முழுமையான வடிவமாகவும் காணப்படுகிறது என்பது குறிப்படத் தக்க செய்தியாகும்.

பதின் மூன்று ஆண்டுகளாக வெளியிட வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு, இப்பொழுது வெளிவருவதற்கான சூழல் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இக்கதைப்பாடல் பற்றிய செய்தியினைத் தொடர்ந்து நோக்கலாம்.

**கதைச் சுருக்கம்**

வெள்ளலூர் நாட்டு அரசனான முதற்சோனை எனப்படுபவன் சிறுகுடி நாட்டு அரசர்களான மூளிநல்ல வீரப்பன், முனையாளி அம்பலம், முளிச்சகுட்டி அம்பலம், மூளிகுட்டி அம்பலம், மூத்தண்ண வாகனம், பெரியட வாகனம், சின்னட வாகனம் என்னும் எழுவரோடு பிறந்த 'எழுவக்கா நாச்சியா' என்பவரை மணம் செய்து கொள்கிறான். திருமணத்திற்குப் பிறகுத் தங்களது தங்கைக்கு அந்த எழுவரும் சிறிது நிலத்தினைச் சீதனமாக அளிக்கின்றனர்.

பின்னர் அத்தம்பதியினர் காராள புறந்த கருத்தவனம் என்ற பெண் குழந்தையையும் பேப்பெருமாள், சின்னாண்டி என்ற இரட்டை ஆண் குழந்தையையும் ஈன்றெடுத்தனர். இந்தச் சூழ்நிலையில் தமது மைத்துனர்கள் கொடுத்த நிலத்தைப் பயிர் செய்வதற்கு மன்னவன் முதற்சோனை செல்கிறான். ஆயினும் எழுவரின் மனைவியரும் அதனை மறுக்கவே, இளைய மைத்துனனால் முதற்சோனை கொலை செய்யப்படுகிறான். அதனையறிந்த எழுவக்கா நாச்சியாளும் கணவனோடு உயிர் விடுகிறாள்.

காராள புறந்த கருத்தவனத்தின் தலையில் குடும்பச்சுமை முழுமையும் விழுகிறது. அவள் தமது உடன் பிறந்த தம்பியர் இருவரையும் வளர்த்து வருகிறாள். தங்கள் குடும்பம் அழிவதற்குக் காரணமாயிருந்த தமது மாமன் குடும்பத்தோடு சின்னாண்டி பல்வேறு சூழல்களில் போரிட்டு வென்று வருகிறான். இறுதியாக நடந்த போரில் அவனும் அவனது அக்காள் காராள புறந்த கருத்தவனமும் அழகர்கோவில் மலையில் கல்லாகச் சமைகின்றனர்.

சின்னாண்டி நடத்திய இறுதிப்போரில் சிறுகுடி நாட்டு அரசர்களான எழுவரும் கட்டபொம்மன், ஊமைத்துரை ஆகியோர் துணையுடன் சின்னாண்டியோடு மோதுகின்றனர்.

கதையின் இறுதிக் கட்டமாகப் பேப்பெருமாள் தமது மாமன் குடும்பத்தை அழித்துத் தம் உடன் பிறந்தவர்களின் அருகிலேயே கல்லாகச் சமைவதனையும் காணலாம்.

**கதையின் காலம்**

கதை நிகழ்ச்சியுடன் கட்டபொம்மன், ஊமைத்துரை ஆகியோர் இணைத்துப் பேசப்படுவதால் கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு முதல் இக்கதையானது முழு வடிவம் பெற்று மக்களிடையே வழங்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது. ஆயினும் கதையின் நம்பகத் தன்மையினைக் களப்பணி மற்றும் பல்வேறு வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

**கதைத் தலைப்பு**

இக்கதையினைக் கதை கூறியவர் 'மன்னவன் முதற்சோன கதெ' என்றே குறிப்பிட்டார். தஞ்சை மாவட்டத்தின் சில இடங்களில் களப்பணி மேற்கொண்ட பொழுது, 'மன்னான் சின்னாண்டிக்கதை' என்ற பெயர் வழக்கினையும் காண முடிந்தது. மன்னான் சின்னாண்டியினால் இக்கதையின் பெரும்பகுதி இயங்குகின்ற காரணத்தினால் இதனைச் 'சின்னாண்டிக்கதை' என்று சுட்டுவது பொருத்தமுடையதாக அமையும் என்னும் நோக்கோடு இக்கதைக்கு 'மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. 'மன்னான் சின்னாண்டி' என்பது 'மன்னவன் சின்னாண்டி' என்பதன் திரிபு வடிவமாக இருத்தல் வேண்டும்.

**கதை வகை**

கதைப் பாடல்கள் பலவற்றைப் பதிப்பித்த பேராசிரியர் நா. வானமாமலை அவற்றை, (1) புராணக் கதைப்பாடல் (2) வரலாற்றுக் கதைப் பாடல் (3) சமூகக் கதைப்பாடல் என்னும் மூவகையாகப் பாகுபாடு செய்கிறார். அவ்வகையில் பெண்ணுக்குச் சொத்துரிமை மறுக்கப்படும் நிலையில் எழுந்த சின்னாண்டிக் கதைப்பாடலானது சமூகக் கதைப்பாடல் வகையைச் சேர்ந்தது ஆகும்.

**கதைக்கரு**

சின்னாண்டிக் கதைப்பாடலின் கருவானது சமுதாயத்தில் பெண்ணின் சொத்துரிமைப் பற்றியதாக அமைகிறது. சமுதாயத்தில் பெண்ணுக்குச் சொத்துரிமை இல்லாதபோதும் தங்களது உடன் பிறந்தவளுக்கு எழுவரும் தங்கள் சொத்தில் சிறு பாகத்தை அளிக்கின்றனர். அதனை அந்தச் சமுதாயம் ஏற்கவில்லை. அக்கருத்தானது எழுவரின் மனைவியர் மூலமே வெளிப்படுத்தப்படுகிறது. அதன் விளைவுதான் மன்னவன் முதற்சோனை கொலை செய்யப்படுவதாகும்.

முதற்சோனையைக் கொலை செய்வதுடன் பெண் சொத்துரிமைப் போராட்டம் நின்றுவிடவில்லை. அதற்கு உயிர் கொடுக்கும் வகையில் காராள புறந்த கருத்தவனத்தின் மூலம் போராட்டம் தொடருகிறது. இந்தச் சொத்துரிமைப் போராட்டத்தில் எவரும் வெற்றி பெறாமல் இரண்டு குடும்பமும் அழிந்துபடுவதை நோக்க, சொத்துரிமைப் போராட்டம் தொடருகிறது என்பதை இக்கதை உணர்த்துவதனை அறியலாம்.

**வட்டார வழக்குகள்**

வட்டார வழக்குச் சொற்கள் அவை வழங்கும் பகுதியின் தனித் தன்மைகளைப் புலப்படுத்திக் காட்டுவனவாகும். அத்தகைய வழக்குகள் மொழியின் சிறப்பு, வழங்கும் மக்களின் பண்பாடு முதலானவற்றை விளக்கி நிற்கும்.

கதைப் பாடலில் இடம்பெறும் சஞ்சிகம்(கலப்பை), மழமாரி, உருட்டுப்பாடல், திரட்டுப்பால், காரங்குட்டி(காரைமுள் குத்து), குறுக்கு(முட்செடி), ஈன்டகன்டு(பிறந்த இளங்கன்று), பேத்தகண்டு (இறந்த கன்றுகுட்டி), கொட்டுகு(கொட்டை முத்து), சாமக்கிரயம்(பூசைக்குரிய சாமான்கள்), காளாஞ்சி வெத்தல பாக்கு(மரியாதை நிமித்தமாகக் கொடுக்கும் வெற்றிலை பாக்கு), வலரி(கத்தி), லேஞ்சி(வேட்டி), சோமன்(துண்டு) முதலான வழக்குச் சொற்கள் தமிழ் மொழிக்கு வளம் சேர்ப்பனவாக அமைகின்றன.

**இலக்கிய நயம்**

ஏட்டிலக்கியத்திற்கெல்லாம் வழிகாட்டும் வகையில் நாட்டுப்புற இலக்கியத்தில் இலக்கிய நயம் சிறந்து விளங்குவதைக் காணலாம். உவமை, கற்பனை, உணர்ச்சி, கருத்து, நயம், எதுகை, மோனை முதலியன சின்னாண்டிக் கதைப் பாடலில் சிறந்து விளங்குகின்றன.

முதற்சோணையின் அரண்மனைக்குத் தூதுவனாக வந்த ஒருவன் அரண்மனை வாசலில் அலைந்து கொண்டிருக்கிறான். அதனை அரண்மனையின் மாடியிலிருந்து பார்க்கும் சின்னாண்டியின் கண்ணிற்குத் 'தென்ன மரத்து நிழலாடுனது போல' வும் 'பூச்சி இழஞ்சது போல'வும் தோன்றுவதாகக் கதைப்பாடல் காட்டுகிறது. இத்தகைய உவமைப் பகுதிகள் ஏட்டிலக்கியம் படித்தோரை வியக்க வைப்பவையாகும்.

'எண்ணெக் குடத்திலெ எறும்பு வந்து சூழ்ந்தது போல்', 'தண்ணிக் குடத்திலெ தவள வந்து சூழ்ந்தது போல்', 'கிடா துலுக்குனது போல துலுக்குனவுடன்' 'சந்திரனும் சூரியனும் ஒளிவிட்டது போல' என்பன போன்று வரும் உவமைப் பகுதிகள் குறிப்பிடத் தக்கவையாகும்.

'நாய்க்கு வெந்தயத்தக் கட்டுனா நாய்க்குப் பெருமையா நாயகனுக்குப் பெருமையா' என்பது கதைப் பாடலில் இடம்பெறும் ஒரு பழமொழியாகும். இத்தகைய பழமொழிகள் நாட்டுப்படுற மக்களின் பழுத்த அனுபவத்தைப் படம் பிடித்து காட்டுபவையாகும்.

அக்கா கருத்தவனம் வளர்ந்த முறையினை 'முத்தத்து வெயிலு முகத்தி லடியாமல், அந்தப்புறமும் ராணிதல வாசலுமா இருந்தவ' என்று கதைப்பாடல் குறிப்பிடும். இப்பகுதியானது கண்ணகியைப் பற்றி இளங்கோவடிகள் குறிப்பிடும், 'வண்ணச் சீரடி மண்மகள் அறிந்திலள்' என்னும் பகுதியோடு ஒப்பு நோக்கி மகிழத் தக்கதாகும்.

இக்கதைப் பாடலில் திரும்பத் திரும்ப இடம்பெறும் வரிகள் என்னும் வகையில்,

'ஆனை அடயும் வனம் அன்னபச்சி தூங்கும்வனம்
சிங்க ளடயும்வனம் சிறுபுலி தூங்கும்வனம்
கரடீ படுத்திருக்கும் கழுகுமல தாந்தாண்டி
ஓநா படுத்திருக்கும் ஒழுங்குமல தாந்தாண்டி
பில்லா படுத்திருக்கும் பில்லமல தாந்தாண்டி'

என்பது போன்று வரும் பகுதிகளை எடுத்துக் காட்டலாம். இத்தகைய பகுதிகளும் கதைப் பாடலுக்கு நயம் சேர்க்கின்றன.

இக்கதைப் பாடலில் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் முதலியன பற்றிய செய்திகள் ஏராளம் காணப்படுகின்றன.

இத்தகைய மக்கள் வழக்கிலிருக்கும் இலக்கியங்களைத் தொகுப்பதானது, அவற்றை வழங்கும் மக்களின் வாழ்க்கை முறையினைப் புரிந்து கொள்வதற்கு உதவுவதுடன் மேலும் அவர்களது வாழ்க்கையினை உயர்த்துவதற்கு உதவும் என்னும் தொலைநோக்கு உடையதாகும்.

**பதிப்பில் கையாண்ட நெறிமுறைகள்**

இக்கதைப் பாடலானது கதை கூறியவர் சொல்லிய முறையிலேயே பதிப்பிக்கப் பட்டுள்ளது. அவர் சொல்லிய வடிவத்தில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அவ்வகையில் ஒரு சொல் வெவ்வேறிடங்களில் மாற்றி எழதப்படவும் வாய்ப்புண்டு. சான்றாகச் சிறுகொடி நாடு, சிறுகுடி நாடு என்னும் இரண்டு வடிவத்தையும் இக்கதைப் பாடலில் காணலாம். பதிப்பு நெறிமுறை மிகவும் கவனமாகப் பின்பற்றப் பட்டுள்ளமைக்கு இஃது ஒரு சான்றாகும்.

பதிப்பின் இறுதியில் கதைப் பாடலில் இடம் பெற்றுள்ள இன்றியமையாத சொற்களின் பொருளினை விளக்கும் வகையில் சொற்பொருள் அகரநிரல் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. கதைப் பாடலைச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு இவ்வகர நிரல் பெரிதும் உதவியாக அமையும்.

நாட்டுப்புற இலக்கிய உலகில் குறிப்பிடத்தகுந்த இக்கதைப் பாடலை, நூலாக வெளியிட்டுதவிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டவன் ஆவேன். நிறுவனத்தினர் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கதைப் பாடலைக் கூறிய திரு. சண்முகம் அவர்களையும் புத்தேந்தல் கிராம மக்களையும் நான் நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்கிறேன்.

கும்பகோணம்,
11.4.98.

டாக்டர் அ.ம. சத்தியமூர்த்தி
தமிழ் முதுநிலை விரிவுரையாளர்
அரசு ஆடவர் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்-612 001.

# மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல்

## காப்பு

சுவாமீஇ முந்திமுந்தி நாயகனே முருகா சரஸ்பதியே
கந்தனுக்கு முன்புறந்த காட்சீஇ கணபதியே
ஆனடி புள்ளயாரே சாமி அரசடி விநாயகனே
வேலடி புள்ளயாரே சாமி விக்கிநியே ஈஸ்வரனே
குளத்தடி புள்ளயாரே சாமி குருவே துணையிருய்யா.

பாடறியேன் படுப்பறியேன் பள்ளிக்கூடம் நானறியேன்
ஏடு புடிச்சறியேன் சாமி எழுத்துவக நானறியேன்
எட்டெழுத்தா ஓரெழுத்தா எழுதவேணும் என் நாவில்
பத்தெழுத்தா ஓரெழுத்தா சுவாமி பதிக்க வேணும் என்நாவில்.

குறுக்கே முறியாமல் சுவாமி குரலவந்து கற்றாமல்
நடுவே முறியாமல் சுவாமி நாவேவந்து கற்றாமல்
தோட்டம் துறந்திலங்கே சுவாமி தொண்ணி லெச்சம்பூவெடுக்க
வாடீஇ துறந்திலங்கே சுவாமி வரணலெச்சம் பூவெடுக்க

கையாலே பூவெடுத்தா மருதெ அழகருக்குக் காம்பழுகிப் போகுமுன்னு
விரலாலே பூவெடுத்தா வெம்பிவிடும் என்று சொல்லி
தங்கச் சுரட்டிகொண்டு சுவாமி தந்துரமா மலரெடுத்து
பொன்னூஉ சுரட்டிகொண்டு சுவாமி பொய்ப்ப மலரெடுத்து

காயாத வாழெ இங்கே சுவாமி கருவாழெ நாருரித்து
ஈனாத வாழெ இங்கே சுவாமி இளவாழெ நாருரித்து
கட்டுனேன் அரும்புமாலெ மருதெ அழகருக்கு

கழுத்தும் திரண்டோட தொடுத்தேன் தொடுமாலெ
மருதெ அழகருக்கத் தோளும் திரண்டோட மிச்சம் மலருரித்து
சாத்துனேன் திருவடியே வாழவந்த அம்மனுக்கே

செஞ்சி அழகரய்யா தென்மருதெ சொக்கரய்யா
வஞ்சி அழகரய்யா சுவாமி வடமருதெ தேசிகரே
புறக்கி முளகுவரும் சுவாமி புறமலையும் தீர்த்தம்வரும்
அள்ளி முளகுவரும் சுவாமி அழகுமலெ தீர்த்தம்வரும்.

இட்டகத நான்பாட இடதொருநாள் காத்துருந்தேன்
பட்டகத நான்பாட நான் பலதொருநாள் காத்துருந்தேன்

ஆருகத மறந்தாலும் மன்னவன் முதற்சோனகத
நான் ஒரு போதும் மறந்த தில்லெ.
முதற்சோனதானும் வெள்ளலூரு நாட்ட ஆண்டுமுகஇருந்தாரே
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா
இருபேரும் வெள்ளாலூரு நாட்ட ஆண்டு முக இருந்தார்கள்.

அங்கே,
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் அந்த முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் ஏழு தலமக்காரனும்
சிறுகுடி நாட்டயும் ஆண்டு முக இருந்தார்கள்.

அப்போதுதானும்,
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்டெ
ஏழு எருக்கம்பட்டி மேலவளவு கீழ வளவு
ஆத்தூரு அருகுவேர் கார்மோகக் கோனாரும்
கார்மேகக் கோனாரு பெண்சாதியும்
அவுகளும் ஆண்டுமிக இருக்கும்போது
கார்மேகக் கோனாருக்குக் குழந்தை கெடயாது.

அப்ப, கார்மேகக் கோனாரு வீட்டுக்கு
நல்ல மனுவெர்கள் பெரிய மனுவெர்கள் வரப்போவ இருக்கும்போது
பச்ச தண்ணிய மோண்டு குடிக்கவேண்டிய நீதியாக இருந்துதங்கே.

அப்ப, கார்மேகக் கோனாரு பெஞ்சாதி
எண்ணி நினைத்தாளோ எண்ணமற்ற சிந்தையிலே
பார்த்து நினைத்தாளோ பலகோடி யோசினயெ
ஆரெ நினைத்தாளோ அளவற்ற சிந்தையிலே
நம் வீட்டுக்கு நல்ல மனுவெர்கள் பெரிய மனுவெர்கள் வரப்போக இருக்கிறார்கள்.
நம்ம பச்ச தண்ணிய மோண்டு குடிக்க வேண்டிய நீதியா இருக்குதின்னு
அங்கே,
முழங்காலு சேலகட்டி முக்காத எருராட்டி பொறுக்கிலங்கே
கரண்டக்கால் சேலகட்டி காதவழி எருராட்டி பொறுக்கிவந்து
பதினெட்டு ரூபாய ரொக்கமும் வைத்திலங்கே
கார்மேகக் கோனாரெடம் கொடுத்து- அப்போது
நாழி ஏழுக்குப் பதக்குப்பால் கறக்கக்கூடிய
ஒரு மாடு ஒன்னு வாங்கி வருமய்யான்னு சொல்லி
கட்டுச்சோறு கட்டிலங்கே குடுத்து அனுப்பிச்சு வச்சாளே.
அப்ப,
அனுப்பி வய்க்கம்போதுதானே கார்மேகக் கோனாரு
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்டே
ஏழு எருக்கம்பட்டி மேலவளவு கீழவளவு

இத்தாதி தெருக்களும் கடந்திலங்கே - அப்ப
ஆன அடயும்வனம் அன்னப்பச்சி தூங்கும்வனம்
சிங்க ளடயும்வனம் சிறுபுலி தூங்கும்வனம்
கரடீ படுத்திருக்கும் கழுகுமல தந்தாண்டி-அங்கே
ஓநா படுத்திருக்கும் ஒழுங்குமல தாந்தாண்டி
பில்லா படுத்திருக்கும் பில்லமல தாங்கடந்து-அப்ப
ஆனமலயுந் தாண்டி அழகர்கோவில் மலயுந்தாண்டி
மொட்டமலயும் முதமலயும் போயிநல்லெ சேரும்போது
அங்கெ ரெண்டுநல்லெ இளவட்டம்பேர்
அங்கே ஒன்னு சொன்னது போல
அங்கெஒன்னு நூறுநல்லெ மாடுகளும் மேய்த்துமிக இருந்தார்கள்.

அடவர்களெடம் போயி,
அண்ணன்மாரே! இந்த மாட்டுல
நாழி ஏழுக்குப் பதக்குப்பால் கறக்கக்கூடிய
ஒருமாடு ஒன்னு எனக்கு வேணும்
பதினெட்டு ரூபாயும் ரொக்கமும் தாரமுன்னு சொல்லி
கார்மேகக் கோனாரு மாட்டெயும் வாங்கிலங்கே - அப்ப
ஆனமலயுந் தாண்டி அழகர்கோவில் மலயுந்தாண்டி
மொட்டெமலயுந் தாண்டி இத்தாதி மலய்களுந் தாண்டிலங்கே
ஆன அடயும்வனம் அன்னபச்சி தூங்குவனம்-அந்த
சிங்க ளடயும் சிறுபுலி தூங்கும்வனம்
இத்தாதி வனமுந் தாண்டி
எருக்களம்பட்டி ஊரணியே அருகாம வரய்யில-அங்கே
குத்துக்கொம்புல மயிலப்பசு கன்டும் போட்டுதங்கே.

அப்போது,
கன்டையும் தானுமங்கே அக்கி உலத்திலங்கே -அப்ப
கன்டையும் தூக்கிலங்கே - அப்ப
மாட்டையும் தானுமங்கே புடிச்சித்தானும்
கார்மேகக் கோனாரு வீடு அரண்மனய்க்கி மின்பாகக் கொண்டாந்து

கட்டிலங்கே
அங்கே மூனுநாள் மூனுபொழுது
கார்மேகக் கோனாரு கன்டு அடய்ந்திலங்கே
மூனாவது நாளுந்தானும் கார்மேகக் கோனாரு
அப்போது
பாலு கறந்திலங்கே - அங்கே
பால்குடிக்கும் பேர்வழிக்கி பாலு குடுத்தாரு
மோர்குடிக்கும் பேர்வழிக்கி மோரும் குடுத்தார்கள்
இந்தப் பிரகாரமா கார்மேகக் கோனாரு வீட்டிலே
பிரமாதமா விளங்கிமுக வருகுதங்கே.

அப்போது
வெள்ளலூரு நாட்டுலெசேர்ந்து முதற்சோன தானுமங்கே
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்ட
ஏழுளருக்கம்பட்டி மேலவளவு கீழவளவு-அங்கே
பதினெட்டுக் கிராமமும் பாங்குடனே சுத்திலங்கே.

அப்ப
ஆத்தூரு அருகிலே வரும்போது
கார்மேகக் கோனாரு கார்மேகக் கோனாரு பெஞ்சாதியும்
வெள்ளலூர ரெசமான் வந்துட்டார் களென்னு சொல்லி,

அப்போது
பாலு கறந்திலங்கே பாலு குடுத்தார்கள்-அப்போது
முதற்சோன பாலுங் குடிக்கவில்ல
கீழப்போட்டதல ஏறிட்டுப் பாராமல்
அரண்மன இருந்துட்டுப் புறப்பட்டு வெள்ளலூரு நாடு போயி

அங்கே அரண்மனயே மேலேறி
அப்போது தானுமங்கே
சாஞ்சிமூஞ்ச கட்டிலிலே சாய்ந்து மிக உக்கார்ந்து
அக்கையடி அக்கெ!
நம்மளுடய கார்மேகக் கோனாரு வீட்டுக்கு மின்பாகத் தானும்
ஒரு குத்துக்கம்புல மயிலப்பசு கன்டுகும் மாடுமாகக்
கட்டிமிக நிக்கிதக்கா
அந்த மாட்ட கொண்டாந்து நம்ப வெள்ளலூரு
அரண்மனய்க்கு முன்பாகக் கட்டினால்
லெச்சுமிகூட விளையாடுமக்கா ளென்றுமங்கே தானுமங்கே
சாஞ்சமூஞ்ச கட்டிலே சாஞ்சி படுத்திலங்கே
அந்த மாட்ட கொண்டாந்து நம்ப அரண்மனய்க்கி முன்பாக கட்டுனாத்தான்-
நான்
பல்லுவெலக்கி சாப்புடுவெமுனு படுத்து இருந்தாரே.

அப்ப,
அக்கா கருத்தவனம் அருமவுள்ள இளங்குயிலாள்-அப்போது
முத்தத்து வெயிலு முகத்தி லடியாமல்
அந்தபுறமும் ராணிதல வாசலுமாய் இருந்தது தானுமங்கே
அப்போது
உள்ளங்கையி சாத்திரத்த ஊடுருகத் தான்பார்த்தாள்
வல்லங்கையி சாத்திரத்த போட்டெறிந்து தான்பார்த்து- அங்கே
புறங்கையி சாத்திரத்த போகவர தான்பார்த்து
அப்போது
ஆயிரரூபா பெற்றஅருகுவெள்ள லேஞ்சி ஒன்னு
எந்நூறு ரூபாபெற்ற இளந்துயிலு ஒன்னெடுத்து
இத்தனையும் கையிலெ தானெடுத்து

வண்ணச் செருப்பெடுத்து வலதுகால் தும்புறுக்கி
ஈயச் செருப்பெடுத்து இடவங்கால் தும்புறுக்கி
புறப்பட்டார் ஆத்தூ ரு அருகிலேதானே - அப்ப
புறப்பட்டு போனவுடனே தானுமங்கே
அப்போது கார்மேகக் கோனாரு
கார்மேகக் கோனாரு பெஞ்சாதிதானும் எதிராக வந்திலங்கே
முத்தத்து வெயிலு முகத்தி லடியாமல்
அந்தப்புறமும் ராணிதல வாசலுமாய் இருந்த கருத்தவனம்
வரவேண்டிய நாயங்க ளென்றவிதம் என்று சொல்லித் தானுமங்கே
இடதுபுறம் வந்திலங்கே வலதுபுற நமஸ்காரம் செய்தார்கள்
வலதுபுறம் வந்திலங்கே இடதுபுற நமஸ்காரஞ் செய்தொடனே

அப்போது அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலாவும்
அப்போது கார்மேகக் கோனாரு மச்சான் முறமகொண்டு
கும்புடுறென் மச்சினரென்னு சொல்லி கைய எடுத்தார்கள்
கார்மேகக் கோனாரு பெண்சாதிய அக்காமுறம கொண்டு
கும்புடுறமென்னு கைய எடுத்தொடனே

மகராசியா இரம்மா, நீ வரவேண்டிய காரணங்கள்
எந்தவிதம் என்றுமங்கே கேட்டவுடனேதானும்-அப்போது
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலாவும் அப்போது சொல்வாள்
பதினெட்டு கிராமமும் பாங்குடனே தம்பி சுத்திவரும்போது
நம்ப வீட்டுக்கு மின்பாக வந்து பார்க்கும்போது
இந்தக் குத்துக்கம்புல மயிலப்பசு பாத்துட்டு வந்துதானும்
அந்த மாட்டக் கொண்டாந்து வெள்ளலூரு அரண்மணய்க்கி முன்பாக காட்டுனாத்தான்
நான் பல்லுவிலக்கிச் சாப்புடுவேன்னு படுத்து இருக்கானெ
என்றுமங்கே சொன்னொடனே-அப்ப
கார்மேகக் கோனாரு சொல்லுவாரு
அம்மம்மா! உன் வீட்டுல உள்ள ஒரு வேலக்காரனஅனுப்பியிருந்தியானாக்கும்
இந்த மாட்டயும் கன்டயும் நான் ஓட்டிமிக வந்திருப்பெனே
நீ எதற்காமா வந்தாயின்னு சொல்லிவிட்டு - அப்ப
கார்மேகக் கோனாரு அந்தக் குத்துக்கம்புல
மயிலப் பசுவையும் அவுத்து கன்டையும் அவுத்து
ஓட்டிமிக வரும்போது
கார்மேகக் கோனாரு பெஞ்சாதிக்கி நல்லெண்ணங் கெடயாது
கன்டையும் புடிச்சிகிட்டு மாட்டயும் ஓட்டிமுக விட்டாளே.

அப்ப விட்டவுடனேதானும் அப்போது தானுமங்கே
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலாவும்
வெள்ளலூ ரு நாடு அரண்மனையே கொண்டுபோயி
அப்போது மாட்டயும் கட்டிலங்கே

அப்ப கட்டிமிக வைத்திட்டு தானுமங்கே
இருக்கும்போது தானும் அப்போது தானும்
ஒரு நாழிகெ சென்டுது ரெண்டுநாழிகெ சென்டுது
மாட்டுக்கு முதுகிலே பாலேறித் தானும்
அப்போது கவுத்தவும் அத்துகிட்டு
கல்லால கோட்டய கதிச்சோடி போயிலங்கே
இன்னமே இந்தப்பய வீட்டுக்கா நம்ப போறதின்னு சொல்லி-அப்ப
ஆனமல அழகர்கோவில் மலய்க்கே-அந்த
மாட்டோட மாடுபோயி நல்லா சேர்ந்துமிக போயிருச்சேள.

அப்ப,
விடிஞ்சவுடனேதானும் முதற்சோன எந்திரிச்சி மாட்டெயும் பாத்தாரு
மாட்டயும் கவுத்த அத்துகிட்டுப் போயிருந்திது-அப்போது
புறப்பட்டுதானும் ஆத்தூரு அருகிலே போயிலங்கே
கார்மேகக் கோனாரெடம்
மாடு அத்துகிட்டு வந்துரிச்சய்யா மாடு வந்துதான்னு கேக்கும்போது

இங்கே மாடு வரக் கிடையாது- அப்ப
மாடு வாங்குன எடத்துக்குதான் மாடு போயிருக்கும்
போயி மாட்டெமிக ஓட்டி வாய்யன்னு சொல்லிட்டு
முதற்சோன வெள்ளளூருநாடு திலும்பி முக வந்துட்டாரு-அப்ப

கார்மேகக் கோனாரு மறுபடியும் தானுமங்கே-அப்போது
தும்பப்பட்டி துளசிபட்டி மாம்பட்டி மல்லாகொட்ட
ஏழு எருக்கம்பட்டி மேலவளவு கீழவளவு
இத்தன வளவுகளும் தாண்டிலங்கே-அப்ப
தீயோட தீயெரியும் தீயவனம் தாந்தாண்டி
மூங்கியோட மூங்கியெரியும் முதவனமும் தாந்தாண்டி
ஆன அடயும்வனம் அன்னப்பச்சி தூங்குவனம்
சிங்க ளடயும்வனம் சிறுபுலி தூங்குவனம்
கரடி படுத்திருக்கும் கழுகுமல தாந்தாண்டி-அங்கே
பில்லா படுத்திருக்கும் பில்லமல தாந்தாண்டி
ஓநா படுத்திருக்கும் ஒழுங்குமல தாந்தாண்டி
ஆன மலயுந்தாண்டி அழகர்கோவில் மலயுந்தாண்டி-அந்த
மொட்டமலயும் முதமலயும் போயிநல்ல சேர்ந்திலங்கே-அந்த
ரெண்டுநல்ல இளவட்டத் தெடத்திலே போயி
ஐயய்யா மாடு தவர்தலயா வந்திரிச்சி
மாடு வந்துதான்னு கேட்கும்போது-அப்ப
அந்த ரெண்டு நல்ல இளவட்டமும்
இங்கே மாடுவரக் கிடயாதய்யா
என்றுமங்கே சொன்னார்கள் அப்போதும்.

அப்ப சொன்னவுடனேதானும்-அந்த
ரெண்டுநல்ல இளவட்டமும் சொன்னவுடனே

கார்மேகக் கோனாரு சொல்லுவாரு-நான்
பதினெட்டு ரூவாயும் ரொக்கங் குடுத்து வாங்குனமாடு
இந்த மாட்டுக்கு முன்னால நிக்கிது
மாட்டெ ஓட்டிமிக விடுமய்யா ளென்றுமங்கே இருக்கும்போது
அப்படியினு சொன்னாக்கா நீகவுறு போட்டு புடிச்சியானாக்கும்
அந்த மாட்டெ நாங்க ஓட்டிமிக விடுறமுன்னு சொன்னொடனே
அப்ப,
கார்மேகக் கோனாரு போயி-அந்த
நூறு நல்ல மாட்டுக்கு உள்ளபோயி நின்டு-அப்ப அந்த
பதினெட்டு ரூபாயும் ரொக்கங்குடுத்து வாங்குன மாட்டுலியே
கவுறுபோட்டு புடிச்சவுடனே-அப்போது
அவர்கள் இருபேரும் சொல்லுவார்களே
இந்த மாட்டக் கொண்டுபோயி நாங்க
கணேசர் கோவிலுக்கு முன்பாகக் கட்டுறோம்-நான்
பதினெட்டு ரூபாயும் ரொக்கங்குடுத்து வாங்குன மாடுன்னு
அவுத்தியானாக்கா
நாங்க இந்த நூறுநல்ல மாட்டயும்
உனக்குத் தெத்தம் பண்ணுறமுன்னு சொன்னானே அப்போதும்.

அப்ப சொன்னவுடனேதானும்-அப்போது
கார்மேகக் கோனாரு சொல்லுவாரு-அப்போது
நம்ம வாணாமுன்னு சொன்னா வழுக்கியிடும்
இந்த ஊரு கிராமணிதடம் போயி நம்ப ஏறுபத்தரம் கையெழுதித்தான்
அதுக்குமேலே சத்தியத்துக்குப் போகவேணுமுன்னு சொல்லி
அந்தவூரு கிராமணிதடம் போயி இருபேரும்தானும்
ஏறுபத்தரம் எழுதி லங்கே-அப்ப
ரெண்டுநல்ல இளவட்டமும் கொண்டாந்து
கணேசர் கோவிலுக்கு மின்பாக மாட்டயும் கட்டிலங்கே-அப்போது
கார்மேகக் கோனாரு குளிச்சி முழுகிலங்கே
சூடத்தக் கொளுத்திவச்சி சூடத்தத் தானுமங்கே
நான் பதினெட்டு ரூபாயும் ரொக்கங்குடுத்து வாங்குன மாடுன்னு
சொல்லிலங்கே
சூடத்த அமத்தித்தானும் மாட்டயும் அவுத்தாரே-அப்போது
அந்த ரெண்டுநல்ல இளவட்டமும் அந்த நூறுநல்ல மாட்டயும்
அவரெடத்திலேயே ஒப்படச்சி அவருடைய அரண்மனய்க்கே
அவர்கள் போயிநல்ல சேர்ந்தார்கள்.

அப்ப சேர்ந்தவுடனே தானுமங்கே-கார்மேகக் கோனாரு
ஆனமலயுந் தாண்டி அழகர்கோவில் மலயுந்தாண்டி
மொட்டமலயுந் தாண்டி மொதமலயுந் தாந்தாண்டி-அப்போது தானுமங்கே
சிங்க ளடயும்வனம் சிறுபுலி தூங்குவனம்
கரடி படுத்திருக்கும் கழுகுமல தாந்தாண்டி
இத்தாதி வனமுந்தாண்டி மாட்டயும் ஓட்டிமுக வந்திலங்கே
அன்னக்கிஇரவு ஆத்தூரு அருகாமெ மாடு அடஞ்சிது அங்கெ

விடிஞ்சவுடனே தானும் அங்கே வெள்ளலூரு நாட்டுக்குத் தெரிஞ்சி
மாடு வந்துருச்சின்னு சொல்லிலங்கே-அப்போது
முதற்சோன புறப்பட்டு வந்திலங்கே-அப்போது
எனக்குக் குடுத்தமாட்ட ஓட்டிமிக உடுங்கய்யா ளென்றுமங்கே
கேட்டவுடனே

அப்ப கார்மேகக் கோனாரு சொல்லுவாரு

அந்தமாடு உங்களுக்கு ஓட்டிவிட முடியாது
இந்த நூறுநல்ல மாட்டிலயும்
நமக்கு ஆளுக்கு அம்பது மாடாக ஓட்டிக்கிருவமுன்னு
சொல்லிலங்கே
அப்போது அந்த நூறு நல்ல மாட்டிலயும்
ஆளுக்கு அம்பது மாடாக பாவுகம்பண்ணி ஓட்டிமிக விட்டாரே
அப்ப,
கார் மேகக் கோனாரு பெஞ்சாதி சொல்லுவா அப்போது
இந்த வெள்ளலூரு நாட்டுக்குப் போனமாடு
மூனு வருசத்துக் குள்ளாற வாலுங்குறத்துக் கோட
கன்டும் இருக்கக்கூடாதுன்னு சொல்லி
அப்போது பத்திமிக விட்டாளே.

அதேபிரகாரம் வெள்ளலூரு நாட்டுக்குப் போனமாடு
மூனு வருசத்துக் குள்ளாக வாலுங்குறத்துக்கு கன்டும் கிடயாது
கார்மேகக் கோனாரு வீட்டிலே நின்ட அம்பது மாடும்
நூறுநல்ல மாடாக உண்டாகி லங்கே-அப்ப
கன்டும் மாடுமாக இருந்தவுடனே
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா
மறுபடியும் வந்திலங்கே
அப்போது கார்மேகக் கோனாரிடம்
இந்த நூறுநல்ல மாட்டிலயும் இன்னமும் எனக்குப் பாவுகம்
இருக்குதய்யா
மாடு ஓட்டி விடுமய்யா ளென்றுமங்கே கேட்டொடனே

அப்போது சொல்லுவாளே,
கார்மேகக் கோனாரு பெண்டாட்டிக்கி
கண்ணு சிவந்திலங்கே கடுங்கோபமாகி லங்கே
மூக்குச் சிவந்திலங்கே முன்கோபமாகி லங்கே
கொங்கமுழி கண்க ரெண்டும் கொழுந்துவிட் டெரியுதங்கே
நீலமுழி கண்க ரெண்டும் நெருப்புத்தன லாடுங்கே
வண்ணமுழி கண்க ரெண்டும் வாட்டிப்போ ராடுதங்கே

அப்போது சொல்லுவாளே,
என்னுடைய மாட்டிலே உனக்குப் பாவுகம் இருக்குதுன்னு
சொல்லுறதுனாலே-அப்ப
ஒன்னுடைய காணி பூமியிலேயும் எனக்கும் பாவுகம் இருக்குதுன்னு
சொன்னாளே அப்போது.

சொன்னவுடனே தானும்
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா
உள்ளங்கையி சாத்திரத்த ஊடுருகத் தான்பாத்து
வல்லங்கையி சாத்திரத்த போட்டறிந்து தான்பாத்து-அங்கே
புறங்கையி சாத்திரத்த போகவரத் தான்பாத்து-அப்போது
இவுக இருபேருக்கும் புள்ள கிடையாது.
பின்னாலே அதுக்கு வாரிசு கிடையாது
அதனாலே பின்னாலே நமக்குக்
காணிக்காரிக்கிக் காணிவந்து சேரப்போவுதுன்னு சொல்லிலங்கே
அப்போது அந்தத் தும்பட்டி கிராமத்தையே
செப்புப் பட்டயம் எழுதிமிகக் குடுத்தார்கள்.

அப்ப குடுத்தவுடனேதானும்
கார்மேகக் கோனரும் கார்மேகக் கோனாரு பெஞ்சாதியும்
இருபேர்களுந் தானும் இந்தக் கிராமமே எங்களுக்குப் போதுமாய்
இன்னமேநீ மாட்டுக்காரி மாட்ட ஓட்டிமிக போன்னு சொல்லிலங்கே
நூறுநல்ல மாட்டயும் அப்படியே ஓட்டிமிக விட்டார்கள்.

வெள்ளலூருநாடு கொண்டுபோயி அன்னக்கி இரவு அடஞ்சியிருந்து
விடிஞ்சவுடனேதானும் முதற்சோன சொல்லுவாரு
அக்கையடி அக்கெ! இன்னமே இந்த நாட்டிலே
நம்மமாடு நிக்கக் கூடாது
ஆனமல அழகர்கோயில் மலய்க்குப் போயிநல்ல சேரவேணும்
என்று சொன்னவுடனேதானும்-அப்போது
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா

ஆக்குனா சோறுகள் ஆவாரம்பூச் செய்யலிலே
பொங்குனா சோறுகள் புளியம்பூச் செய்யலிலே
பதினெட்டு வகைக்கறியும் அங்கே பாங்குடனே தான்சமைத்து
தங்கநல்ல கும்பாவ தாங்கித் தனிவிளக்கி
வெள்ளிநல்ல கும்பாவ விரும்பிநின்று தான்விளக்கி-தம்பிக்கி
பன்னீரு சொம்புல வெந்நீரு தான்கலந்து-தம்பிக்கி
சாதம் படைத்தாளே
சாப்பிட்டீர் அப்பாநீர் சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளப்பாறீர் இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு
வெள்ளலூரு வெள்ளப்பாக்க விதம் போல சீவிலங்கே-அந்தக்
கீழூரு வெத்திலய கிழிச்சி மடிச்சிலங்கே
வேலூரு சுண்ணாம்ப மெதுவாலே தான்தடவி
திண்டு இறக்குனாரு திகட்டுதில காரக்குடி கொழுந்து வெத்லேய.

அப்போது தானுமங்கே
புளிசெம்புலே கவுறு கையிலேயும் தானெடுத்து
தங்கத்தினால் பில்லாங்குழ லெடுத்து கையிலேயும் தான்புடிச்சி

தங்கப்பார் கட்டையைக் காலுலயும் தான்மாட்டி-அப்போது
நூறுநல்ல மாட்டயும் அடிச்சிமிக ஓட்டுனாரே.

தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்ட
ஏழு எருக்கம்பட்டி மேலவளவு கீழவளவு
ஆத்தூரு அருகுவேர் தாண்டிலங்கே-அங்கே
தீயோட தீயெரியும் தீயவனம் தாந்தாண்டி
மூங்கியோட மூங்கியெரியும் மொதவனமும் தாந்தாண்டி
ஆன அடயும்வனம் அன்னப்பச்சி தூங்கும்வனம்
சிங்க ளடயும்வனம் சிறுபுலி தூங்கும்வனம்
கரடி படுத்திருக்கும் கழுகுமல தாந்தாண்டி-அங்கே
பில்லா படுத்திருக்கும் பில்லமல தாந்தாண்டி
ஓநா படுத்திருக்கும் ஒழுங்குமல தாந்தாண்டி
ஆன மலயுந்தாண்டீ அழகர்கோயில் மலயுந்தாண்டீ
மொட்டெமலயும் முதமலயும் போயிநல்லெ சேர்ந்திலங்கே-அப்ப
மாட்டெயும் ஓட்டிமிக கொண்டுபோயி விட்டுபிட்டு தானுமங்கே-
அப்போதுதானும்

கன்டு அடைந்திலங்கே பாலூரகறந்து
முதற்சோன சாப்பிட்டுத் தானுமங்கே-அப்ப
மாட்டெமிக விலக்கிமிக விட்டிலங்கெ

என்னெப் படச்சவனெ என்தகப்பா ஈஸ்பரனே-நான்
உத்தமீ பத்தினியாள் ஒருசொல்லு பாதகத்தி
வவுத்திலே புறந்திருந்தே னானாக்கும்-என்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரனே
உனக்கு அடியேன் அடித்தேரு ஓட்டி வப்பேன்
என்னுடைய மாடு இந்த நாட்டிலே மேஞ்சி அடையவேணும்
நான் வருடத்துக்கு இருமுறதான்-மாட்டெ
பார்வையிட வருவேன்னு சொல்லிலங்கே
மாட்டெ கலச்சிமிக விட்டுட்டுத்தானும்-தங்கப்பார் கட்டெயெ
பொந்துப் புளிமயமரம் தூரடியே தானுமங்கே
கழட்டிமிக வச்சிலங்கே-அப்போது
தங்கத்தினால் பில்லாங்குழலயும் சாத்திலங்கே
புளிசம்பூவுல கவுறும் தூரடியே வைத்திலங்கே-முதற்சோன புறப்பட்டு
வெள்ளளூரு நாடு திலும்பிமிக வரும்போது-அங்கே
எருக்காளம்பட்டி ஊரணியிலே முதற்சோன குளிச்சி முழுகிலங்கே
அறுபதுபாகம் கூந்தலழகையும் அப்போதுதானும் சிக்கொடச்சி
தானுமங்கே

வெள்ளளூரு நாடு புறப்பட்டு வரும்போது
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா-அங்கே
மேவீடு மெத்தமேல நின்டிலங்கே
தம்பிபோன வழிபக்கம் பார்க்கும்போது
தம்பி வாறது அவர்கண்ணுக்குத் தோத்தவுடனே தானுமங்கே

அப்போதுதானும்
அரண்மனையைவிட்டுக் கீழ இறங்கிவந்து
ஈக்கஞ்சம்பா நெல்லெடுத்துத் தீட்டி மறுப்பொறுக்கி
ஆக்குனா சோறுகள் ஆவாரம் பிச்சைகளிலே
பொங்குனா சோறு புளியம் பிச்சைகளிலே-அப்போது
பதினெட்டு வகைக்கறியும் பாங்குடனே தான்சமைத்து
தம்பீயும் வந்தவுடனே தானுமங்கே
பன்னீரு சொம்புலேயும் வெந்நீரு தான்கலந்து
தம்பிக்கிச் சாதம் படைத்தாளே-அப்போது முதற்சோன
சாப்பிட்டீர் அப்பாநீர் சையோத்தி அப்பமிட்டு
இருந்து இளப்பாறீர் இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு
வெள்ளலூரு வெள்ளப் பாக்க விதம்போல சீவிலங்கே
கீழூரு வெத்திலய கிழிச்சி மடிச்சிலங்கே
வேலூரு சுண்ணாம்ப மெதுவா மேதடவி
தின்டு இறக்கினாரு திகட்டுதல காரக்குடி கொழுந்துவெத்ல

அப்போது
சாஞ்சமூஞ்ச கட்டுலிலே சாஞ்சீ படுத்திலங்கே
அக்கையடி அக்கெ!-நான்
சிறுகுடி நாட்டுக்குப் பொண்ணுகள் கேக்கப் போறேன்-இனக்கு
வாழ்த்தீ வரங்குடுக்கா வலதுபுறம் கைகுடக்கா
போத்தீ வரங்குடுக்கா இனக்குப் போகவர கைகுடக்கா
என்றுமங்கே கேட்டாரே அப்போதும்.

அப்ப கேட்டவுடனே தானுமங்கே
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலாவும்
அடடா தம்பீ முதற்சோன
ஆவணீ மாசமுடா சூனிய மாசமுடா
அடுத்தமாசம் புறக்கட்டும் நீபொண்ணுகள் கேக்கப் போகலாம் அப்பா
என்றுமங்கே சொன்னவுடனே-இந்த முதற்சோனைக்கி

ஆவணீ மாசமும் சூனிய மாசமும் எதிர்பார்த்தா நிக்கிது-இனக்கு
வாழ்த்தீ வரங்கொடக்கா வலதுபுறம் கைகுடக்கா
போத்தீ வரங்குடக்கா இனக்குப் போகவர கைகுடக்கா
என்றுமங்கே கேட்டவுடனே-இவன்
சொன்னபுடி கேக்கமாட்டானென்று சொல்லிலங்கே

அப்போது அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா
ஒட்டு கடுக்கனெ ஒழுகையாகத் தான்பாத்து
வண்டீ கடுக்கனெ வருசையாகத் தான்பாத்து
அஞ்சீ விரலுமங்கே ஐம்பொன்னிலே கணையாழி
பத்தூ விரலுமங்கே பைம்பொன்னிலே கணையாழி
இடுப்புக்கு ஏழுசுத்து அரணா
கழுத்துக்கு தங்கநல்ல சூடா
தெக்குத்தி சோமானங்கே தென்மடலா வெள்ளவெட்டு

வடக்கித்தி சோமானங்கே வடமடலா வெள்ளவெட்டு-இத்தனையும்
தான்போட்டு
ஏழு மலயாளம் பொண்டுக நாச்சீயா
பூச்சி மட்டெயில குருதாயும் அவுத்திலங்கே-அப்போது
முதற்சோன ஏறியே உக்காந்தவுடனே-தம்பிக்கி
வாழ்த்தீ வரங்குடுத்தா தம்பிக்கி வலதுபுறங் கைகுடுத்தாள்
போத்தீ வரங்குடுத்தா தம்பிக்கிப் போகவரக் கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும் முதச்சோன தங்கமுகமாக வரவேணுமுனு
அனுப்பிச்சிவச்சாளே.

மூனேயமுக்கா நாழிகளுக் குள்ளாக
கூட்டப்புளி ஊரணியும் மேகரப்புளி ஈறாகத்தானும்
போயிநல்லெ சேர்ந்திலங்கே
குருதயவிட்டுக் கீழே இறங்கிலங்கே-குருதயத்தானும் அப்போது
புளியமரத் தூரணியே கட்டிமிக வைத்துட்டு முதச்சோன
கூட்டப்புளி ஊரணிய இறங்கிலங்கே-அப்போது
தண்ணீரு அள்ளிலங்கே முகத்தக் கழுவிட்டுத்தானும் - அப்போது
வந்துதானும் நடுப்புளியில குருதஓரமாக உக்காந்து இருக்காரே
அப்போதும்.

அப்ப உக்காந்து இருக்கும்போது தானுமங்கே - அங்கே
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் ஏழுதலமக்காரன் பெஞ்சாதியும்
செப்பெடுத்து இடையிடுக்கி வாறாளே
கூட்டப்புளி ஊரணிக்கி தண்ணீரு அள்ளவும்

அப்போது
வந்து தானுமங்கே கீகர துறயிலயும் கொண்டாந்து
செப்புக் குடத்த போட்டுட்டு மேறுக்கே ஏறிட்டுப் பாக்கும் போது
முதச்சோன குருதயும் கட்டியும் நிக்கிதங்கே-அப்ப
முதச்சோன உக்காந்து இருந்தவுடனே தானும்
என்னடி தங்கச்சிமார்களா! முதச்சோனவந்து குருதயும் நிக்கிது
முதச்சோன உக்காந்து இருக்கானே
வாங்கடீ போய்பார்த்து வருவோமுனு
ஏழுதலமக்காரன் பெஞ்சாதியும் புறப்பட்டு போனொடனே

மைத்துனன்மாரு பெஞ்சாதிகள் வந்துட்டாங்கன்னு
இடதுபுறம் வந்திலங்கே வலதுபுறம் நமஸ்காரம் செய்தாரே
வலதுபுறம் வந்திலங்கே இடதுபுறம் நமஸ்காரம் செய்தவுடனே
மகராசனா இரப்பா முதச்சோன! நீ வந்ததென்ன
இந்தமாதிரி வந்து இருக்க வேண்டிய காரணங்கள் எந்தவிதம்
என்றுமங்கே கேட்டொடனே

அப்போது முதச்சோன சொல்லுவாரே
அக்கையடி அக்கெ! எந்தனிடத்திலே
காணிபூமி கனத்த பணங்காசி நகைகள் கெடயாதுனு
உந்தனிடம் வல்லெய்யக்கா
ஆடுமாடு சொத்துசுகங்கள் இல்லையினு உந்தனிடம் வல்லெய்யக்கா
ஏழுபேரோடு பொறந்த எழுவக்கா நாச்சியாள - எனக்குக்
கலியாதணம் பண்ணிக் குடுக்க வேணும்
அதற்காகக் கேக்கவும் வந்திருக்கமுனு சொன்னவுடனே

அப்ப
ஏழுதலமக்காரன் பெஞ்சாதியும் கேப்பாளெ
அடடே! ஒத்தவீட்டுக் கள்ளப்பலே
வேலி குதிக்கிப்பலே வெள்ளாடு தூக்கிப்பலே
கோட்ட குதிக்கிப்பலே கொடியாடு தூக்கிப்பலே
உனக்காடா எந்தனுடைய நாத்திய கலியாதணம் பண்ணிக் குடுக்க
வேணுமுன்னு
ஏசாம ஏசுறாளே பேசாம பேசினவுடனே - முதற்சோனக்கிக்

கண்ணூ செவந்திருச்சி கடுங்கோப மாகிருச்சி
மூக்குச் சிவந்திலங்கே முன்கோபம் ஆகிலங்கே
கொங்கமுழி கண்க ரெண்டும் கொழுந்துவிட் டெரியுதங்கே
நீலமுழி கண்க ரெண்டும் நெருப்புத்தன லாடுதங்கே
வண்ணமுழி கண்க ரெண்டும் வாட்டிப்போ ராடுதங்கே
இடதுபக்க வீசயெல்லாம் ஈட்டிப்போ ராடுதங்கே
அப்போதுதானும் கோபத்த ஆத்துதல பண்ணிலங்கே
நம்ப பொட்டச் சிறுக்கிகளிடம் சொன்னது
நம்மமேலதான் தவறுதலன்னு சொல்லிலங்கே
அந்த இடத்திலயும் மறுபடியும் உக்காந்து இருந்தாரே.

இது ஏழுநல்லெ பேருகளும் தண்ணீரு அள்ளிலங்கெ
சிறுகொடி நாடும் போயிநல்லே சேந்தவுடனே
ஏழுபேரு புருசன்களிலே தானுமங்கே
மூத்தவன் தானுமங்கே அடுத்த கிராமத்துக்குப் போயிட்டான்
ஆறுநல்லெ பேருகளும் இருந்தவுடனே

கேட்டீயளா நம்முளுடய வெள்ளலூரு நாட்டிலேயிருந்து
முதற்சொன பொண்ணுகள் கேக்க வந்தான் - நாங்க
ஏசாமல் ஏசீட்டோம் பேசாமல் பேசீட்டோம்
மறுபடியும் அந்த இடத்திலேயும் உக்காந்து இருக்கானய்யா
என்றுமங்கே சொன்னாளே அப்போதும்.

அப்ப சொன்னவொடனே தானும் - அப்ப
ஆறுநல்லெ பேருகளும் அப்போது

வாங்கடா தம்பிமாருகளா போயிநல்லெ பாத்து வருவோமுனு - அப்போது
ஆறுநல்லெ பேருகளும் புறப்பட்டுக்
கூட்டப்புளி ஊரணியும் வந்தவுடனே தானுமங்கே

மைத்துனர்கள் வந்துட்டார்கள்னு எந்திரிச்சித்தானும்
இடதுபுறம் போயிலங்கே முதற்சோன வலதுபுறம் நமஸ்காரம் செய்தாரு
வலதுபுறம் வந்திலங்கே அங்கே இடதுபுறம் நமஸ்காரம் செய்தவுடனே
தானும்

அப்போது
மகராசனா இரப்பா முதற்சோன - நீ வந்ததென்ன போனதென்ன
இந்த இடத்திலே வந்து இருக்கவேண்டிய காரணங்கள்
என்னவென்று

கேட்டவுடனேதானும்

அப்போது சொல்லுவாரே,
மைத்தினரே! மைத்தினரே!! என்னிடத்திலே
காணிபூமி கனத்த பணங்காசி
ஆடுமாடு சொத்துசுகங்கள் இல்லையினு உந்தனிடம் வல்லையய்யா- இந்த
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாள
எனக்குக் கலியாதணம் பண்ணிக்குடுக்க வேணும்
என்றுமங்கே கேட்டவுடனே

அப்ப
அந்த ஆறநல்லெ பேருகளும் கேட்டார்கள்
அடடே! ஒத்தவீட்டுக் கள்ளப்பலே
கோட்டை குதிக்கிப்பலே கொடியாடு தூக்கிப்பலே
நெடுமரத்துத் தண்ணிக்கி நீட்டி நிமிந்தவனே
பச்சப்பட்டத் தண்ணிக்கிப் பனமரத்தக் காத்தவனே
உனக்காடா என்னுடைய தங்கச்சிய
கலியாதணம் பண்ணிக்குடுக்க வேணு முனு சொல்லி
ஏசாம ஏசுறானே பேசாம பேசினவுடனே

முதச்சோனாக்கிக்
கண்ணூ சிவந்திலங்கே கடுங்கோப மாகிலங்கே
மூக்குச் சிவந்திலங்கே முன்கோப மாகிலங்கே-அங்கே
கொங்கெமுழி கண்கரெண்டும் கொழுந்துவிட் டெரியுதங்கே
நீலமுழி கண்கரெண்டும் நெருப்புத்தன லாடுதங்கே
வண்ணமுழி கண்கரெண்டும் வாட்டிப்போ ராடுதங்கே
இடதுபக்க வீசயெல்லாம் ஈட்டிப்போ ராடுதங்கே

அடடே சிறுகொடிநாட்டுப் பயலுகளா -என்னுடைய
உருண்டச்சோறு திங்குமடா உப்பாணிக் கறுப்பனடா
வச்சச்சோறு திங்குமடா வகுத்தூ முனியாண்டி
நந்நாழி கன்டுகடா மூன்றுபேரயும் விட்டு
பட்டப்பகலிலே பனிரெண்டு மணிக்கி
உன்னுடைய தங்கச்சியநான் சிறபிடிக்கலெயின்னு சொன்னாக்கா

என்ன வெள்ளலூரு நாகுட்டியின்னு சொல்லி
கூப்புடுங்கடான்னு சொல்லி - முதற்சோன
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சியம்
பூச்சி மட்டெயில குருதயும் அவுத்திலங்கே-அப்ப
மூனேயமுக்கா நாழிகளுக்குள்ளாற
வெள்ளலூரு அரண்மனயும் வந்துநல்லெ சேர்ந்திலங்கே
குருதகட்டும் சாவடிய குருதயவும் கட்டிமிக வைத்துட்டு

அப்போது
வெள்ளலூரு அரண்மனய போயிலங்கே
மேவீடு மெத்தமேல தானும்
சாஞ்சிமூஞ்ச கட்டிலே - முதச்சோன
சாய்ந்து படுத்திலங்கே உக்காந்து இருக்கும்போது
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா-அங்கெ
உள்ளங்கையி சாத்திரத்த ஊடுருகத் தான்பாத்தா
வல்லங்கையி சாத்திரத்த போட்டெறிந்து தான்பாத்தா
புறங்கையி சாத்திரத்த போகவரத் தான்பாத்தா
நம்மளுடய தம்பிய சிறுபுலிநாட்டுப் பயலுக
ஏசாம ஏசிவிட்டான் பேசாம பேசிவிட்டான்
நம்மதம்பி கோபமாகவந்து இருக்கானுன்னு-சொல்லிலங்கே
அந்தப்புறமும் ராணிதலவாசலுமா உக்காந்து இருக்கும்போதுதானும்-இவன்
ஆறுநல்லெ பேரும் புறப்பட்டுப் போறானே.

சிறுகுடிநாடு போனவுடனே - அந்த மூத்தவன்
அடுத்த கிராமத்துக்குப் போனவன் வந்தவுடனே
அண்ணண்ணேன்! வெள்ளலூரு நாட்டுலெயிருந்து
முதற்சோன பொண்ணுகள் கேக்க வந்தான் - நாங்கள்
ஏசாமல் ஏசிவிட்டோம் பேசாமல் பேசிவிட்டோம்
அதுக்கப்பறம் அவன்பாட்டுக்குப் போயிருக்கான்னு சொன்னானே
அப்போதும்.

என்னடா சம்பராயம் போட்டுப் போயிருக்கான்னு கேக்கம்போது -
அவருடைய
உருண்டச்சோறு திங்கும் உப்பாநல்ல கறுப்பனாம்
வச்சசோறு திங்கும் வகுத்து முனியனாம்
நந்நாழி கன்டுகளாம் அந்த மூனுநல்ல பேரயும்விட்டுப்
பட்டப்பகலீலே பனிரெண்டு மணிக்கி
நம்ம தங்கச்சியை சிறையெடுப்பானாம்
அப்படி இல்லையினு சொன்னாக்கா
என்னைய வெள்ளலூரு நாகுட்டின்னு சொல்லி அழைங்கடான்னு
சொல்லிவிட்டு
அவன் சம்பராயம் போட்டுப் போனான்னு சொன்னவுடனே தானுமங்கே

அப்போது சொல்லுவானே மூளிநல்ல வீரப்பனும்
அடடே தம்பீமார்களே!

தீரப்படித்துமடா தெம்மாடி ஆனீரடா
மூகப்படித்துமடா முட்டாளா ஆனீர்களடா - அவன்
காணிக்குரித்தாளி பூமிக் குரித்தாளி
ஆளுல அழகனடா அரிச்சந்திர கோபாலன்
வில்லாளி வில்லனடா விலமதியா பாண்டியன்டா
அவனவிட நம்பதங்கச்சிக்கு இந்த உலகத்தில மாப்பிள எவன்டா
இருக்கான்?

அவன்போட்டெ சம்பிராயதத்த சரியா முடிப்பானடா
உங்களால முடியுமான்னு கேட்டானே அப்போதும்.

அப்ப கேட்டவுடனேதானும்,
எல்லாத்துக்கும் இளையவன் சொல்லுவானே
அவன் யோசன அம்பலம் அப்போது சொல்லுவானே
அண்ணண்ணேன்! நான் சொல்லுறபுடிக்கி
எழுதுண்ணேன் காகிதத்த ஏவுண்ணேன் தூதுகள
நம்பளுடய மைத்துனரு கேட்டுக்கிருவாரு என்று சொன்னவுடனே
என்னடா யோசினயின்னு கேட்டானே அப்போதும்.

மைத்துனரே மைத்துனரே! நான் அடுத்த கிராமத்துக்குப் போயிட்டேன்
சின்னப் பயளுக சிறுபுத்தித் தனமா நடந்துட்டார்கள்
மன்னிச்சிக்கிற வேணும் - நீ
அறுகலப் பணமும் பரிசுப்பணமும் கொண்டாந்து கட்டிகிட்டு
பொண்ணுக்காரரு - நீ மகராசனா
பொண்ணக் கட்டிகிட்டுப் போகுமய்யா என்றுசொல்லி - நீ
எழுதுண்ணன் காயிதத்த ஏவுண்ணன் தூதுகள
என்று சொல்லி சொன்னானே அப்போது.

அதேபிரகாரம் மூளிநல்லே வீரப்பனும் காயிதமும் எழுதிலங்கே - அப்ப
சாம்பப் பறயனங்கே கட்டழகன் சாம்பனையும் கூப்புட்டுத் தானுமங்கே
வெள்ளலூரு நாட்டுக்குக் காயிதமும் போகட்டுமுனு சொல்லி
காகிதத்த குடுத்தவுடனே - அப்ப
சாம்பப் பறயன் கட்டழகன் சாம்பனுமே
காகிதத்த வாங்கிக் கையிலெயும் தான்புடிச்சி ஓடுறானே.

அவனுடைய அரண்மனக்கி ஓடிலங்கே
அவனுடைய சம்சாரத்தக் கூப்புட்டு
அடியடியே பெண்ணரசே! - நான்
வெள்ளலூரு நாட்டுக்குக் காகிதமும் கொண்டுபோறேன்
எனக்கு வாக்கியரிசியும் ஒன்னரக் காசியும் குடுடின்னு வாங்கிலங்கே
அப்போது கையிலெயும் தான்புடிச்சி ஓடுறானே.

சாம்பப் பறயனுமே வெள்ளலூரு நாட்டுக்குப் போயித்தானும்
வெள்ளலூரு அரண்மனய்க்கி மின்பாகப் போயிலங்கே நின்றிலங்கே -
அங்கே
தென்னமரத்து நிழலாடுனதுபோல அதுக்கு இதுக்குமா இழஞ்சவுடனே
தானும்

முதற்சோன மேவீடு மெத்தமேல இருந்திலங்கே பார்க்கும்போது - இவன்
பூச்சி இழஞ்சதுமாதிரியா இழஞ்சவுடனேதானும்
என்னடா ஒருபய அங்கே பூச்சி இழஞ்சமாதிரியா இழயிறானேன்னு
சொல்லிலங்கே

எந்திரிச்சிதானும் கீழேயிறங்கி வந்தவுடனே
தூக்கி எறிஞ்சானே காயிதத்தயும் அப்போது - அப்போது
இடதுகால்னால வாங்கிலங்கே வலதுகையினாலே எடுத்துட்டு
பாத்துட்டுத் திலும்பிமிக பாத்தாரே சாம்பப் பறயன
கட்டள சாம்பலயுந்தானும் கண்ணுக்கு மாயமாகக் காணுமே
சரியின்னு சொல்லிலங்கே
பணத்தாச புடிச்ச பயலுகளா நான் பணம் அனுப்புறன்டான்னு
சொல்லிலங்கே

அப்பவே இறங்கிலங்கே
உருண்டச்சோறு திங்கும் உப்பாநல்ல கறுப்பனங்கே
வச்சசோறு திங்கும் வகுத்து முனியனங்கே
நன்னாழிக் கன்டுக மூனுநல்ல பேரயும் கூப்பிட்டு
ராமர் களஞ்சியமும் லெக்னர் களஞ்சியத்தயும் துறந்திலங்கே - அப்போது
அள்ளித் தானுமங்கே ஆத்துப்பொலி தூத்துப் பொலி விட்டிலங்கே
சுத்துல ஓடுனத முதற்கருக்காயின்னு தள்ளிலங்கே
பக்கத்துல ஓடுனத பதருன்னு தள்ளிலங்கே - அப்ப
அறுகலப் பணமும் அப்ப அளந்து தானுமங்கே
சாக்குலயும் கட்டிலங்கே

அடடே! உருண்டச்சோறு திங்கும் உப்பாநல்ல கறுப்பனடா
வச்ச சோறு திங்கும் வகுத்து முனியனடா
நன்னாழிக் கன்டுகளா - நம்ம
கண்ணாடித் தம்பி கருமயிலத் தம்பிய
வண்டியில போட்டு ஏத்திமிக வாறீயளா என்றுமங்கே கேட்டவுடனே -
அப்ப

மூனுநல்லெ பேரும் சொல்லுவானே - இந்த
அறுகலப் பணத்தயுந்தானும் நாங்க கக்கத்துல தான்இடுக்கி
நம்பகுருத அறுவதடி பாஞ்சிது தானாக்கும்
நாங்க தொண்ணூறடி பாயிவோமே லென்றுமங்கே சொல்லிலங்கே

அந்தப் பணத்தயும் அள்ளித் தானுமங்கே
மூனுநல்லெ பேரும் கொண்டுகிட்டு - அப்போது
மூனேயமுக்கா நாழிகளுக் குள்ளாக - அந்தக்
கூட்டப்புளி ஊரணியும் வந்துநல்லெ சேந்தவுடனேதானும்
சிறுகொடி நாட்டுலேயிருந்து ஏழுதலமக் காரனும் வந்துதானும்
அந்த இடத்திலேயேதானும் ஆத்துப்பொலி தூத்துப்பொலி விட்டிலங்கே
சுத்துல ஓடுனத ஊதக் கருக்காயின்னு தள்ளிலங்கே
பக்கத்துல ஓடுனத பதருன்னும் தள்ளிலங்கே - அப்போது

அவுகளுடைய மரக்காபோட்டு அளந்து பாக்கம்போது
கலப்பணம் மிஞ்சியும் போயிருச்சி.

அந்தப் பணத்தயும் அள்ளி
பதினெட்டுவுள்ள கிராமத்லவுள்ள குடிபடய பூராவும் வரச்சொல்லிலங்கே
அப்போது வெள்ளலூரு நாட்டுக்கும் அப்போது சிறுகொடி நாட்டுக்கும்
பூவால பந்தலங்கே பொய்ப்பமாகத் தொடுக்க வேணுமுன்னு சொல்லி
அந்த இடத்திலேயும் நாளு முழுத்தங்களும் பார்த்திலங்கே - அப்ப
சிறுகொடி நாட்டிலெயும் தானுமங்கே
முழுத்தோல எழுதிலங்கே முழுத்தக்கால் தானூன்டி
வெள்ளிக்கெழம அன்னிக்கி பனிரெண்டு மணிக்கி
திருமங்கிலியம் பூட்டுறதுன்னு சொல்லிலங்கே

அப்போது
முதச்சோன அதேபிரகாரம் தஞ்சாவூரு வந்திலங்கே
பொண்ணுக்கு வேண்டிய சவுளிகளும் தானெடுத்து
பொண்ணுக்கு வேண்டிய நகைகளும் தானெடுத்து - அப்போது
ரெண்டு நாளுக்கு மின்பாகச் சிறுகொடி நாடுபோயி
வாழெ புளந்தார்கள் வாசலெங்கும் பந்தலிட்டு
தென்னெ புளந்தார்கள் தெருவெங்கும் பந்தலிட்டு
மூங்கீ புளந்திலங்கே முத்தமெல்லாம் பந்தலிட்டு - அப்போது
மணவறயும் தான்போட்டு
ஆயீரம் பாப்பானும் அரசாணிப்பான ஏத்திலங்கே
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாளுக்கும்
வெள்ளலூரு முதச்சோனய்க்கும் எட்டுநாள்ல கலியாதணம்
கொட்டோட குலவயோட நடந்துதங்கே அப்போதும்.

அப்ப நடந்தவுடனே தானுமங்கே
எட்டாவது நாளுத்தானும் முதச்சோனதானும்
மைத்துனன்மார் களெடம் போயி
மைத்துனரெ! மைத்துனரெ!! நாங்க மருகுபோக வேணும்
எங்கள அனுப்பிச்சி வையீங்கெ என்றுமங்கே கேட்டவுடனேதானும்
அப்போதுதானும் அந்த ஏழு தலமக்காரனும் - அப்போது
முதச்சோனய போவுன்னு சொல்லவெல இருவுன்னும் சொல்லவெல
வாயோட வார்த்தெய்கள் பதுலுக சொல்லாதபுடிக்கித் தானுமங்கே - அப்போது
கீழ போட்டெ தலய ஏரெட்டுப் பாராதபுடிக்கி இருந்தவுடனே
முதச்சோனெ நின்டு பாத்துட்டு அந்தப்புறமும் வந்திலங்கே
அடியடியே பெண்ணரசே! ஒன்ணென்மார்களெடம் போயி
நான் மருகுபோக வேணுமுன்னு கேட்டேன்
வாயோட வார்த்தெய்கள் வதுலுகள் சொல்லுகிறார்கள் இல்லெ
நீனாச்சும் போயி கேட்டுவான்னு சொன்னவுடனே-அப்ப

ஏழுபேரோட புறந்த ஏழுவக்கா நாச்சியாளும்
புறப்பட்டுப் போயிலங்கே அண்ணன்மார்களெடம் போயி

எங்களெ அனுப்பிச்சி வையீங்கெ என்றுமங்கெ கேட்டெடடனே
தங்கச்சிய போவுன்னு சொல்லலெ இருவுன்னும் சொல்லலெ
வாயோட வார்த்தெய்கள் வதுலுகள் சொல்லாதபுடிக்கி இருந்தவுடனே
தானும்

அப்போது நின்டு பாத்துட்டு புறப்பட்டு வந்திலங்கெ
ஓஓ வெள்ளலூரு ரெம்மானே
தீரப் படித்துமய்யா நீர் தெம்மாடி ஆனீரய்யா
மூகப் படித்துமய்யா நீர் முட்டாளா ஆனீர்களெ
எதற்காக இவுங்களுக்கு அறுகலப்பணம் பரிசப்பணம் கட்டவேணும்- நீ
பொண்ணுகாரரு வந்து பொண்ணெ அழய்க்கும்போது
நான் வரமாட்டேன்யினா இருந்தேனய்யா
என்றுமங்கே சொன்னவுடனே

அப்போது முதச்சோன சொல்லுவாரே
அடியடியே பெண்ணரசே! நாய்க்கி வெந்தயத்தக் கட்டுனா
நாய்க்கிப் பெருமயாடி நாயனுக்குப் பெருமயாடி
உனக்கு வரப்பிரிய மிருந்துதானாக்கும் குருதயில ஏறு
இல்லையினு சொன்னாக்கா உன்னுடைய அரண்மனயே இருமுன்னு
சொன்னவுடனே - அப்ப

ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாளுஞ் சொல்லுவாளே
இன்னமே இந்தப்பய அரண்மன எனக்கு என்னய்ய சீதனமுனு
சொல்லிலங்கே

சொன்னவுடனே தானுமங்கே முதச்சோன
ஏழுமலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சிமட்டயில குருதய அவுத்தி லங்கே
குருதமேல ஏறிமுக உக்கார்ந்து - அப்ப
ஏழு பேரோட புறந்த எழுவக்கா நாச்சியாள புறங்கையினால ஏந்திலங்கே
-அந்த

ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெடயில குருதய தூக்கிமுக வச்சிகிட்டு
வெள்ளலூரு நாடு புறப்பட்டுப் போகும்போது

அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா தானுமங்கே-அங்கெ
மேவீடு மெத்தமேல நின்றிலங்கே
தம்பிபோன வழிபக்கம் பார்க்கும்போது-அப்போது
தம்பியும் தம்பிபொண்டாட்டியும் இருபேருந்தான் வாறார்கள்
சிறுகொடி நாட்டிலேருந்து வேறபேரு வரக்கிடயாது-அப்போதுதானும்
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா
மேவீடு மெத்தமேல நின்டவ
கீழெ இறங்கிலங்கே வந்து தலவாசலிலெ நின்டிலங்கே
தம்பி தம்பிதானும் குருதயவிட்டு
தம்பி பொண்டாட்டிய கீழெ இறக்கிமுக விட்டவுடனேதானும்

அப்ப
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலாதானும்
அடியடியே சிறுகொடி கள்ளிச்சி மகளே!
நீனுடுத்தும் துகில என்னுடய அரண்மனய்க்கி அப்பாலே களஞ்சிவச்சீ
என்னுடைய அரண்மனய்க்கி உள்ளே நுழையுமின்னு சொன்னாளே
அப்போதும்.

அப்ப ஏழுபேரேட புறந்த எழுவக்கா நாச்சியா தானுமங்கே
தெற்கு வடக்குவாய முளிச்சவுடனே தானுமங்கே
அப்போதுதானும் முதற்சோன குருதமேல இருந்துகிட்டு
அந்தப் பதனாறுமுழ வெள்ளலேஞ்சி தலயில் கட்டியிருந்ததத் தானுமங்கே

தூக்கி எறிஞ்சாரே அப்போது - அப்ப
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாளும்
அந்தத் துயிலயே எடுத்திலங்கே
அப்போது இடயிலயும் சுத்திலங்கே
அந்தத் துயில உரிஞ்சிமிக வாசலிலேயே வச்சிலங்கே
அப்ப வெள்ளலூரு அரண்மனய்க்கி உள்ளெ நுழஞ்ச வுடனேதானும்

அப்ப
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலா அப்போதுதானும்
நாத்தியர தானுமங்கே குடங்கையினாலே அனச்சிலங்கே
முத்தமு மிட்டுத் தானுமங்கே - அப்ப
அரண்மனயக் கொண்டுபோயி தானுமங்கே
பதினெட்டுநல்லெ கிராமத்துல உள்ள
குடிபடயப் பூராவும் வரச்சொல்லித் தானுமங்கே
வாழெ புளந்தாளே வாசலெங்கும் பந்தலிட்டு
தென்னெ புளந்தாளே தெருவெங்கும் பந்தலிட்டு - அப்ப
மூங்கீ புளந்திலங்கே முத்தமெல்லாம் பந்தலிட்டு
மணவறயும் தான்போட்டு
ஆயீரம் பாப்பானே அரசாணிப்பானெ ஏத்திலங்கே - அப்போது
மஞ்சக் கவுறுகொண்டு அப்போது முதற்சோனயும் - அந்த
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாளுக்குத் திருமங்கிலியம்
பூட்டிலங்கே
எட்டுநாளக் கலியாதணம் கொட்டோட குலவயோட நடந்திலங்கே
எட்டாவது நாளுத்தானும் - அங்கே
பதினெட்டுவுள்ள கிராமத்லவுள்ள குடிபடய்க்கிப் பூரா
விருந்துகளும் வச்சிலங்கே அனுப்பிச்சி வச்சார்கள்.

அப்ப அனுப்பிச்சி வச்சவுடனே தானுமங்கே
இந்தப் பிரகாரமா இருக்கும்போதுதானும்
அப்போது முதச்சோனயும் தானுமங்கே - அப்போ
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாளும்
சிலகோடி காலம் அந்த வெள்ளலூரு நாட்ட ஆண்டுமுக இருக்கும்
போதுதானும்

காரான புறந்த கருத்தவனம் இன்னு - அப்போது
ஒரு பெண் குழந்த ஒன்று அவர்களுக்குப் புறந்துதங்கெ - அப்போது
அந்தப் பெண்குழந்த புறந்துதானும் இருக்கும்போதுதானும் - அப்ப
முதச்சோன தானுமங்கே நம்மளுடைய மாடு
ஆனமல அழகர்கோவில் மலயிலெ கொண்டுபோயி விட்டுட்டு வந்தமே
நம்ப மாட்டெபோயி பார்வையிட்டு வரவேணுமுன்னு சொல்லிலங்கே.

முதச்சோன தானுமங்கே - அந்த
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெயில குருதயில ஏறிலங்கே போயித்தானு மங்கே - அந்தத்
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்டெ
ஏழு எருக்கம்பட்டி மேல வளவுலங்கே கீழ வளவிலங்கே
ஆத்தூரு அருகுவேலி இத்தனயும் தாண்டிலங்கே - அப்ப
தீயாட தீயெரியும் தீயவனம் தாந்தாண்டி
மூங்கியோட மூங்கெரியும் முதவனமும் தாந்தாண்டி
ஆனெ அடெயும்வனம் அன்னப்பச்சி தூங்கும்வனம்
சிங்க எடயும்வனம் சிறுபுலி தூங்கும்வனம்
கரடி படுத்திருக்கும் கழுகுமல தாந்தாண்டீ
பில்லா படுத்திருக்கும் பில்லெமல தாந்தாண்டீ
இத்தாதிவனமும் தாண்டி
ஆனமலயுந் தாண்டி அழகர்கோவில் மலயுந்தாண்டீ
மொட்டெ மலயுந்தாண்டி முதமலயும் போயிலங்கே
பொந்துப் புளியாமரம் இடதுபுறம் போயிலங்கே
வலதுபுறம் நின்டிலங்கே
குருதயவிட்டுக் கீழே இறங்கிலங்கே -அப்ப

மாட்டெயும் பார்வையிட்டுத் தானுமங்கே
பாலூ கறந்தாரே கன்டூ களஞ்சிலங்கே
பாடீ கறந்தாரே முதச்சோன பதுனாறுகலப் பாலு
பூலம்பீ கறந்தாரே புடிசெம்புலே பாலூ
இத்தனையும் தான்கறந்து
சாப்பிட்டீ எப்பாநீர் சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளப்பாறி இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு
அப்போது மாட்டெ களஞ்சிமிக விட்டுட்டு
முதச்சோன திருப்புனாரே வெள்ளலூரு நாட்டுக்கே.

அப்ப வெள்ளலூரு நாடு திலும்பிமுக வரும்போது - அந்த
எருக்காளம்பட்டி ஊரணியே அருகாலெ வருகையிலே - அங்கே
சிறுகொடி நாட்டுக்குச் சேர்ந்த சாணாரப் பையனும் - அப்போது
மலெய்யிலே ஏறித்தானும் பாலூ கறந்தானே - அப்போது
காலெய்யில குருத ஏழு மணிக்கி அந்த இடத்திலே வந்துநிக்கும்

வந்தவுடனே தானுமங்கே,
வெள்ளலூ ரெசம்மானே
பாலுகுடிச்சிப் போகலாம் குருதய நிப்பாட்டுங்கன்னு சொன்னவுடனே

முதச்சோன சரியென்னு சொல்லிலங்கே
குருதய நிப்பாட்டி நிக்கும்போது - அப்போது
அந்தச் சிறுகொடி நாட்டுக்குச் சேந்த சாணாரப் பையனுந் தானுமங்கே
இன்னமொரு முட்டி இருக்கிது சீவிகிட்டு வந்துர்றென்னு சொல்லித்
தானுமங்கே

காலெயில ஏழு மணிக்கி வந்த குருதய
பனிரெண்டு மணியறுதி தாக்காட்டித் தானுமங்கே
சொல்லி இருக்கும்போது - அப்போது முதச்சோனக்கி
கண்ணூ சிவந்திலங்கே கடுங்கோப மாகிலங்கே
மூக்கூ சிவந்திலங்கே முன்கோப மாகிலங்கே
கொங்கெமுழி கண்கரெண்டும் கொழுந்துவிட் டெரியுதங்கே
நிலமுழி கண்கரெண்டும் நெருப்புத்தன லாடுதங்கே
வண்ணமுழி கண்கரெண்டும் வாட்டிப்போ ராடுதங்கே
இடதுபக்க வீசயெல்லாம் ஈட்டிப்போ ராடுதங்கே
இந்தப்பிரகாரம் காலப் பொதிஞ்சிகொண்டு ஏறுறபயலுக்கு
இவ்வளது வீராப்பா ளென்றுசொல்லித் தானுமங்கே

அதேபிரகாரம் குருதய திலுப்பிமுக தஞ்சாவூரு வந்திலங்கே
கள்ளுக்கடயுந் தானும் ஏலம் எடுத்திலங்கே
ஏலச்சவுத்தி பண்ணி கள்ளுக்கட இல்லாதபுடிக்கி அடிச்சிலங்கே
முதச்சோன வெள்ளலூருநாடு திலும்பிமுக வந்தாரே.

வந்து தானுமங்கே,
அக்கா கருத்தவனம் அருமயுள்ள இளங்குயிலாவும்
அப்போது அவுகளும் தெய்வலோகம் போயிநல்லெ சேந்தவுடனே
தானுமங்கே - இந்தக்
காராள புறந்த கருத்த வனத்துக்கு
அஞ்சீ வயதாகி அறியாத பிரயமாகி
பத்தூ வயதாகி பள்ளி குமரியாகி
பள்ளிக்குடம் படிச்சிமுக வாறாளே.
அப்ப வரும்போது தானுமங்கே
அப்போது மறுபடியும் தானுமங்கே-அந்த
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாளும்
மறுபடியுந்தானும் கெர்ப்பசங்க ஆகிலங்கே
பத்துலொரு மாதம் சரியாவும் சென்டிலங்கே - அப்போது
பேப்பெருமா சின்னாண்டி இருபேரும் புறந்தார்கள் அப்போதும்.

அப்ப புறந்து இருக்கும்போது தானுமங்கே
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சக்குட்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் ஏழுதலமக் காரனும்
ஓரெடத்திலே உக்கார்ந்து 'அடடே தம்பிமார்களா'
நம்முளுடைய தங்கச்சிய

ஒத்தவீட்டுக் கள்ளனுக்குக் கட்டிக் குடுத்தோம்
நம்ம தங்கச்சிக்கு ஏதாளவொரு சீதனமும் குடுக்கவில்ல
நம்ம தங்கச்சிய ஏசுவான்டா பேசுவான்டா
நம்ம தங்கச்சிக்கு என்னடா சீதனம் குடுக்குறதுன்னு
இவுங்க கூடிப் பேசும்போது - அப்ப
எல்லாத்துக்கும் இளயவன் சொல்லுவானே

'அண்ணன்ணேன்' நம்ம தங்கச்சிக்கு
ஆடுகுடுத்தா அழிஞ்சிபோகும் மாடுகுடுத்தா அழிஞ்சிபோகும்
கனத்த பணங்காசி நகய்கள் குடுத்தா அழிஞ்சிபோகும் - நம்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன்
கோவிலுக்குத் தென்பாங்கு கூட்டப்புளி ஊரணிக்கு மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்சையங்கே அம்பது மாகாணி குறுக்கமும்
நம்ப தங்கச்சிக்கு செம்புப்பட்டயம் எழுதிக் குடுப்பமுன்னு
எழுதுண்ணேன் காயிதத்த ஏவுண்ணேன் தூதுகள
என்றுமங்கே சொன்னானே அப்போதும்.

அதேபிரகாரம் காயிதமும் எழுதிலங்கே
வெள்ளலூரு நாடு வந்தவுடனே முதச்சோன அங்கே
காயிதத்தயும் வாங்கி வாசிச்சி பாத்துத்தானும் - அப்ப
ஏழுநாள் வீட்டு அறவீட்டுக் குழந்தயா இருக்கும்போது
பக்கத்திலே போயி நின்டிலங்கே

அடியடியே பெண்ணரசே! தொண்ணன்மார்கள் காயிதமும் எழுதியிருக்கார்கள்
உனக்கு எந்தவிதமான சீதனங்கள் குடுக்கவிலையினு சொல்லி - உனக்கு
ஆடுகுடுத்தா அழிஞ்சிபோகுமாம் மாடுகுடுத்தா அழிஞ்சிபோகுமாம்
சொத்துசுகங்கள் குடுத்தா அழிஞ்சிபோகுமாம் - நம்ப
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன்
கோவிலுக்குத் தென்பாங்கு கூட்டப்புளி ஊரணிக்கு மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்சையங்கே அம்பது மாகாணி குறுக்கமும்
உனக்குச் செப்புப்பட்டயம் எழுதித் தாரமுன்னு சொல்லி
காயிதமும் வந்திருச்சின்னு சொல்லி சொன்னாரே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே - இந்த
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியா சொல்லுவாளே
அய்யய்யா! அந்தப்பய காணியும் வேணாம் பூமியும் வேணாம்
நம்மளுடைய காணிபூமிய நம்ம புள்ளபுள்ள தலமொறய்க்கும் சரியா போவுமய்யா

என்றுமங்கே சொன்னவுடனே சொல்லுவாரே,

போடி பயித்தியாரி! காணிகாரனுக்குக் காணிவந்து சேருது
நான்போயித் தானுமங்கே செப்புப்பட்டயம் எழுதிவாங்கி வாறேமுன்னு சொல்லிலங்கே

முதச்சோன ஏழுமலயாளம் பொண்டுக ராச்சீயம்

பூச்சி மட்டேயில குருதஏறி - அங்கே
கூட்டப்புளி ஊரணியும் போயிநல்லெ சேர்ந்தாரே.

அப்ப சேந்தவுடனே தானுமங்கே
ஏழுநல்ல பேருகளும் வந்துதானும் அதேபிரகாரம்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன்
கோவிலுக்குத் தென்பாங்கு கூட்டப்புளி ஊரணிக்கி மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்சையங்கே அந்த அம்பது மாகாணி குறுக்கமும்
அப்ப செப்புப்பட்டயம் எழுதிலங்கே குடுத்தொடனே
முதச்சோன வாங்கிகிட்டு வந்திலங்கே

வெள்ளலூரு நாடு திலும்பிதான் வந்திலங்கே
அதயுந்தானும் இருப்புப்பொட்டிகீழ பூட்டிமுக வைத்துட்டு
அன்னிக்கி இரவு வெள்ளலூரு அரண்மனய இருந்திலங்கே
விடிஞ்சவுடனே தானுமங்கே
உருண்டச்சோறு திங்கும் உப்பநல்ல கறுப்பனங்கே
வச்சசோறு திங்கும் வவுத்து முனிய ங்கே
நன்னாழிக் கன்டுகள் அந்த மூனுநல்லபேரயும் கூப்புட்டுத்தானும்
அடடே உருண்டச்சோறு திங்கும் உப்பநல்ல கறுப்பனடா
வச்சசோறு திங்கும் வயுத்து முனியனடா
நன்னாழி கன்டுகளா
நம்மளுடய கண்ணாடித் தம்பி கருமயிலத் தம்பி
ஏழேரு மாட்டயும் ஓட்டி எருக்காளப்பட்டி ஊரணியிலே குளுப்பாட்டித் தானுமங்கே

காலுக்கு வீரதண்ட கழுத்துக்கு வைரமணி
நெத்திக்கு நிலம்பாக்கும் கண்ணாடி
கொப்புக்குக் குத்திலெடம் இத்தனையும் தான்மாட்டி - அங்கே
பொழுது கிளம்பும்முன்னே ஏழுமணிக்குத் தானும்
அத்தன மாட்டுகளுக்கும் தீனிகளும் வச்சிலங்கே
வெள்ளலூரு அரண்மனய்க்கு முன்பாக நிக்கவேணும்
அப்படி நிக்கலய்யின்னு சொன்னாக்கா
ஒங்களுடய தலய நம்பாதிங்கன்னு சொல்லிட்டு
முதச்சோன இருந்தவுடனே

அதேபிரகாரம்
உருண்டச்சோறு திங்கும் உப்பாநல்ல கறுப்பனங்கே
வச்சசோறு திங்கும் வகுத்து முனியனங்கே - அந்த
நன்னாழிக் கன்டுக மூனுநல்ல பேருந்தானும்
அடிச்சிமுக ஓட்டுறானே ஏழேரு மாட்டயுந்தானும் - அப்போது
எருக்காளம்பட்டி ஊரணியிலே கொண்டுபோயி குளுப்பாட்டி - அங்கே
காலுக்கு வீரதண்ட கழுத்துக்கு வீரமணி
நெத்திக்கு நிலம்பாக்கும் கண்ணாடி
கொம்புக்குக் குப்பிலங்கே இத்தனயும் தான்மாட்டி

அங்கெ தீனிகளும் வைத்திலங்கே
அங்கெ பொழுது கிளம்புதங்கே
வெள்ளஓரு அரண்மனய்க்கி முன்பாக நின்டவுடனேதானும்

முதச்சோன எந்திரிச்சி தானுமங்கே
அப்போது சொல்லுவானே அப்போது தானுமங்கே - நம்ப
வாணி கருப்பணசாமி வல்லடியான் ஈஸ்வரர்
கோவிலுக்குத் தென்பாங்கு கூட்டப்புளி ஊரணிக்கு மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்சையங்கே அம்பது மாகாணி குறுக்கம்
அதுல ஏரு பூட்டுங்கடா - நான்
பின்னால விதயெடுத்து வாரமுன்னு சொல்லிலங்கே
அனுப்பிச்சி வச்சாரே அப்போதும்.

அப்ப அனுப்பிச்சி வச்சவுடனேதானும்
இவுனுக ஏழேரு மாட்டுக்காரனும் அப்போது ஓட்டிமுக போயிலங்கே - அந்த
அருகுவெத்தி பிஞ்ச அம்பது மாகாணி குறுக்கத்திலெயும் கொண்டுபோயி
மாட்டயும் விட்டுட்டு பாக்கும்போது
ஓட்டடங்காடு உடங்காடு - அங்கே
தாமரயும் மண்டிப்போயி கிடக்குதங்கே
இதுல எந்தவிதமாக நாம ஏருபூட்டி உழுகுறதுனு
ஏழேரு மாட்டயும் அடய வச்சிபிட்டு - இவன்
ஏழுநல்ல பேரும் உழுகுதலபாத்து உக்காந்து இருக்கானே.

அப்போது முதச்சோன தானுமங்கே
தெப்பக்குள மிறங்கி அங்கே குளிச்சி முழுகிலங்கே
அறுபதுபாகம் கூந்தலழகையும் சிக்கொடச்சி தானுமங்கே
கொண்டயும் தான்போட்டு அப்போது தானுமங்கே
மகளயும் கூப்பிட்டுதானும், அம்மம்மா!
சாதம் படையும்மா என்றுமங்கே சொன்னவுடனே - அப்போ தானுமங்கே

காராள புறந்த கருத்தவனம் தானுமங்கே
தங்கநல்ல கும்பாவ தாங்கீ தனிவிளக்கி
வெள்ளிநல்ல கும்பாவ விரும்பிருந்து தான்விளக்கி
தகப்பனாருக்குச் சாதம் படைத்தாளே
சாப்பிட்டீ எப்பாநீர் முதச்சோன சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளப்பாறி இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு
வெள்ளஓரு வெள்ளப்பாக்க விதம்போல சீவிலங்கே - அந்
கீழுரு வெத்திலய கிழிச்சி மடிச்சிலங்கே
மேலூரு சுண்ணாம்ப முதச்சோன மெதுவாலே தாந்தடவி
தின்டு இறக்குனாரு திகட்டுதில காரக்குடி கொழுந்து வெத்லயும் - அ
காராள பிறந்த கருத்தவனத் தெடத்தில சொல்லுவாரே

அம்மம்மா! பருத்தி விதையிலே பதக்குவித
எள்ளு விதயில குறுணிவித எடுமுன்னுஞ் சொன்னொடனே - அப்ப
காராள புறந்த கருத்தவனம் - அங்கே
உள்ளங்கையி சாத்திரத்த ஊடுருகத் தான்பாத்தா
வல்லங்கையி சாத்திர்த்த போட்டெறிந்து தான்பாத்தா - அங்கே
புறங்கையில சாத்திரத்த போகவர தான்பாத்தவுடனே
அப்பப்பு! நாழிக தவறிடுச்சி
இன்னமெ விதையெடுக்கக் கூடாது ளென்றுமங்கே சொன்னவுடனே
தானும்

அப்போது முதச்சோன கோபமா தானுமங்கே
சாத்திரம் பாக்குறதிலே அசர மாட்டார்கள்
எடும்மா விதையயின்னு சொல்லிலங்கே
கோபமா பேசினவுடனே
காராள புறந்த கருத்தவனந் தானும்
பருத்தி விதையிலே பதக்கு விதயும்
எள்ளு விதையிலே குறுணி விதயும்
எடுத்துமிக வைத்தவுடனேதானும் - அப்போது
வெள்ளலூரு வெள்ளப்பாக்க விதம்போல அள்ளிவச்சி
கீழூரு வெத்திலய கட்டோட தூக்கிவச்சி
மேலூரு சுண்ணாம்ப செப்போட தூக்கிவச்சி
நம்ம ஊரு போனவுடனே நம்ம மைத்தினன்மார்கள் வந்திடுவார்கள்
அவர்களுக்கு வெத்திலய பருமாற வேணுமுன்னு சொல்லிலங்கே
இத்தனையும் செய்திலங்கே - அப்போதுதானும்
பதுனாறுமுழ வெள்ளலேஞ்சிய தலயிலயும் கட்டிலங்கெ - அப்ப
விதயும்நல்ல விதப்புட்டிய தூக்கிலங்கெ
தலமேல தூக்கிவச்சி வெள்ளலூரு அரண்மனயவிட்டு
கீழே இறங்கினாரே - அப்போது

பூன குறுக்கிட்டது பொல்லா சவனமாச்சி
அதயும் தாண்டுனாரு ஒத்தப் பாப்பான் எதுப்பட்டான்
அதயும் தாண்டுனாரு அதயுந்தாண்டி வரும்போது - அங்கே
வாணியப் பெண்ணோளும் எதுப்பட்டா
அதயுந் தாண்டிமிக வரும்போது
சார குறுக்கிட்டுது சந்நாசி முன்னெ வந்தான்
அதயுந் தாண்டிமிக வரும்போது - இங்கே
ஏழேரு மாட்டுக்காரனும் - அங்கே
ஏழேரு மாட்டயும் அடயவச்சித் தானுமங்கே
உழுகுதல பாத்து இருந்தான்னு

அடடே என்னடா
ஏழேரு மாட்டுக்காரனும் இப்படிவந்து உக்காந்து இருக்கியளே
எப்படா ஏழள வுழுது
எள்ளும் பருத்தியும் கலந்து விதய்க்க வேணும்

என்றுமங்கே சொன்னவுடனே

அப்போது சொல்லுவானே ஏழுநல்ல பேர்களும்
சிட்டடகாடுஞ் செடிங்காடுமா மண்டிப்போயி கிடக்குதே
இதுல எந்தவிதமாக ஏருபூட்டுறது ளென்றுமங்கே கேட்டவுடனேதானும்
-அப்ப

உருண்டச்சோறு திங்கும் உப்பாநல்ல கறுப்பனங்கே
வச்சசோறு திங்கும் வகுத்தூ முனியனங்கே
நந்நாழிக் கன்டுக மூனுநல்ல பேரயுங் கூப்புட்டு
தெக்குத்தி வேலிய தெம்மடலா தானடச்சி
வடக்குத்தி வேலிய வடமடலா தானடச்சி
கிழக்கித்தி வேலிய கீமடலா தானடச்சி
மேற்கத்தி வேலிய மேமடலா தானடச்சி
ஊடகிடக்கிற செடியபுடுங்கி நெருப்பவச்சிக் கொளுத்திலடா
உரமாகத் தட்டிவிட்டு மேலத்தல மாட்டிலருந்து
கீழத்தல மாடுபோயி திலும்பி வர்றதுக் குள்ளாற
ஏரு புடிக்லயின்னா ஒங்களுடய தலய நம்பாதிங்கன்னு
என்றுமங்கே சொல்லிவிட்டு
முதச்சோன முன்னத்தேரபோயி பூட்டிமிக பத்தும்போது தானுமங்கே

அப்போது
உருண்டச்சோறு திங்கும் உப்பாநல்ல கறுப்பனங்கே
வச்சசோறு திங்கும் வகுத்து முனியனங்கே
நன்னாழிக் கன்டுக மூனுநல்ல பேர்களும் தானுமங்கே

அப்போது
தெக்கெ கிடந்த செடியபுடிங்கி தெம்மடலா தானடச்சான்
வடக்கெ கிடந்த செடியபுடிங்கி வடமடலா தானடச்சி
கிழக்கெ கிடந்த செடியபுடிங்கி கீமடலா தானடச்சி
மேற்கெ கிடந்த செடியபுடிங்கி மேமடலா தானடச்சி
ஊடகிடந்த செடியபுடிங்கி அப்போது நெருப்பவச்சித் தானுமங்கே
உரமாகத் தட்டிவிட்டு அப்ப ஏரு புடிச்சார்கள்
ஏரு புடிச்சவுடனே ஏழள வுழுதிலங்கே
முதற் சோன அப்போது தானுமங்கே - அங்கே
எள்ளும் பருத்தியும் கலந்துமுக விதச்சிமுக வாறாரே.

அப்ப வரும்போது தானுமங்கே
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் ஏழுதலமக்காரன் பெஞ்சாதியும்
செப்பெடுத்து இடையிடுக்கி வாறாளே கூட்டப்புளி ஊரணிக்கே
அங்கே வரும்போது தானுமங்கே - அங்கே
முதற்சோன ஏழேருமாட்டு மணிச்சத்தம் காத்துல குருத்தோடி போவுதங்கே.

என்னடி தங்கச்சீமார்களா! நம்ம
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன்
கோவிலுக்குத் தென்பாங்கு - அந்தக்
கூட்டப்புளி ஊரணிக்கு மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்ச அம்பதுமாகாணி குறுக்கத்திலெயும்
முதச்சோனமாட்டு மணிச்சத்தம் நம்ம காத்துல குருத்தோடி போகுதடி
வாங்கடி போய்பாத்து வருவோமுன்னு
செப்புக் குடத்தக் கொண்டாந்து அப்போது துறயிலயும் போட்டுட்டு
ஓடிமுக ஆழ்ந்துநல்ல பாக்கும்போது - அங்கே
ஏழேரு மாடும் உழுதுமுக வருகுதங்கே - முதச்சோன
எள்ளுகும் பருத்தியும் கலந்து விதச்சிமுக வாறாரே.

அதேபிரகாரமா ஏழுபேரும் தலவிரி கோலமாக
ஓடுறாளே வெள்ளலூரு அங்கே சிறுகொடி நாட்டுக்கே - அங்கே
சிறுகொடி நாட்டுக்கு ஓடுனவுடனே -அந்த
ஏழுதலமக்காரனும் உக்காந்து ஓரடெத்திலே இருக்கும்போது

அப்போது சொல்லுவாளே ஏழுநல்ல பேர்களும் போயி
உங்களாலே முடியிலன்னு சொல்லுங்க
நாங்க உடுத்தும் சீலய நீங்க உடுத்தி
நாங்க புடிக்கும் அகப்பய நீங்க புடிங்க
நாங்கபோயி முதச்சோனய அடிச்சி விரட்டி வாறம்
இல்லையினு சொன்னாக்கா அவன அடிச்சி விரட்டி வாங்கன்னுஞ்
சொன்னவுடனே

அப்போதுதானும் ஏழுதலமக்காரனும் புறப்பட்டு வரும்போது - அங்கே
மூளிநல்ல வீரப்பனும் சொல்லுவானே
அடடே தம்பிகளா! நம்முடைய மைத்துனன
அடியாதிங்க புடியாதிங்க இம்சிகள் செய்யாதிங்க
வெட்டாதிங்க குத்தாதிங்க நம்ம பேசி விரட்டிமிக வருவோமுடா
நம்மளுடைய மைத்துனர நம்ம ஏதாவது கோளாறு பண்ணுனோமானாக்கும்
நம்ம தங்கச்சிதான்டா தாலி அறுப்பாளுன்னு சொல்லித் தானுமங்கே

தம்பிகளிடம் சொன்னவுடனே
அப்போது எல்லாத்துக்கும் இளையவன் - அங்கே
தங்கப்புடி எழுத்தானிய தானுமங்கே
கையிலயும் தானெடுத்து மடியிலயும் கட்டிலங்கே
புறப்பட்டானே ஏழுதலமக்காரனும் அப்போது
கூட்டப்புளி ஊரணிக்கர மேகரப்புளியும் வந்தவுடனே
முதச்சோன அப்போது விதச்சவிதய வச்சிபுட்டு - இந்த
வெத்தல பாக்குகள அள்ளிகிட்டுத் தானுமங்கே வாறாரே.

அந்தக் கூட்டபுளி ஊரணி மேகரயும் வந்தவுடனே
மைத்துனன்மார்கள சுத்தி உக்கார வச்சிலங்கே
முதச்சோன தானுமங்கே ஊடயும் உக்காந்து - அப்ப

வெத்லய்களப் பருமாறும் போதுதானும் - அந்த
எல்லாத்துக்கும் இளயவன் பக்கத்திலேயே நிக்கிறானே.

அப்ப நிக்கும்போது முதச்சோன சொல்லுவாரே,
மைத்தினரே மைத்தினரே! உக்காந்து வெத்திலய போடுமய்யா
என்றுமங்கே சொன்னாரே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே - அப்போது
அந்தமொத எல்லாத்துக்கும் இளயவன் சொல்லுவானே,
மைத்தினரே! நீங்க வெத்திலயள போடுங்க
உங்க ஏரு உழுகிறத நான் பாத்து நிக்கிறேனய்யா
என்றுமங்கே சொல்லிவிட்டு பக்கத்திலயே நிக்கும்போது - முதச்சோன
வெள்ளஒரு வெள்ளப்பாக்க விதம்போல அள்ளிவச்சி
கீழூரு வெத்திலய கிழிச்சி மடிச்சிலங்கே
மேலூரு சுண்ணாம்ப மெதுவாலே தான்தடவி - அப்ப
தின்டு இருக்கும்போது - அப்ப
எல்லாத்துக்கும் இளையவன் பக்கத்திலே நின்டிலங்கே
முதச்சோன தலய அறுத்தானே.

அப்ப அறுத்தவுடனே தானுமங்கே அப்போது தானுமங்கே
அங்கே முண்டங் கிடந்து முறையிடுது அப்போது
அடடே சிறுகொடி நாட்டுப் பயலுகளா
எத்தன காலமடா என்னுடய தலய
அறுக்க வேணுமுன்னு நினச்சி இருந்தியெ
என்னுடயதல ஒருதல போயிருச்சினு கொஞ்சம் நெஞ்சத்திலே
எண்ணாதீர்கள்

காணிக்குப் புறந்திருக்கு மாணிக்கக் கன்டுகடா
என்றுமங்கே சொல்லிலங்கே முதச்சோனத்திப் பிராணன் அடங்கிச்சங்கே.

அப்போது முதச்சோன தலய எடுத்திலங்கே - அந்த
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்கு
எட்டுநாள பாவக்கூத்துப் போடவும் கொண்டுதான் போயிட்டார்கள்.

முதற்சோன தல கீழ விழுந்தவுடனே அந்த ஏழேரு மாட்டுக்காரனும் -
அந்த

ஏழேரு மாட்டயும் விட்டுட்டு ஓடிமுக போயிட்டார்கள்.

அப்போது ஏழேரு மாடுகள்தானும் சஞ்சிலத்தோட இழுத்துமிக
வந்திலங்கே

முதச்சோன முண்டத்த சுத்தி நின்டிலங்கே
தங்கம்பூ கண்ணீர தரயிலயே சோரவிட்டு
பொன்னான கண்ணீர பூமியில சோரவிட்டு
நீலம்பூ கண்ணீர நிலத்திலயே சோரவிட்டு - அப்போது
சுத்திமுக நிக்கிதங்கே - அப்போது தானுமங்கே

காராள புறந்த கருத்தவனம் - அப்போது
தெருவிலே ஓடிவிளயாண்டு நிக்கும்போது தானுமங்கே
சூறாவளி காத்து அங்கே சுத்தீ அடிக்குதங்கே - அப்ப
காராள புறந்த கருத்தவனம் ஓடிவந்து பாக்கும் போது - அங்கே
பேப்பெருமா மதனம் புடிச்சதுபோல படுத்து இருக்காரு
சின்னாண்டி வீறிட்டு அழுகுறாரு வெகுசத்தம் போடுறாரு - அப்ப
உள்ளங்கையி சாத்திரத்த ஊடுருகத் தான்பாத்தா
வல்லங்கையி சாத்திரத்த போட்டெறிந்து தான்பாத்து - அங்கே
புறங்கையி சாத்திரத்த போகவர பாக்கும்போது
நம்மளுயை தகப்பனார நம்முளுடைய மாமன்மாரு தானுமங்கே
தந்தரமா அழைத்திலங்கே மந்தரமாக தலய அறுத்திலங்கே
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்கு
பாவக்கூத்து போடுறதற்குக் கொண்டுதான் போயிட்டார்கள்
என்றுமங்கே சொல்லிலங்கே அப்போது சொல்லுவாளே
அம்மம்மா! என்னுடைய தம்பிமாருக்கு அழுகாத புடிக்கி பாலக்குடம்மா
என்னுடைய தகப்பனார் வார நேரமாச்சி என்றுமங்கே சொன்னவுடனே
- அந்த

ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியா சொல்லுவாளே

என்னடி தங்கச்சீ! உன்னுடைய தம்பி
வீறிட்டு அழுகுறானே வெகுசத்தம் போடுறானே
ஒன்னொடைய தகப்பனாரு வந்துட்டாரா இல்லையான்னு கேட்டாளே
அப்போதும்.

கேட்டவொடனேதானும் காராளபுறந்த கருத்தவனம் தானுமங்கே
அப்போது சொல்லுவாளே, அம்மம்ம
என்னுடைய தகப்பனாரு வர நேரமாச்சி
தம்பிக்கி அழுகாதபுடிக்கி பாலக் குடம்மா
என்றுமங்கே சொன்னவுடனே
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியா கேப்பாளே அப்போது
ஒன்னொடய தகப்பன்போன வழிய சொல்லுறியா என்ன சொல்லுற
யின்னு கேக்கும்போது
என்னொடய தகப்பனாரு இன்னங்கொஞ்ச நேரத்துக்குள்ளாக
வந்துருவாரு
தம்பிமார்களுக்கு அழுகாதபுடிக்கி பாலக் குடம்மான்னு சொல்லிவிட்டு
காராளபுறந்த கருத்தவனம் புறப்பட்டாளே அப்போது.

கூட்டப்புளி ஊரணிக்கே போகும்போது தானுமங்கே - அப்போது
ஏழேரு மாட்டெயும் போயி ஒதுக்கித் தானுமங்கே -அப்ப
தகப்பனுடைய முண்டத்தக் கட்டிலங்கே - அப்போது
தங்கம்பு கண்ணீர தரயிலயே சோரவிட்டா
பொன்னான கண்ணீர பூமியிலெ சோரவிட்டா
நீலம்பு கண்ணீர நிலத்திலயே சிந்திவிட்டு - அப்ப
பகலம்பூ கண்ணீர பக்கமெல்லாம் ஓடவிட்டு

அறுபதுபாகம் கூந்தலயும் புழுதியிலே போட்டழுது - அப்போது
அழுது தவிச்சிலங்கே - அப்போது
தகப்பனார தானுமங்கே
சந்தனக் கட்டெவெட்டி சதிராக்த் தானடுக்கி
குங்குமங் கட்டெவெட்டி குமுகுமுன்னு தீமூட்டி
எரிச்சி தானுமங்கே
கூட்டப்புளி ஊரணியிலே கலக்கிமுக விட்டுட்டுத் தானுமங்கே
காராளபுறந்த கருத்தவனம் வந்துதானும் - அந்த
ஏழேரு மாட்டு சஞ்சிகத்தயும் அவுத்திலங்கே
ஓரேகட்டா கட்டிலங்கே
என்னப் படச்சவனே என்தகப்பா ஈஸ்வரனே - நான்
உத்தமீ பத்தினியாள் ஒருசொல்லு பாதகத்தி
வகுத்திலே புறந்திருந்த னானாக்கும் - என்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரனே - உனக்கு
அடியேன் அடித்தேரு ஓட்டி வப்பேன்
இந்த ஏழேரு மாட்டு சஞ்சிகம் தானுமங்கே
எனக்குக் குறுணிஉமி கனங்கூட இருக்கக்கூடாது
சுருமாடு கோதிலங்கே தலமேல தூக்கி வச்சவுடனே - அந்த
ஏழேரு மாட்டு சஞ்சிகமும் குறுணிஉமி கனங்கோட கிடயாது
மாட்டெயும் ஓட்டிலங்கே வெள்ளலூரு நாடு வந்து சேந்தாளே
அப்போதும்.

அப்ப சேந்தவுடனே தானுமங்கே - அப்ப
ஏழேரு மாட்டெயும் கொண்டாந்து விட்டுத் தானுமங்கே
மாடுகட்டும் சாவடிய மாட்டெ புடிச்சிக் கட்டவும் சொல்லிவிட்டு
களப்ப சாத்தும் சாவடிய களப்பய சாத்திமுக வைத்துட்டுத் தானுமங்கே
போயிநல்லெ பாக்கும்போது - சின்னாண்டி
வீறிட்டு அழுகுறாரு வெகுசத்தம் போடுறாரு

அப்போது
காராள புறந்த கருத்தவனம் சொல்லுவாளே
அம்மம்மா! என்னுடைய தகப்பனாரு வரவேண்டிய நேரமாச்சி
தம்பிக்கு அழுகாதபுடிக்கி பாலக் குடுவுமுன்னு சொன்னவுடனே
பால குடிக்கிறான் இல்லியே
ஒன்னுடைய தகப்பனாரு எங்கேடின்னு கேட்டாளே அப்போது.

அப்போது என்னுடய தகப்பனாரு - அங்கே
கூட்டப்புளி ஊரணியிலே குளிச்சி முழுகிலங்கே
இன்னுங்கொஞ்ச நேரத்திற்கு உள்ளாக வந்திருவாரு
தம்பிக்கு அழுகாதபுடிக்கி பாலக் குடும்மான்னு சொல்லிவிட்டு
கராளபுறந்த கருத்தவனம் இருக்கும்போது தானுமங்கே
அப்பவும் கொஞ்சநேரம் சென்டு
என்னடி உன்னுடய தகப்பனாரு இன்னும்வரக் காணுமே
என்றுமங்கே கேட்டாளே அப்போதும்.

அப்ப கேட்டவுடனே தானுமங்கே
காராளபுறந்த கருத்தவனம் சொல்லுவாளே
அம்மம்மா! ஒன்னொடய தம்பி நொந்நன்மாருக தானுமங்கே
ஏழுநல்ல பேருகளும் என்னுடய தகப்பனார
மந்திரமா அடைத்திலங்கே தந்திரமாகத் தானுமங்கே
தலய அறுத்திலங்கே
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்கு - அங்கே
எட்டுநாள் பாவக்கூத்துப் போடவும்
கொண்டுதான் போயிட்டார்கள் என்றுமங்கே சொன்னாளே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே - அந்த
ஏழுபேரோட புறந்த ஏழுவக்கா நாச்சியாளும்
தங்கம்பு கண்ணீர தரயிலயே சோரவிட்டா
பொன்னான கண்ணீர பூமியிலே சோரவிட்டா
நீலம்பு கண்ணீர நிலத்திலயே சிந்தவிட்டா
பகலம்பு கண்ணீர பக்கமெல்லாம் ஓடவிட்டு - அப்ப
அறுபதுபாகம் கூந்தலயும் அங்கே புழுதியிலே போட்டு அழுகுறாளே.

எட்டோட எட்டுநாளா அழுகும்போது தானுமங்கே
எட்டாவது நாளுத்தானும் - அந்தக்
காராள புறந்த கருத்தவனம் சொல்லுவாளே
இல்லையினா அழுகாதபுடிக்கி என் தம்பிமார்களுக்குப்
பாலக் குடம்மான்னு சொல்லும்போது
அப்போது சொல்லுவாளே - அந்த
ஏழுபேரோட புறந்த ஏழுவக்கா நாச்சியாளும்
அடியடியே! உன்னுடய தகப்பந்தலயக் கொண்டாந்து
என்னுடய கண்ணுக்கு முன்பாகக் காமிச்சாத்தான்
என்னுடய பிராணன் அடங்குமுன்னு சொன்னாளே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே
காராளபுறந்த கருத்தவனந்தானும்
என்னப் படச்சவனே என்தகப்பா ஈஸ்வரனே - நான்
உத்தமீ பத்தினியாள் ஒருசொல்லு பாதகத்தி
வகுத்திலே புறந்திருந்தே னானாக்கும் - என்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரனே
உனக்கு அடியேன் அடித்தேரு ஓட்டி வப்பேன் - நான்
செம்புராந்து ரூபங்கொண்டு என்னுடைய தகப்பந்தலய - நான்
திறமாக அடிச்சிவர வேணுமுன்னு சொல்லி
அப்போது காளிய தோத்தரவு செய்திலங்கே

காராளபுறந்த கருத்தவனம்
செம்புராந்து ரூபங்கொண்டு கூட்டப்புளி ஊரணியே போயிலங்கே - அப்ப
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலிலே

கட்டியிருந்த தலய அந்தரமாக அடிச்சிலங்கே
கொண்டு வரும்போதுதானும்
சிறுகொடி நாட்டுப் பயலுக ஏழுநல்ல பேருகளும்
பாருடா! முதச்சோன தலய
செம்புராந்து அடிச்சிக்கொண்டு போகுதுன்னு அங்கே பேசுனானே
அப்போதும்.

கொண்டாந்து தானுமங்கே தாயெடம் கொடுத்தவுடனே - அங்கே
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியா
அந்தத் தலயவும் வாங்கிலங்கே - அப்போது
எட்டோட எட்டுநாளா முகத்தோட முகம்வச்சி
அழுது இருக்கும்போது - அப்ப
காராள புறந்த கருத்தவனந் தானும்
இல்லையினா நல்லபுடியாக எந்திரிச்சி
என்னொடய தம்பிமார்களுக்குப் பாலக்குடுத்த வழியுமில்லெ
இல்லையின்னா நீ சாகுறாயுமில்லெயே - என்றுமங்கே
கேவலமா பேசினவுடனே தானும் - அந்த
ஏழுபேரோட புறந்த எழுவக்கா நாச்சியாளுக்கு - அங்கே
பிராணன் அடங்கிச்சங்கே!

அப்போது
காராளபுறந்த கருத்தவனம் தாயவயும் தூக்கிலங்கே
தகப்பனோட தலயவயும் தானுமங்கே தூக்கிமுக வைத்திலங்கே
சந்தனக் கட்டெவெட்டி சதுராகத் தானடுக்கி
குங்கும கட்டெவெட்டி குமுகுமுன்னு தீமூட்டி
எரிச்சி கலச்சிமுக விட்டுட்டுத் தானுமங்கே
காராளபுறந்த கருத்தவனம் - அங்கே
தெப்பக் குளமிறங்கி குளிச்சி முழுகிலங்கே
தம்பிமார்களுக்கு விலப்பாலும் வாங்கிலங்கே
உருட்டுப்பால் திரட்டுப்பால் திரட்டிலங்கே
தம்பிமார்களுக்குக் குடுத்துமுக இருந்தாளே.

அப்ப குடுத்தவுடனே தானுமங்கே அப்போது தானுமங்கே
சின்னாண்டி பேப்பெருமா இருபேர்களும் தானுமங்கே இருக்கும்போது
தானுமங்கே

முதச்சோனய வெட்டின நாள்முதலா தானுமங்கே
மழமாரி இல்லாம பஞ்சநாடாக போயிருச்சி

அப்போது சிறுகொடி நாட்டிலே
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் அந்த ஏழதலமக்காரனும்
முதச்சோனய வெட்டுன நாள்முதலா

மழமாரி இல்லாம போயிரிச்சி - நம்ம
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்குப்
பொங்கலும் வக்க வேணும்
ஏழுபேரும் ஏழுகிடாயும் புடிச்சி - அங்கெ
பொங்கலும் வக்கவும் வந்துதானும்
அடுப்பு துறந்தார்கள் அடுப்பு துறக்கவில்ல
நெருப்பு பத்தவச்சார்கள் நெருப்பும் புடிக்கவில்ல
என்னடா காரணம் அடுப்பு துறக்குறேன் அடுப்பு துறக்குதில்ல
நெருப்பு பத்தவக்கிறேன் நெருப்பு புடிக்கிதிலயே
என்றுமங்கே சொன்னவுடனே தானும்

கோயிலு பூசாரிமேலே ஆவுசம் வந்திலங்கே
அப்போது சொல்லுவானே
சிறுகொடி நாட்டு எசமான்களே!
வெள்ளலூரு நாட்டிலே யிருந்து வந்து அடுப்பு துறக்கவேணும்
நெருப்பு பத்தவய்க்கவேணும் முதப்பான பொங்கவேணும்
மொதக்கெடா வெட்டுப்பட்டாதான் ஒங்களுக்கு அடுப்பு துறக்குமய்யா
நெருப்பும் புடிக்கிமினு சொன்னானே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே
அப்போது ஏழுதலமக்காரனும்
ஒரு பொம்பள பயபுள இருக்குதுன்னு பேசிக்கிட்டாங்களே
எழுதடா காகிதத்த ஏவுங்கடா தூதுகள என்றுமங்கே சொல்லிலங்கே
காகிதமும் வெள்ளலூரு நாட்டுக்குப் போனவுடனே தானும் - அப்போது
காராள புறந்த கருத்தவனந் தானும் - அந்தக்
காகிதத்தயும் வாங்கிலங்கே வாசிச்சி பாத்துட்டு
நம்ப போகாம இருந்தாலும் நம்மளயும் வந்து இம்சுபண்ணி
நம்மளோடய தம்பிமார்களயும் நம்ப மாமன்மாருகள் கொன்டுபுடுவார்கள்
என்று சொல்லி தானுமங்கே

அப்போது
உருண்டச்சோறு திங்கும் உப்பநல்ல கறுப்பனங்கே
வச்சசோறு திங்கும் வகுத்து முனியனங்கே
நன்னாழி கன்டுக மூனுநல்ல பேரயும் கூப்புட்டு
அடடே! நம்ம கிடாயிலே ஒருகிடாயும் புடிச்சிலடா
அதுக்கு வேண்டிய சாமக்கிரயங்களும் புடிச்சி - நம்ம
கண்ணாடித் தம்பி கருமயிலத் தம்பியெ வண்டியிலெ பூட்டியடா - அங்கே

வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்கு
முன்பாகக் கொண்டுபோயி வண்டிய அவுருங்கடா
நான் பின்னாடி வாறமுன்னு சொல்லிவிட்டு - அப்போது
காராள புறந்த கருத்தவனம் தானுமங்கே - அந்தத்
தெப்பக் குளமிறங்கி குளிச்சி முழுகிலங்கே - அப்போது
தம்பிமார்களுக்கு உருட்டுப்பால் திரட்டுப்பால் திரட்டிலங்கே

தம்பிமாரு ரெண்டுபேருக்கும் குடுத்துத் தானுமங்கே
ஒரு பிரப்புநல்ல கூடயும் செய்து - அந்தக்
கூடயில தம்பிமாரு ரெண்டுபேரயும் தூக்கிமிக வச்சிலங்கே
ஏந்தகப்ப னேறும் குருத
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெயில குருதய அவுத்துத் தானுமங்கே
தம்பியவும் தூக்கிகிட்டு அந்தக் குருதமேல ஏறிமுக உக்காந்து
அந்த மூனேயமுக்கா நாழிகளுக் குள்ளாற
அந்தக் கூட்டப்புளி ஊரணி மேகரபுளியில் கொண்டுபோயி
குருதயும் கட்டிலங்கே - அந்தக்
குருத காலுக்குக்கீழ தம்பிமார ரெண்டுபேரயும் வச்சிபுட்டு
கூட்டப்புளி ஊரணியிலெ இறங்கிலங்கே
முகத்தக் கழுவிலங்கே போனாளே அப்போது.

வாணிகருப்பணசாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்கு
மின்பாகப் போயிநின்டு சாமியவயும் கையெடுத்துக் கும்புட்டுத் தானுமங்கே
அப்போது நிக்கும்போது தானும்
ஏழுதலமக்காரனும் சொல்லுவானே அப்போது
நம்ம நிக்கிறது கண்ணு தெரியவில்ல
வீரமுள்ளவனுக்குப் புறந்ததுனாலே அவுக சாமியத்தான் கும்புடுறாக
நம்மளக் கும்புட அவுகளுக்குக் கையீ வரலயினு - இவன்
ஏசுறானே பேசுறானே அதயும் பொருட்படுத்தாத புடிக்கிக்
காராள புறந்த கருத்தவனம் தானுமங்கே
அடுப்பு துறந்தாளே நெருப்புப் பத்தவச்சிலங்கே - அப்போது
முதப்பான பொங்கிலங்கே - அங்கே
முதக்கிடாயும் வெட்டுப்பட்டுதங்கே அப்போதும்.

அப்ப வெட்டுப்பட்டவுடனே தானுமங்கே - அங்கே
சின்னாண்டி வீறிட்டு அழுதாரே வெகுசத்தம் போட்டவுடனே தானுமங்கே
அந்த சத்தமும் இவன் ஏழுநல்ல பேரு காதிலேயும் விழுந்தவுடனே
என்னடா நம்ம கூட்டப்புளி ஊரணியே அருகாம
கொழந்த சத்தம் கேக்குதடா
பொம்பளப்பய புள்ளயினா போட்டுட்டு வந்துருங்கடா
ஆம்பளப்பய புள்ளயின்னா கொண்டு வாங்கடா - நம்ப
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்குத்
துள்ளுமறி குடுப்பமுன்னு சொல்லிலங்கே
இவுங்கெ கூடியாடிப் பேசிமுக இருக்கும்போது தானுமங்கே
இந்தப் பேச்சி கோயிலுபூசாரி காதிலேயும் விழுந்துதங்கே.

அப்போது
இவுங்க அடுப்புகளும் பத்தவச்சி அடுப்பு துறந்திலங்கே
நெருப்பு பத்தவச்சிலங்கே பொங்கலு வச்சவுடனே கோயிலுபூசாரி தானுமங்கே
காராள புறந்த கருத்தவனத்த பக்கத்திலெ கூப்புட்டு

அம்மம்மா! ஒன்னொடய தம்பிமார்களுக்கு ஆவத்து வந்துருச்சி
எந்தவிதமாச்சும் போயி ஒன் தம்பிமார்கள் ரெண்டுபேரயும் தூக்கிகிட்டு
நீவெள்ளலூரு நாடுபோக வேணுமுன்னு சொன்னானே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே
காராள புறந்த கருத்தவனம் அப்போது போயித்தானும் - அங்கே
வரப்பு மறசவச்சி அங்கே செடிமறவு வச்சிலங்கே
இந்தப் பிரகாரமா ஓடிமுக போறாளே.

கூட்டப்புளி ஊரணியே ஓடிலங்கே
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெயில குருதய அவுத்துத்தானும்
தம்பிமாரதூக்கிக் குருதமேல வச்சிகிட்டு - அங்கே
மூனேயமுக்கா நாழிகளுக் குள்ளாற
வெள்ளலூரு அரண்மனையும் போயிநல்லெ சேர்ந்தவுடனே தானுமங்கே

அப்போதுதானும் இவுகளும் தானுமங்கே - அங்கே
கிடாய்களும் வெட்டிலங்கே - அப்போது
அவுசியமான வுடனே - அப்போது
ஏழுபேரு கிடாயிலயும் ஏழுகுழந்தய வெட்டுனார்கள் பூசாரிகள்.
அந்த ஏழுபேரு பானயிலும் ஏழாப்பசோறு எடுத்திலங்கே
காளாஞ்சி வெத்தலபாக்குகள் கணக்குடனே பிரிக்கவும் தானுமங்கே

அப்போது இந்த வெள்ளலூரு நாட்டுலதானும்
குரங்குகள் வெட்டவில்ல ஆப்பச்சோ றடிக்கவில்ல - அங்கெ
காளாஞ்சி வெத்தலபாக்கு கணக்குடனே பிரிக்கலயே
என்னடா கோயிலு பூசாரி - நம்ம
ஆளாவுள்ளவன் ஊட்டுலமட்டும் இந்தமாதிரி செஞ்சிருக்கானே
புடிங்கடா நம்ம
வாணி கருப்பணசாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்கு
துள்ளுமறியிலே குடுப்பமுனு சொன்னவுடனே

அப்போது
கோயிலு பூசாரியும் சொல்லுவாரே - அப்போது
சிறுகுடி எசமாங்களே! நான் சொல்லுவதக் கேட்டு
என்னய வெட்டுங்க குத்துங்க ளென்றுமங்கே சொன்னவுடனே
என்னடா காரணமுன்னு கேக்கும்போது
இந்தக் கோயிலு உற்பத்தியான காலத்திலிருந்து
வெள்ளலூரு நாடும் இந்தச் சிறுகுடி நாடுந்தானும்
இருக்கும்போதுதானும் வெள்ளலூரு நாட்டுல
என்னுடைய பாட்டன் பூட்டன் உள்ள காலத்திலெயிருந்து
உங்க பாட்டன்பூட்டன் உள்ள காலத்திலெயிருந்து
நாங்க வெள்ளலூரு நாட்டுல அகப்பச்சோறு எடுக்கிறதில
காளாஞ்சி வெத்திலபாக்குகள் கணக்குடனே பிரிக்கிறதில்ல
இந்தச் சிறுகுடி நாட்டுலதான் - நாங்க

காளாஞ்சி வெத்திலபாக்குக குரங்குகள் வெட்டுறது
என்றுமங்கே சொன்னவுடனே

குடுத்தாலும் குடுங்க குடுக்கலையினாலும் எடுத்துக்குங்க
என்றுமங்கே சொன்னொடனே அதிலே ஒருதன் சொல்லுவானே
அப்போது
முதச் சோனய வெட்டுன நாள்முதலா மழமாரி இல்லாம போயிரிச்சி
இனி கோயிலு பூசாரிய வெட்டுனாமாக்கும்
அதுஒரு கருமந்தமா நின்டுக்கிருமடா - அப்போது தானுமங்கே
கேட்பானே அதுலெ ஒருத்தன் அப்போது தானும் - அங்கெ
கூட்டப்புளி ஊரணி அருகாமெ குழந்தச்சத்தம் கேட்டுச்சடா
என்னடா காரணமுன்னு கேக்கம்போது - அப்போதுதானும்
அதுசரி எந்தக் காத்தோ தூத்தல பாத்துக்குருவோமுடா
புறப்படுங்கடான்னு சொல்லிலங்கே - அங்கே
புறப்பட்டு வரும்போது தானுமங்கே ஒருபர்லாங்கு தாண்டுனார்கள்
நல்லமழ பேஞ்சிருச்சி நாடூஉ செழிச்சிருச்சி
செல்லமழ பேஞ்சிலங்கே சீம செழிச்சிருச்சி - அப்போது தானுமங்கே
அவர்களும் சிறுகொடி நாடுகளும் போயிநல்லெ - அப்ப
கண்ணாடித்தம்பி கருமயிலெ தம்பியெ - அந்த
உருண்டச்சோறு திங்கும் உப்பநல்லெ கறுப்பனங்கே
வச்சசோறு திங்கும் வகுத்து முனியனங்கே
நன்னாழிக் கன்டுக ரெண்டுநல்லெ பேருந்தானுமங்கே
வண்டியிலெ பூட்டிலங்கே கிடாயவயும் தூக்கிமுக போட்டிலங்கே -
அங்கெ
வெள்ளலூரு நாடுந்தானும் போயிநல்லெ சேர்ந்திலங்கே

அப்போதுதானும் அந்தக் கிடாயவயும் உரிச்சித்தானும்
பதினெட்டுவுள்ள கிராமத்லவுள்ள குடிபடயூரா வரச்சொல்லி
விருந்துகளும் வைத்திலங்கே இருக்கும்போதுதானும் - அப்ப
சின்னாண்டி பேப்பெருமா அஞ்சீ வயதாகி அறியா பிரயமாகி
பத்தூ வயதாகி பள்ளீ குமரனானார்கள்.
அப்போது
காராள புறந்த கருத்தவனந் தானும்
எண்ணீ நினைத்தாளே எண்ணமற்ற சிந்தையிலே
பார்த்தூ நினைத்தாளே பலகோடி யோசனைகள்
ஆரெ நினைத்தாளே அளவற்ற சிந்தையிலே
எவெர நினைத்தாளே ஏலமற்ற சிந்தையிலே
நம்மளுடைய தம்பிமார்களுக்கு நம்ம படிக்கவச்ச மானாக்கும்
படிப்புகள் வராது ளென்றுசொல்லி தானுமங்கே
உள்ளங்கையி சாத்திரத்த ஊடுருகத் தான்பார்த்தாள்
வல்லங்கையி சாத்திரத்த போட்டெறிந்து தான்பார்த்து - அங்கே
புறங்கையி சாத்திரத்த போகவரத் தான்பார்த்து - அப்போது
காராள புறந்த கருத்தவனம் தானுமங்கே

எந்தஊருல நல்லவிதமாகச் சொல்லிக் குடுக்கிறார்கள்
என்று சொல்லித் தானுமங்கே
அரியல்குடி அழகுநல்லெ வாத்தியாரு புள்ளய்களுக்கு
ஆயிரம் புள்ளய்களுக்குச் சொல்லிமுக குடுக்கிறார்கள்
நல்லவிதமாக ளென்றுசொல்லித் தானுமங்கே - அப்போது
காராள புறந்த கருத்தவனம்
சின்னாண்டி பேப்பெருமா இருவரயும் கூட்டிமுக
அரியல்குடி போயிநல்லெ சேர்ந்தார்கள்.

அப்ப சேந்தவுடனேதானும்
அரியல்குடி அழகுநல்லெ வாத்தியாரெடம் கொண்டுபோயி
சின்னாண்டி போப்பெருமா இருவரயும் ஒப்பிச்சித் தானுமங்கே
எல்லோரும் எண்ணிக் குடுப்பார்கள் நான் அள்ளித் தருவனய்யா
என்னுடைய தம்பிகளுக்கு
வாதிகள் வந்திலங்கே வழிபார்த்து நிக்கிறார்கள் - அங்கே
எதிரிகள் வந்திலங்கே எதிர்பார்த்து நிக்கிறார்கள் - என்னுடைய தம்பீ
படுத்து இருக்கும்போது ஒக்க படுத்திருக்க வேணும்
ஒன்னுக்குப் போனாலும் பின்னால போகவேணும்
ரெண்டுக்குப் போனாலும் பின்னால போகவேணும்
இந்தப் பிரகாரமா என்னுடைய தம்பிய வச்சிருக்க வேணுமுனு சொல்லி
அந்த அரியல்குடி அழகுநல்லெ வாத்தியாரெடம் - அப்ப
கராள புறந்த கருத்தவனம் ஒப்பிச்சுட்டுத் தானுமங்கே
வெள்ளலூரு நாடு திலும்பிமுக வந்தாளே அப்போதும்.

அப்ப வந்தவுடனே தானும்
பேப்பெருமா சின்னாண்டி இருபேரும்
அரியல்குடீ அழகுநல்லெ வாத்தியரெடம் படிச்சிமுகு வரும்போது
சின்னாண்டி எட்டுநாளய்க்கி உள்ளாகத்
தீரப் படித்தாரே தீர்ந்த கணக்கானார்
மூகப் படிச்சாரே முகந்த கணக்கானார்
இந்திரங்கள் மந்திரங்கள் இத்தனையும் கற்றிலங்கே - அங்கே
பதினெட்டு வகுப்பயும் சின்னாண்டி பாங்குடனே தான்படிச்சி
ஆயிரம் புள்ளய்களுக்கும் சின்னாண்டி சட்டாம்புள்ளயாக இருந்துமுக
வாறாரே - அப்ப
பேப்பெருமாளுக்கு 'ஆனா'ங்குற எழுத்துக்கு அச்சாரம் தெரியலயே
பேப்பெருமா இருக்கும்போது தானும்

ஒருநா தாபாவிலே அப்போது தானுமங்கே
பள்ளிகுடத்திலே கொட்டியிருந்த மணலுக ளெல்லாம் புணியமில்லாத
போயிடிச்சி
அப்போது சொல்லுவாரே அரியல்குடீ அழகுநல்லெ வாத்தியாரு
இந்தமணல பூரா அப்புறப்படுத்திவிட்டு வேறமண்ணு அள்ளிவாங்கன்னு
சொல்லி
அப்ப பள்ளிகுடத்து புள்ளயெடம் சொன்னவுடனே - அங்கே

பள்ளிகுடத்துக்கு உள்ளே கிடந்த மணலப்பூரா அப்புறப்படுத்திலங்கே
ஆயிரம் புள்ளய்களும் புறப்பட்டுப் போகும்போது சின்னாண்டி
பின்னாலே போகிலங்கே
நாலு நல்லெமண்ணு அள்ளிவரச் சொல்லுறேன் ளென்றுமங்கே
கேட்டவுடனே - அப்ப
அரியல்குடி அழகுநல்லெ வாத்தியாரும் சொன்னாரே
வெள்ளலூர ரெசமானே நீங்க போக வேணாம்
பள்ளிகுடத்து புள்ளய்க அள்ளிவருமய்யா ளென்றுமங்கே
சொன்னவுடனே
அப்போது சின்னாண்டி சொன்னாரே
அது நல்லெமண்ணெ அள்ளாதபுடிக்கி புழுதிமண்ணெ அள்ளி
வந்துருங்கெ
நான் நல்லெமண்ணு பாத்து அள்ளிவரச் சொல்லுறமுன்னு சொல்லிலங்கே
சின்னாண்டி பின்னாலெ போகும்போது போற போக்குலயே
ஆவரஆக்கய ஓடிச்சிலங்கே கையிலெயும் தான்புடிச்சி - அப்போது
ஆயிரம் புள்ளய்களயும் போயி
இந்த மணல அள்ளு இந்தமணல அள்ளாதேயினு அடிச்சி புடிச்சி
இம்சிகள் செஞ்சாரே.
அப்ப செஞ்சவுடனே தானுமங்கே - அப்போது
அதுலரெண்டு கண்கருத்தபய சொல்லுவானே
தாயுந் தகப்பனயும் அறியாத பயபுளக்கி
படுப்புகள் வந்துருச்சாம் நம்மள அடிக்கிது புடிக்கிது
இம்சிகள் செய்யிறான்டா ளென்றுமங்கே சொன்னவுடனே
அப்போது தானுமங்கே சின்னாண்டிக்கிக்
கண்ணு சிவந்திலங்கே கடுங்கோப மாகிலங்கே
மூக்குச் சிவந்திலங்கே முன்கோப மாகிலங்கே
கொங்கெமுழி கண்கரெண்டும் கொழுந்துவிட் டெரியுதங்கே
நீலமுழி கண்கரெண்டும் நெருப்புத்தன லாடுதங்கே - அங்கே
வண்ணமுழி கண்கரெண்டும் வாட்டிப்போ ராடுதங்கே -அப்போது தானும்
அந்த ஆவர ஆக்கய தலயசுத்தி எறிஞ்சுட்டு
அங்கே புறப்பட்டாரே அரியல்குடி பள்ளிகுடத்துக்குத் தானுமங்கே
அப்ப அரியல்குடி அழகுநல்லெ வாத்தியாரு
சின்னாண்டி வர்ற வேகத்த பார்த்திலங்கே ஓடிமுக போறாரே
முன்னாலெ ஓடிப்போயி வெள்ளலூர ரெசமானே
உங்கள அடிச்சபய என்னெடத்தில் சொல்லுமய்யா
நான் கட்டிவச்சி உதய்க்கிறே னென்றுமங்கே கேக்கம்போது
அப்ப சின்னாண்டி சொல்லுவானே!
ஐயய்யா என்ன பள்ளிகுடத்து புள்ளய்வோ
அடிக்கவில்ல புடிக்கவில்ல இம்சிகள் செய்யவில்ல
என்னோடநீ பின்னாலவர பிரியமிருந்துதானாக்கும் என்பின்னால
வாருமய்யா
இல்லையினு சொன்னாக்கா பள்ளிகுடத்தவச்சி நடத்துமய்யா

நான் வெள்ளலூருநாடு போக வேணுமினு சொல்லிவிட்டுத் தானுமங்கே
அப்போது சின்னாண்டி வந்திலங்கே
தங்கப்புடி எழுத்தாணிய கையிலெயும் தானெடுத்து
புத்தகமும் கையிலெயும் தானெடுத்து புறப்பட்டாரே வெள்ளலூரு
நாட்டுக்கே.

அப்ப வெள்ளலூருநாடு திலும்பிமுக வரும்போது
அரியல்குடி அழகுநல்லெ வாத்தியாரு அப்போது சின்னாண்டிக்குப்
பின்னாலே
ஓடிமுக வாறாரே காணக் காணத்தானும் - அப்போது சின்னாண்டி
வெள்ளலூரு அரண்மனய வந்து நுழஞ்சவுடனேதானும் - அப்ப
அரியல்குடி அழகுநல்ல வாத்தியாரு வந்துநல்லெ சேந்தாரு
சேந்தவுடனே தானுமங்கேக - அப்போதுதானும்
காராள புறந்த கருத்தவனம் தானுமங்கே
வாத்தியாரும் தம்பியும் வந்தவுடனேதானும்
ஈச்சரெடுத்துத் தானுமங்கே அப்போது போட்டுத் தானுமங்கே
வாத்தியாரெ உக்கார வைத்திலங்கே - அப்போதுதானும்
சின்னாண்டி தானுமங்கே இந்தப் பதுனெட்டு வகுப்பயும்
அக்காளெடம் பாங்குடனே ஒப்பிச்சித் தானுமங்கே
வாத்தியாருக்குத் தானுமங்கே தகப்பனுடுத்தும் வேட்டியிலதானும்
ஒருசோடி வேட்டியெடுத்துக் குடுத்திலங்கே
ஒரு சாக்கிலயும் பணத்தயும் அள்ளிமுக கட்டிலங்கே
குடுத்து அனுப்பிச்சி வச்சுட்டுத் தானுமங்கே - அப்போது
சின்னாண்டி தானுமங்கே படுத்துத்தானும்
காலயில எந்திரிச்சித் தானுமங்கே
அக்காளெடம் கேப்பாரே அப்போது.

அக்கையடி அக்கெ! நம்மளொடய தாயுந் தகப்பனும் எங்கக்கா
என்று கேக்கும்போது - அப்போது
காராள புறந்த கருத்தவனம் சொன்னாளே
அடடே தம்பி! நம்மளுடய தாயும் தகப்பனுந்தானும் - நம்மளுடய மாடு
ஆனமல அழகர்கோவில் மலயிலெ நிக்கிதப்பா
இன்னய்க்கோட எட்டுநாளாச்சி நம்ப தாயும் தகப்பனும் போயி
இன்னம் எட்டுநா செல்லுமடா தம்பி வர்றதுக்குன்னு சொன்னாளே
அப்போதும்.

அப்ப சொன்னவொடனே தானும் சின்னாண்டி தானுமங்கே
சாஞ்சிமூஞ்ச கட்டிலிலே சாய்ந்தூ படுத்திலங்கே - அப்போது
நம்ம தாயுந்தகப்பனும் வந்தாத்தான் நான் பல்லுவிளக்கிச் சாப்புடுவேன்
இல்லையினு சொன்னாக்கா நான் சாப்புட முடியாதுனு படுத்து இருக்காரே.

எட்டுநாளும் எட்டு நாழியளுஞ் சென்டுதானும்
எட்டாவது நாளு காலய்யில எந்திரிச்சி
எங்கடீ நம்ப தாயுந்தகப்பனும் இன்னம் வரக்காணுமக்கா
என்றுமங்கே கேட்டவுடனே

இன்னம் மூனுநாள் செல்லுமப்பா நம்ப தாயுந்தகப்பனும் வாறதுக்கு
என்றுமங்கே சொன்னொடனே
மூனுநாள் மூனுராத்திரி படுத்து இருந்தாரே
மூனாவதுநாள் காலெயில எந்திரிச்சி - அப்போது
சாஞ்சிமூஞ்ச கட்டிலிலே சாஞ்சிமுக உக்காந்துதானும்
அக்கையடி அக்கெ! நம்ப தாயுந்தகப்பனும் போனவழிய சொல்லுறியா
இல்லையினு சொன்னாக்ா என் தங்கப்புடி எழுத்தாணிக்கி
என்னுடய உயிரநான் மாச்சிகிட்டு நிக்கவா
என்றுமங்கே கேட்டவுடனே
அப்போது
காராள புறந்த கருத்தவனம் - தம்பிய
வாரிப் புடிச்சிலங்கே குடங்கையினாலெ ஏந்திலங்கே
அடடே தம்பி சின்னாண்டி! நம்மளுடைய தாயுந்தகப்பனுந் தானுமப்பா
நம்மளுடய தகப்பனாரு இந்த வெள்ளலூரு நாட்டிலே, புறந்தவரு
நம்மளுடய தாயாரு சிறுகொடி நாட்டிலே புறந்தவர்கள்
நம்மளுடய தாயாரோட கூடப்புறந்த எழுநல்ல மாமன்மார்கள்
நம்ம ஏழுநல்ல பேரோட புறந்த எழுவக்கா நாச்சியப்பா நம்மளொடய
தாயாரு
அப்போது நம்மளொடய தகப்பனாரு நம்ம தாயார கட்டித் தானுமங்கே
கொண்டாந்து வெள்ளலூரு நாட்டிலே வச்சி இருக்கும்போது
நம்மளுடய தாயாருக்கு நான்பிறந்து பத்தூ வயதாகி அதுக்கு பிற்பாடு
நீங்க இருபோரும் புறந்து ஏழுநாள் வீட்டு
அறவீட்டுக் குழந்தயா யிருக்கயிலே
நம்மளுடய தாயாருக்கு எந்தவிதமான சீதனங்கள்
நம்ம மாமன்மாரு குடுக்கக் கிடயாதாம்
அப்போது தானுமங்கே - நீங்க
ஏழுநாள் வீட்டு அறவீட்டுக் குழந்தயா யிருக்கும்போது
நம்ம மாமன்மாருக நம்மளுடய தாயாருக்கு
ஆடுகுடுத்தா அழிஞ்சிபோகும் மாடுகுடுத்தா அழிஞ்சிபோகும்
கனத்த பணங்காசி குடுத்தா அழிஞ்சி போகுமுனு சொல்லி
நம்ப வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன்
கோவிலுக்குத் தென்பாங்கு கூட்டப்புளி ஊரணிக்கு மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்சையங்கே அம்பது மாகாணி குறுக்கமும்
நம்ப தாயாருக்குச் செப்புப்பட்டயம் ஏழுதிக் குடுத்திலங்கே
நம்ப தகப்பனாருதானும் அந்த எடத்திலே தானுமங்கே
ஏழுழவுதிலங்கே எள்ளும் பருத்தியும் கலந்து விதச்சி வரும்போது
நம்பளுடய மாமன்மாரு நம்ப தகப்பனார தந்தரமா அழைத்திலங்கே
மந்தரமாக நம்பதகப்பன் தலய அறுத்திலங்கே - அந்த
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலிலே
எட்டுநாள் பாவக்கூத்துப் போடுறதுக்குக் கொண்டுதான் போயிட்டார்கள்
இன்னக்கித் தாயும் நாந்தான்டா தகப்பனும் நாந்தான்டா
உன்னோட கூடப்பொறந்த புறவியும் நாந்தான்டான்னு சொல்லி அழுதாளே
அப்போதும்.

அப்ப அழுதவொடனே தானுமங்கே - அப்போதுதானும் சின்னாண்டி
மூனேயமுக்கா நாழியறுதி துக்கம் அடைந்திலங்கே
மூனேயமுக்கா நாழி சென்டுதானுமங்கே
சிரிச்சி மகிழ்ந்திலங்கே அப்போது போயிலங்கே
தெப்பக் குளமெறங்கி குளிச்சி முழுகிலங்கே - அப்ப
துக்கம் கழித்துத்தானும் - சின்னாண்டிக்கி
ஈக்கஞ்சம்பா நெல்லெடுத்துத் தீட்டி மறுப்பொறுக்கி
ஆக்குனா சோறுகள் ஆவரம்பூ சைகளிலே
பொங்குனா சோறுகள் புளியம் பிச்சைகளிலே
பதினெட்டு வகக்கறியும் பாங்குடனே தான்சமைத்து - அப்போது
தங்கநல்ல கும்பாவ தாங்கி தனிவிளக்கி
வெள்ளிநல்ல கும்பாவ விரும்பிநின்று தான்விளக்கி
தம்பிக்கி சாதம் படைத்தாளே
சாப்பிட்டீ ளப்பாநீர் சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளப்பாறி இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு - சின்னாண்டி
சாஞ்சிமூஞ்ச கட்டிலே சாஞ்சிமுக உக்காந்து தானுமங்கே
அக்கையடி அக்கை! நம்மளுடய கிராமஞ் சுத்திப்பாக்க போகவேணும் - எனக்கு
வாழ்த்தி வரங்குடக்கா வலதுபுறங் கைகுடக்கா
போத்தி வரங்குடக்கா எனக்குப் போகவர கைகுடக்கா
என்றுமங்கே கேட்டொனனே - அப்போது சொல்லுவாளே
நமக்குக் கிராமமுங் கிடயாது பூமியுங் கிடயாது
இந்த வெள்ளலூரு அரண்மனயத் தவர - நமக்கு
எந்விதமான பூமியுங் கிடையாதுனு சொன்னாளே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே
என்னடி அக்கை நீ சொல்லுற?
நம்ம தகப்பனாரு இந்த வைகயகத்த ஆண்டாருனும் சொல்லுறெ
திருப்பியும் நமக்குக்
காணியுங் கிடயாது பூமியுங் கிடயாதுனும் சொல்லுறியெ
என்றுமங்கே கேட்டவுடனே

அடடே தம்பி சின்னாண்டி! நமக்குக்
கொஞ்சம்போல கிராமம் இருந்தது
இந்த வெள்ளலூரு அரண்மனயக் கட்டி முடிக்கிறதுக்கு
நம்மளொடய தகப்பனாரு கொஞ்ச கடனாளியா போயிலெங்கே
நம்ம கிராமத்தவித்து அந்தக் கடன அடச்சுட்டு இருக்கிறதுக்குள்ளாக
அவமோசமாக நம்ம தகப்பனாரு மாண்டு இறந்தார்கள்
அதுனாலதான்ட நமக்குக் கிராமமும் கிடயாது பூமியுங் கிடயாது
இன்னமேதான் நாம கிராமம் பூமி வாங்கிக்கிற வேணும்
என்றுமங்கே சொன்னவுடனே - அப்போது சின்னாண்டி
சாஞ்சிமூஞ்ச கட்டிலிலே சாய்ந்து படுத்துகிட்டு
மேவீடு அலமாச ஏறிட்டுப் பாத்தாரெ - அப்ப

ஆஞ்சாவி பெஞ்சாவி பதுனெட்டு சாவியும்
அப்போது அலமாசுல தொங்கிமுக கிடந்துதங்கே - அப்போது
எந்திரிச்சித் தானுமங்கே அந்தச் சாவிய எடுத்திலங்கே
ஒரு பீரோவத் திறந்திலங்கே பாக்கும்போதுதானும்
ஏழரடிச் சதுரமுள்ள ஒரு இருப்புப்பொட்டி ஒன்று இருந்திது.

அதயும் துறந்து எடுத்துமுக பாக்கும்போது
பத்தரங்கள் இருந்தொடனே அப்போது எடுத்துமுக பாத்தாரே
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்டெ
ஏழு எருக்கம்பட்டி மேலவளவு கீழவளவு
ஆத்தூரு அருகுவேரு அந்தப் பதுனெட்டு கிராமமும்
பாங்குடனே செப்புப்பட்ட எழுதிவக்க
அவுகளுடய பாட்டன்பூட்டன் உள்ள காலத்திலருந்து
அவருடடய தகப்பன் உள்ள காலத்து அறுதி
அங்கெ ரசீதுகளும் போட்டு பட்டாவும் இருக்குதங்கே
புழுதீ கணக்கு சரியாவும் இருக்குதங்கே

அப்போது கேப்பாரே! என்னடி அக்கெ - நமக்குக்
கிராமமுங் கிடயாது பூமியுங் கிடயாதுனு சொன்னியே - அங்கே
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்டெ
ஏழு எருக்கம்பட்டி மேலவளவு கீழவளவு -அங்கே
ஆத்தூரு அருகுவேரு பதுனெட்டு கிராமமும்
பாங்குடனே செப்புப்பட்டெ எழுதி இருக்குதே
நம்மளுடய பாட்டன்பூட்டன் உள்ள காலத்திலேயிருந்து
நம்ம தகப்பனார் உள்ள காலத்தறுதி
ரசீதுகளும் போட்டு இருக்குதே
என்றுமங்கே கேட்டாரோ அப்போதும்.

அப்ப கேட்டவுடனேதானும்
காராளபுறந்த கருத்தவனம் சொல்லுவாளே
அடடே தம்பி சின்னாண்டி!
நம்மளுடய காணி பூமியில் சுண்டுவிரலுக்கு மண்ணு எடுக்கிறதுக்கு
இந்த வையகத்திலெ மானிடங் கிடயாது - உனக்கு
வயதுகள் கிடயாது, வயதுகள் வந்ததுக்குப் பிற்பாடு
நீ கிராமம் சுத்திப் பார்க்கலாமப்பா என்னுமங்கே சொன்னவுடனே

அப்போது சொல்லுவாரே சின்னாண்டி
அதெல்லாம் முடியாது
இன்னக்கிநான் கிராமஞ் சுத்திப்பாக்கவேணும் - எனக்கு
வாழ்த்தி வரங்குடக்கா வலதுபுறங் கைகுடக்கா
போத்தீ வரங்குடக்கா போகவர கைகுடக்கா
என்றுமங்கே கேட்டவுடனே
அப்படிநீ கிராமஞ்சுத்திப் பாக்குறதா இருந்துதானாக்கும்
நான் சொல்லுற புடிக்கி செஞ்சியானாக்கும் - நீ
கிராமஞ்சுத்திப் பாக்குறது உண்மதான்னு சொன்னாளே அப்போதும்.

என்னக்கான்னு கேட்டவுடனே
நம்மளுடைய தகப்பனாரு நம்ப வெள்ளலூ ரு அரண்மனய்க்கி முன்பாக
ஒரு கல்லு ஒன்று கிடக்குது - அந்தக் கல்ல
இருகையுங் கொண்டு நம்ம தகப்பனாரு
முழங்காலுக்கு மேலதூக்கி கீழயும் போடுவாரு
அதயும்நீ தூக்கிப் போட்டியானாக்கும்
நீ கிராமஞ்சுத்திப் பாக்குறது உண்மைதான்னு சொன்னாளே அப்போதும்.

அப்போது சின்னாண்டி போயித் தானுமங்கே
அந்தக் கல்லையும் தானுமங்கே பெருவிரலினாலே தூக்கிமுகு
எறிஞ்சிலங்கே;
சுண்டு விரலினாலே கீழ இறக்கிமுக வச்சாரே.

அப்போது இதுதானா சம்ப்ராயம்?
இன்னமே ஏதாச்சும் சம்ப்ராயம் இருக்குதா?ன்னு கேக்கம்போது
நம்ம ஆயிரம்அடி உள்ள ஈட்டி ஒன்னு இருக்குது
அதப் பூமியிலநாட்டி நம்ம தகப்பனாரு அசச்சி மிதிச்சி இழுப்பார்கள்
என்றுமங்கே சொல்லிலங்கே - அந்த
ஈட்டிய எடுத்துக் கொண்டாந்து பூமியிலே நாட்டுனாளே.
அப்போது சின்னாண்டி பெருவிரல்னால தட்டிவிட்டு
சுண்டுவிரல்னால இழுத்துமுக தூக்கீ எறிஞ்சவுடனே - அப்போது
காராள புறந்த கருத்தவனந் தானும்
அடடே தம்பி! இந்த வையகத்திலே
உன்னோடு எதுத்துப் போராடுறதுக்கு இன்னமெ ஒருத்தனுங் கிடயாது
எந்த மானிடவனுங் கிடயாதுடா ளென்றுசொல்லி தானுமங்கே

தம்பிக்கித் தானுமங்கே தகப்பன் போட்டிருந்த
ஒட்டுக் கடுக்கனே ஒழுகயாகத் தான்மாட்டி - அப்போதுதானும்
வண்டிக் கடுக்கனே வரிசயாகத் தான்மாட்டி
அஞ்சி விரலிலங்கே ஐம்பொன்னிலே கணையாழி
இடுப்புக்கு ஏழுசுத்து அரணா
கழுத்துக்குத் தங்கநல்ல சூடாவும்
இத்தனையும் தான்மாட்டி தானுமங்கே
தெக்குத்திச் சோமனங்கே தெம்மடலா வல்லவெட்டு
வடக்கித்திச் சோமனங்கே வடமடலா வல்லவெட்டு
இத்தனயும் தான்மாட்டி, தகப்பனேறுங் குருத
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சியம்
பூட்சி மட்டெயில குருதய அவுத்திலங்கே - அப்போது
சின்னாண்டி குருதமேல ஏறிமுக உக்காந்தவுடனே

காராள புறந்த கருத்தவனம்
வாழ்த்தி வரங்குடுத்தா தம்பிக்கி வலதுபுறங் கைகுடுத்தாள்
போத்தி வரங்குடுத்தா தம்பிக்கிப் போகவர கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும்சின்னாண்டி தங்கமுகமாக வரவேணும்

நடுப்படயா போனாலும் சின்னாண்டி மறுப்படக் கூடாதுன்னு
அப்போது அனுப்பிச்சி வச்சாளே அப்போதும்.
அப்ப வச்சவுடனே தானுமங்கே சின்னாண்டி தானுமங்கே
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெயிலெ குருதயிலெ தானுமங்கே - அங்கே
தும்பப்பட்டி துளசிபட்டி மாம்பட்டி மல்லாகொட்டெ
ஏழு எருக்கம்பட்டி மேலவளவயெங்கே கீழவளவயெங்கே
போகும்போதுதானும் அந்தப் பதுனெட்டுவுள்ள
கிராமத்திலவுள்ள குடிபடெ பூராவும் இவ்வளது காலத்துக்குப் பிற்பாடு
நம்ம வெள்ளலூ ரெசமான் நம்மகிராமஞ் சுத்திப்பாக்க
வந்திருக்கார்

கள்ன்னு சொல்லி

தேருந் திருவிழாவும் இருக்குதங்கே அப்போது - அப்ப
பதுனெட்டு கிராமமும் சின்னாண்டி பாங்குடனே சுத்திலங்கே - அந்தக்
கூட்டப்புளி ஊரணியும் மேகரப்புளியுந்தான் குருதயும் போயி நின்டூது.
குருதயவிட்டு கீழே இறங்கிலங்கே - அப்ப
புளியாமரத் தூரடியே குருதயக் கட்டித்தானும் போறாரே சின்னாண்டி - அங்கே
தெப்பக்குளத்திலே இறங்கிலங்கே முகத்தக் கழுவிலங்கே
காலூ கையி சுத்தம் பண்ணித்தானும்
புளியில வந்துதானும் கரமேல நின்டுதானும் - அப்போது
பாக்கும்போது தானுமங்கே - அங்கேதானும்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்குத் தென்பாங்கு
கூட்டப்புளி ஊரணிக்கி மேல்பாங்கு
அருகுவெத்தி பிஞ்சையங்கே அம்பது மாகாணி குறுக்கம்
நம்ம தாயாருக்குச் செப்புப்பட்டயம் எழுதிக் குடுத்தது இதுதானென்று சொல்லி
அப்போது பாத்துத்தானும், அப்போது பாக்கும்போது தானுமங்கே - தகப்பந்தானும்
ஏழழவுழுது அங்கு எள்ளும் பருத்தியும் கலந்து விதச்சதுதானும் - அப்போது
கோடமழெ பேஞ்சிலங்கே அந்தக் கட்டையிருந்து துளுருவிட்டுப் போயிருக்குது - அப்போது
ஏழுதலமக்காரன் வெள்ளாடு அதுலயும் மேஞ்சிமுக அழிக்கிதங்கே.

அப்ப ஏழுபேரு மாமன்மக ஏழுபேரும்
கீகரப்புளியிலே ஒருதலவச்சிப் படுத்து இருக்காளெ
அப்ப படுத்து இருக்கும்போதுதானும் சின்னாண்டி தானுமங்கே
எண்ணீ நினைத்தாரே எண்ணமற்ற சிந்தையிலே
பாற்றூ நினைத்தாரே பலகோடி யோசினய்கள்
ஆரெள நினைத்தாரோஓ அளவற்ற சிந்தையிலே
எவரெள நினைத்தாரோ ஏலமற்ற சிந்தையிலே

நம்மளுடைய தாயாருக்குச் செப்புப்பட்டயம் ஏழுதிக் குடுத்தோமுனு
சொல்லிலங்கே
தெற்கித்தி வேலியெ தெம்மடலா தானடச்சார்
வடக்கித்தி வேலியெ வடமடலா தானடச்சி
கிழக்கித்தி வேலியெ கீமடலா தானடச்சி - அந்த
மேற்கித்தி வேலியெ மேமடலா தானடச்சி
சனிமூலயிலே நெருப்பவச்சி இந்த ஏழுபேரு வெள்ளாட்டயும்
சுட்டுத்தானுமங்கே - அப்ப
சூட்டாங்கறி போட்டிலங்கே அவுரு சாப்பூடமட்டும் சாப்புட்டு
ஏழுபட்ட தான்புடிச்சி ஏழுபட்ட நிறையளவும்
பிச்சிமுக வச்சிலங்கே கழட்டித் தானுமங்கே - கொண்டுமுக போறாரே.

அந்த, ஏழுபேரும் படுத்து ஒருதலவச்சி படுத்து இருந்தவர்
தலமாடு கொண்டுபோயி வைத்திலங்கே
அப்போது சொல்லுவாரே, அடியடியே!
அம்மான்பெத்த தங்கங்களா அய்த்த பெத்த தங்கங்களா
எந்திரிங்கடி, ஒன்னொடய மாமன்மகந் தானுமடி
வேட்டைக்கி போயிலடி நான் வெள்ளெலிக்கறி கொண்டு வந்திருக்கமுனு
தட்டீ உசுப்புனாரே.

அப்ப தட்டீ உசுப்புனவுடனே - இவ
எழுநல்லெ பேருகளும் எந்திரிச்சி பாத்தாளே
பார்த்தவுடனேதானும் ஆறுநல்லெ பேருதானும்
ஓடிநல்லெ போயிட்டாளே
எல்லாத்துக்கும் மூத்தவன்மக மூளிநல்லெ வீரப்பன்மக மட்டும்
எதுத்து நின்டுதானுமங்கே
ஆருடா பயலே! நெஞ்சுமசுரு நெருக்குங்காம
பொடரிமயிரு பில்லறியாத புடிக்கி - எங்களுக்கு
வேட்டக்கிபோயி வெள்ளெலிகறி கொண்டுவரமுன்னு கேட்டாளே
அப்போதும்

கேட்டவுடனே தானுமங்கே சின்னாண்டி தானுமங்கே
குருதச் சவுக்கினாலே நாலுருக்கு இருக்கிலங்கே தின்னுடின்னு தானும்
ஏழுபட்டக் கறியளவும் திங்கவும் சொல்லிலங்கே - அப்போது
தண்ணீரு அள்ளித்தானும் குடிக்கவும் சொல்லித்தானுமங்கே

அப்ப
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சியம்
பூச்சிமட்டயால குருதய அவுத்து
குருதமேல ஏறிநல்ல உக்காந்து தானுமங்கே
ஓடூடி குருதய்க்கி முன்பாகன்னு சொல்லித்தானுமங்கே - அப்போது
மூளிநல்ல வீரப்பன்மகள வெள்ளலூ ருநாடு கொண்டுவந்து
கருநாயும் செந்நாயும் அடய்க்கும் கொட்டுலிலே அடச்சித் தானுமங்கே
வைத்துப்பிட்டுத்தானும் சின்னாண்டி

குருதகட்டும் சாவடிய குருதயவயும் கட்டிமுக வைத்துட்டுப் போயித்
தானுமங்கே
தெப்பக் கொளமெறங்கிக் குளிச்சி முழுகிலங்கே
சின்னாண்டி தானுமங்கே

அப்போது
காராள புறந்த கருத்தவனம் - தம்பிக்கி
ஆக்குனா சோறுகள் ஆவாரம்பூ பிச்சைகளிலே
பொங்குனா சோறுகள் புளியம்பு செய்யலிலெ
பதுனெட்டு வகக்கறியும் பாங்குடனே தான்சமைத்து
தங்கநல்ல கும்பாவ தாங்கீ தனிவிளக்கி
வெள்ளிநல்ல கும்பாவ விரும்பிநின்று தான்விளக்கித்
தம்பிக்குச் சாதம் படைத்தாளே
சாதம் படைத்தாளே சாப்பிட் டிளப்பாறி சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளப்பாறி இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு - அப்ப
கட்டோட வெத்திலய கமுகியும் இளம்பாக்கும்
செப்போட சுண்ணாம்பும் சேந்தெழச்சித் தான்போட்டு - சின்னாண்டி
சாஞ்சிமுஞ்ச கட்டிலிலே சாஞ்சி படுத்திருக்கும்போது தானுமங்கே

அக்கையடி அக்கெ! நான் சிறுகொடிநாட்டு அருகாமெ வரெயிலே
நம்ம அண்ணன்வீட்டு நாகுட்டி ஒன்னு ஓடிவந்திது
நான் கைப்புடியா புடிச்சேனக்கா -நம்ம
கருநாயும் செந்நாயும் அடய்க்கும் கொட்டுலிலே அடச்சிருக்கேன்
அதுக்குக் கொஞ்சம் உப்புப்போட்டுத் தண்ணிகொண்டு ஊத்துன்னு
சொன்னானே அப்போதும்.

அப்ப சொன்வொடனேதானும்
காராள புறந்த கருத்தவனம் நிசமுன்னு சொல்லிலங்கே அப்போது
கொஞ்சம் சோறுகளும் அள்ளிபோட்டு உப்புகளும் தான்போட்டு
கொண்டுபோயி தானுமங்கே - அந்தக்
கருநாயும் செந்நாயும் குடிக்கும் பத்தலிலே கொண்டுபோயி ஊத்தித்தானும்
ஓஓஓ சிறுகொடி நாகுட்டியே
எங்க அம்மென்வீட்டு நாகுட்டியே ஓடிவான்னு அழச்சாளே அப்போது.
அப்போதுதானே மூளிநல்ல வீரப்பன்மக - அந்தக்
கருநாயும் செந்நாயும் அடய்க்கும் கொட்டுலுகீழ இருந்துகிட்டு
அடியடியே வெள்ளலூரு கள்ளிச்சி மகளே!
நீ வெகுநாய்க்கி தண்ணிவச்சி ஊத்துனவளான்னு கேட்டாளே
அப்போதும்.

கேட்டவுடனே தானுமங்கே - அப்போது
காராள புறந்த கருத்தவனம் - அப்போது
கண்ணு சிவந்திலங்கே கடுங்கோப மாகிலங்கே
மூக்கு சிவந்திலங்கே முன்கோப மாகிலங்கே
கொங்கெமுழி கண்கரெண்டும் கொழுந்துவிட் டெரியுதங்கே

நீலமுழி கண்கரெண்டும் நெருப்புத்தன லாடுதங்கே
வண்ணமுழி கண்கரெண்டும் வாட்டிப்போராடுதங்கே
இந்தப்பயமக நம்ம அரண்மன அடிமிதிக்க நாயமுண்டா
சரி இருக்கட்டும் நம்மதம்பி பொஞ்சிச்சி கொண்டு வந்துவிட்டான்
நம்ப எதுவும் சொல்லக்கூடாது நம்ம தம்பிக்கிக் கோவங்கள் உண்டாகும்
என்றுசொல்லித் தானுமங்கே

காராள புறந்த கருத்தவனம் போயிலங்கே
ஈக்கஞ்சம்பா நெல்லெடுத்துத் தீட்டி மறுப்பொறுக்கி
ஆக்குனா சோறுகள் ஆவரம் பிச்சையிலே
பொங்குனா சோறுகள் புளியம்புச் செய்யலிலே - அங்கே
பச்ச மிளகாயும் பாவமுள்ள பச்சடியும்
பூசணிக்கா கொண்டிலங்கே பொரிமாவும் பச்சடியும்
வில்வக்கா கொண்டிலங்கே விதமான பச்சடியும்
பதினெட்டு வகக்கறியும் பாங்குடனே தான்சமைத்து - அப்ப
தங்கநல்ல கும்பாவ தாங்கீ தனிவிளக்கி
வெள்ளிநல்ல கும்பாவ விரும்பிநின்டு தான்விளக்கி - அப்போது
பன்னீரு சொம்பூலே வெந்நீரு தான்கலந்து
இத்தனயும் தான்கலந்து அப்போது கொண்டுபோயி
நாத்தியருக்குச் சாதம் படைத்தாளே அப்போதும்.

அப்ப படச்சவுடனே தானுமங்கே கேப்பாளே
சிறுகொடி நாட்டுச் செறுக்கியும் தானுமங்கே
அடியடியே! ஒரு கள்ளிச்சிமக சோறுபொங்கிப் போடவான்னு சொல்லி
ஒரு கள்ளிச்சிமக வந்தா இருக்குறான்னு சொல்லிலங்கே
பிறங்காலுனால எத்துனவுடனே அப்போது தானுமங்கே - அங்கே
காராள புறந்த கருத்தவனம் போறாளே அப்போது
போயித்தானும் அப்போது அடாடா தம்பி சின்னாண்டி!
என்ன இருக்குப்பா, என்னவேல செய்தாயிடா
அந்தப்பயமக நம்பஅரண்மன அடிமிதிக்க நாயமுண்டா
போயி பாத்துவாடான்னு சொல்லி அனுப்பிச்சி வச்சாளே.

வச்சவுடனேதானும் சின்னாண்டி வந்துமுக பாக்கம்போது-அங்கே
வெள்ளப்பாவாட போல விரிச்சிமுக கிடக்குதங்கே சாதமும் அப்போதும்.
அப்ப சின்னாண்டி தானுமங்கே இழுத்துமுக
கருநாயும் செந்நாயும் அடய்க்கும் கொட்டிலிலே இழுத்துப் பூட்டித்
தானுமங்கே

வந்து தானுமங்கே அப்போது சொல்லுவாரே
அக்கையடி அக்கெ! நம்மளுடய அண்ணனுக்கு இன்னம்
பனிரெண்டு வருசத்தறுதி பள்ளிக்குடத்துல இருந்தாலும்
நம்ப அண்ணனுக்குப் படுப்புவரப் போறதில்லெ
ஆளுவிட்டழச்சிவந்து நம்ப அண்ணனப் போயி
மாட்டுக்கிடயப் பாத்துவரச் சொல்லவேணும்
ஆளுவிட்டழச்சிவரச் சொல்லக்கான்னு சொல்லிலங்கே

அப்போது தானுமங்கே - அங்கே
அரியல்குடி அழகுநல்லெ வாத்தியாரெடம் போயி
பேப்பெருமாவ கூட்டிமுக வந்திலங்கே
கட்டுச்சோறு கட்டிலங்கே அபோது குடுத்து
நம்மளொடய மாடு ஆனெமலெ அழகர்கோவில் மலையிலெ நிக்கீது
மாட்டெப்போயிப் பாத்து வாப்பான்னு சொல்லிலங்கே - அங்கே
அனுப்பிச்சி வச்சிட்டுத் தானுமங்கே
இருக்கும்போது தானுமங்கே - அப்போது பேப்பெருமா
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்டெ
ஏழு எருக்கம்பட்டி மேலவளவு கீழவளவயங்கே
தீயோடு தீயெரியும் தீயெவனமும் தாந்தாண்டீ
மூங்கியோட மூங்கெரியும் முதவனமும் தாந்தாண்டீ
ஆன அடயும்வனம் அன்னபச்சி தூங்குவனம்
சிங்க ளடையும்வனம் சிறுபுலியுந் தூங்கும்வனம்
கரடி படுத்திருக்கும் கழுகுமல தாந்தாண்டீ
பில்லா படுத்திருக்கும் பில்லமல தாந்தாண்டி
ஓநா படுத்திருக்கும் ஒழுங்குமல தாந்தாண்டீ
ஆனெ மலயுந்தாண்டி அழகர்கோவில் மலயுந்தாண்டி
மொட்டெமலயும் முதமலயும் போயிநல்லெ சேர்ந்தாரெ.
அப்ப போயிநெல்லெ பாக்கும்போது
இந்தப் பதினெட்டு வருசத்துக்குள்ளாக - அங்கே
நூறுநல்லெ மாடும் ஏழுகெட மாடாக உண்டாகிப்போயி நிக்கீது.

அப்ப நின்டவுடனே தானுமங்கே - பேப்பெருமா
எண்ணீ நினச்சாரோ எண்ணமற்றற சிந்தையிலே
பாற்றா நினைத்தாரோ பலகோடி யோசினய
நம்மமாட்டெ விட்டுட்டு போனோமானாக்கும்
எவனும் நம்மமாட்டெ ஓட்டிமுக போயிடுவான்னு சொல்லிங்கே - அப்போ
காரங்குட்டி மறவுலதானும் அங்கே படுத்தா இருக்காரே
நம்மமாடு குத்துதோ கடிக்கிதோ ளென்றுசொல்லி தானுமங்கே - அப்ப
படுத்து இருக்கும்போதுதானும் சின்னாண்டி தானுமங்கே
எட்டுநாள் சென்டு - அப்போது
அந்த எட்டுநாளும் தானுமங்கே
சிறுகொடி நாட்டுல வீரப்பன்மக தானுமங்கே
கருநாயும் செந்நாயும் அடய்க்கும் கொட்டுலிலே கிடந்து
கூவாகூவான்னு கத்துனத பாத்துட்டுத்தானும் - அப்ப
சின்னாண்டி தானுமங்கே யோசினெ பண்ணுனாரே

இவ வீரமான கள்ளிச்சிமகளா இருந்தாளாக்கும்
நம்மளுடய கருநாயும் செந்நாயும் குடிக்கும் பத்தலிலே கொண்டுபோயி
தண்ணிய ஊத்திகிட்டு அனுப்ப இவவந்து தண்ணிய குடிச்சாளாக்கும்
தகப்பநல்லெ கள்ளிச்சிமக
அவளக் கோரப்படுத்தி குறக்கோலமாக்கி விரட்டிவிடவேணும்

வீரமான கள்ளிச்சியா யிருந்தாளாக்கும்
நம்ம அரண்மனய வச்சிக்கிடுவோமுன்னு சொல்லிலங்கே
அப்போது சின்னாண்டி போயித்தானும்
கொஞ்சம் சாதங்களும் அள்ளிப்போட்டு தண்ணீய ஊத்திலங்கே
உப்புப் போட்டுத்தானும்
கருநாயும் செந்நாயும் குடிக்கும் பத்தலிலே ஊத்திகிட்டு
ஓஓ சிறுகுடி நாகுட்டியே ஓடிவானு அழச்சவுடனேதானும்
அப்போது ஓடித்தானுமங்கே மண்டிய போட்டுகிட்டு
சலப்பு சலப்புன்னு குடிச்சவுடனேதானும் - இவ
சவங்கநல்ல கள்ளிச்சிமக ளென்றுசொல்லித் தானுமங்கே
அப்போது தானுமங்கே - சின்னாண்டி
கோரப்படுத்திலங்கே குறக்கோல மாக்கிலங்கே
வெரட்டிமுக விட்டாரே அப்போதும்.

அப்போது ஓடிமுக போறாளே சிறுகுடி நாட்டுக்கே
சிறுகொடி நாட்டுக்கு ஓடிமுக போகும்போதுதானும் - அங்கே
கூட்டப்புளி ஊரணியே ஓடிலங்கே - அந்தக்
கூட்டப்புளி ஊரணியே போயித்தானும்
கூட்டப்புளி ஊரணி புளியாமர ஒண்டுவச்சி நிக்கிம்போதுதானும்

அந்த
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் ஏழுதலமக்காரன் பெஞ்சாதியும் - அங்கே
செம்பெடுத்து இடையிடுக்கி தண்ணிக்கி வாறாளே.

தண்ணிக்கி வந்துதானும் கீகரெயிலே கொண்டாந்து
செப்புக்குடத்த வைத்திட்டு ஏறிட்டுப் பாத்தாளே
அப்போதுதானும் அங்கே மூளிநல்ல வீரப்பன்மக
புளியாமரம் ஒண்டுவச்சி நின்னவுடனேதானும்
என்னடி தங்கச்சிமாரே! நம்ம கருத்தவனம் மாதரியா
புளியாமரம் மறவுலயும் நிக்கிறாளே
வாங்கடி போய்ப்பாப்பமுனு சொல்லி - அப்ப
ஏழுநல்ல பேருகளும் போயி பாக்கும்போது - அங்கே
மூளிநல்லெ வீரப்பன் மகளெ
கோரப் படுத்திலங்கே குறக்கோல மாக்கிலங்கே
விட்டுத்தான் இருந்தவுடனே தானும்
அப்போது அழச்சிமுக போறாளே ஏழுநல்லெ பேருகளும்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்குக்
கூட்டிமுக போயித்தானும் அப்போதுதானும்
அப்போது போயித்தானும் அங்கே தவத்திலேயும் நின்டிலங்கே
மறுதிரேகம் குடுத்தவுடனே அழச்சிமுக சிறுகொடி நாட்டுக்குப்
போனவுடனே

மூளிநல்லெ வீரப்பன் சொல்லுவானே
வெள்ளலூரு நாட்டுல அடிமிதிச்சவள்
கோடிக்கிப் பின்னலபோட்டு அங்கே சட்டித்தண்ணி ஊத்தி
அந்த மிஞ்சின வெள்ளாட்டாங் குட்டிய
மேய்க்கச் சொல்லுங்கடான்னு சொல்லித்தானும்
அவளெ கோடிக்கிப் பின்னாலெ போட்டு அங்கே சட்டித்தண்ணி ஊத்தி
அங்கே மிஞ்சின வெள்ளாட்டடங் குட்டிய
மேய்க்கச் சொல்லுங்கடான்னு சொல்லித்தானும்
அவளெ கோடிக்கிப் பின்னாலெ போட்டு - அந்த
மிஞ்சின வெள்ளாட்டங்குட்டிய மேய்க்கவும் போட்டானே.

அப்ப போட்டவொடனேதானும் இந்தப் பிரகாரமா இருக்கும்போது
சின்னாண்டி எட்டோட எட்டு நாளாகப் பாத்தாரு
பேப்பொருமா திரும்பிவரக் கிடயாது
என்னக்கா நம்ம அண்ணன மாட்டுக்கிடய்க்கிப் போகச்சொன்னோம்
இன்னம் வரக்காணோமே நான்போயி பாத்து வறேன்க்கா
எனக்குச் சாதங்களாக்குமக்கா ளென்றுமங்கே சொன்னவொடனே
அப்போதுதானும் காராள புறந்த கருத்தவனம்
ஈக்கச்சம்பா நெல்லெடுத்துத் தீட்டி மறுப் புறக்கி
ஆக்குனா சோறுகள் ஆவரம் புச்சைகளிலே
பொங்குனா சோறுகள் புளியம் புச்சைகளிலே
பதுனெட்டு வகக்கறியும் பாங்குடனே தான்சமைத்து
தங்கநல்லெ கும்பாவ தாங்கீ தனிவிளக்கி
வெள்ளிநல்ல கும்பாவ விரும்பிநின்டு தான்விளக்கி
தம்பிக்கி சாதம் படைத்தாளே
சாப்பிட்டீ ளப்பாறீர் சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளப்பாறீர் இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு
கட்டோடு வெத்திலயும் கமுகும் இளம்பாக்கும்
செப்போட சுண்ணாம்ப சேந்தெழச்சித் தான்போட்டு
சின்னாண்டி தானுமங்கே
ஏழுமலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெய்ல குருதயில ஏறி உக்கார்ந்தவுடனே
காராள புறந்த கருத்தவனம் - தம்பிக்கி
வாழ்த்தி வரங்குடுத்தா வலதுபுறங் கைகுடுத்தாள்
போத்தி வரங்குடுத்தா தம்பிக்கி போகவர கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும் அப்போது தங்கமுகமாக வரவேணும்
நடுப்படயே போனாலும் சின்னாண்டிக்கி மறுப்படப் கூடாதுன்னு
அப்போது அனுப்பிவச்ச வுடனேதானும் - சின்னாண்டி
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி மல்லாகொட்டெ
ஏழு எருக்கம்பட்டி மேலவளவயெங்கே கீழவளவயெங்கெ - அங்கே
தீயோட தீயெரியும் தீயவனம் தாந்தாண்டி
மூங்கியோட மூங்கியெரியும் முதவனமும் தாந்தாண்டி

ஆனெஅடெயும் வனம் அன்னபச்சி தூங்கும்வனம்
சிங்க ளடயும் வனம் சிறுபுலி தூங்கும்வனம்
கரடி படுத்திருக்கும் கழுகுமல தாந்தாண்டி
பில்லா படுத்திருக்கும் பில்லெமலெ தாந்தாண்டி - அந்த
ஓநா படுத்திருக்கும் ஒழுங்குமலெ தாந்தாண்டி
ஆனெ மலயுந்தாண்டி அழகர்கோவில் மலெயுந் தாண்டி
மொட்டை மலயுந்தாண்டி முதமலயும் போயிநல்லெ
சேர்ந்துதங்கே குருதயும்.

அப்ப குருதயும் போயித்தானும் - அந்தப்
பொந்து புளியாமரம் குருத இடதுபுறம் போயிலங்கே
குருத வலதுபுறம் வந்து நின்டூது - சின்னாண்டி
குருதய விட்டு கீழ இறங்கிமுக பாத்தாரே
ஏழுகெட மாடு மேஞ்சி அடஞ்சிமுக நிக்கிதங்கே
அப்போது தூ ரணியெ பாக்கும்போது புளிசம்பூவுல கவுறு - அப்போது
தங்கப்பார் கட்டேயும் தானே சுழட்டி இருக்குது
தங்கத்தினால் பில்லாங்குழலுந்தானும் தூ ரணியே சாத்தி இருந்துதங்கே.

அப்ப சின்னாண்டி,
எண்ணி நினைத்தாரோ எண்ணமற்ற சிந்தையிலே
பாத்து நினைத்தாரோ பலகோடி யோசினைகள்
ஆரெ நினைத்தாரோ அளவற்ற சிந்தையிலே
எவரெ நினைத்தாரோ ஏலமற்ற சிந்தையிலே
இந்த மாட்டெபோயி ஓட்டுன மானாக்கும்
நம்ப மாடாக இருந்தாத்தான் போகுது
இன்ன ஒருத்தன் மாடா இருந்து
ஆருடா மாட்டெ ஓட்டுறதுனு கேட்டாக்கா
என்ன வதுலுக சொல்லுறதுன்னு சொல்லித்தானும்
அப்ப சின்னாண்டி தானுமங்கே
தங்கப்பார் கட்டேய காலுலயும் தான்மாட்டி
தங்கத்தினால் பில்லாங் குழலெடுத்துக் கையிலெயும் தான்புடிச்சி
என்னப் படச்சவனே என்தகப்பா ஈஸ்வரனே - நான்
உத்தமி பத்தினியாள் ஒருசொல்லு பாதகத்தி
வயித்திலே புறந்திருந்தே னானாக்கும் - என்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரனே - உனக்கு
அடியேன் அடித்தேரு ஓட்டிவப்பேன்
எந்தனுடய மாடா இருந்துதானாக்கும் - என்னுடைய
பதுனெட்டு வாசுப்பயும் நான் பாங்குடனே வாசிப்பேன்
என்னுடய மாடா இருந்துதானாக்கும் - இந்த
ஏழுகெட மாடும் ஈண்டகன்டு முதக்கொண்டு
இழுபட்டு ஓடிவர வேணும்
இன்னமொருதன் மாடா இருந்துதானாக்கும்
கீழபோட்ட தலய ஏறிட்டுப் பாக்கக் கூடாது

என்னு சொல்லித் தானும் - அப்ப சின்னாண்டி
பதுனெட்டு வாசுப்பயும் அங்கே பாங்குடனே வாசுச்சவுடனே தானும்

சேத்தி லெறங்காத செங்கழனி மாடறுதி
ஆளக் கண்டா அலமோதும் அழகுள்ள ராமுனாதி
சுத்திலே ஓடிவரும் சுத்தமுள்ள ராமுனாதி,
பக்கத்திலே ஓடிவரும் பக்கமுள்ள ராமுனாதி - அங்கு
மொந்தமணி போட்டடிக்கும் மூளி வெள்ளகுட்ட - அங்கே
இத்தாதீஇ மாடுகளுந்தானும் - அப்போதுதானும்
நம்மளோட ஆயரோட குழந்த எவ்வளது காலத்துக்குப் பிற்பாடு
நம்மள பார்வையிட வந்திருக்குதுன்னு சொல்லிலங்கே
ஈன்டகன்டு முதக்கொண்டு இழுபட்டு வந்திலங்கே - சின்னாண்டிக்கி
தங்கத்தினா லொருமுத்தம் தாங்கிக் குடுத்துதங்கே
பொன்னாலொரு முத்தம் சின்னாண்டிக்கிப் பொருந்தி குடுத்துதங்கே -
அப்போது

மாட்டெயும் தடவிமுகக் குடுத்துத்தானும் நிக்கிம்போது தானுமங்கே
பேப்பெருமா காரகுத்து மறவுல படுத்திருந்துதானும்
எவனோ நம்பமாட்டெ ஓட்டுறான்னு ஓடிமுக வந்தாரே.

வந்தவொடனே தானும் சின்னாண்டி கேப்பாரே
அண்ணண்ணோன் இவ்வளது நாளாக என்னண்ணோன்
செய்தீன்னு கேக்கும்போது,
அடடா தம்பி சின்னாண்டி,
நம்பமாடு இந்த நாட்டிலே மேஞ்சி அடஞ்சீது
எவனும் நம்மமாட்டெ ஓட்டிமுக போயிடுவான்னு சொல்லி
நான் காரங்குட்டி மறவுல உக்காந்திருந்து
அங்கே படுத்து இருந்தேமுனு சொன்னானே அப்போதும்.

அப்ப சொன்னவொடனே தானும்
அப்போது சொல்லுவாரே சின்னாண்டி
போங்கண்ணே நம்மளுடய தகப்பனாரு செத்து பனிரெண்டு வருசமாச்சி
நம்ம ஆனா இந்த மாட்டெ இந்த நாட்டுல வந்து மேச்சி
நம்ம அடயவச்சி பாதுகாத்தோம்
இன்னக்கி நம்மமாட்டெ ஓட்டிமுகப் போயிறப் போறாங்க
என்றுசொல்லித் தானுமங்கே
சின்னாண்டி தானுமங்கே அப்போது புலம்பிக் கெடந்தாரே.

புளிசெம்புல பாலு கறந்து தானும்
அண்ணனும் தம்பியுமாகப் பாலுகளுஞ் சாப்பாட்டுத் தானுமங்கே
அப்போது சின்னாண்டி தானுமங்கே
புளிசெம்புல கவுறு கையிலெயும் தானெடுத்து
தங்கப்பார் கட்டெயவும் காலுலயும் தான்மாட்டி
தங்கத்தினால் பில்லாங்குழலெடுத்துக் கையிலயும் தான்புடிச்சி

அண்ணனெ குருதய புடிக்கவும் சொல்லிலங்கே
சின்னாண்டி புறப்பட்ட வுடனே
ஏழுகெட மாடுந்தானும் - அந்த
ஆனமல அழகர்கோவில் மலயவிட்டுக்
கீழ இறங்கிமுக வருகுதங்கே - அப்ப
ஆனமலயுந்தாண்டி அழகர்கோவில் மலயுந் தாண்டி
மொட்டெ மலயுந்தாண்டி முதமலயுந்தாண்டி
பில்லா படுத்திருக்கும் பில்லமல தந்தாண்டி
ஓநா படுத்திருக்கும் ஒழுங்குமல தாந்தாண்டி
தீயோட தீயெரியும் தீயவனம் தாந்தாண்டி
மூங்கியோட மூங்கியெரியும் மொதவனமும் தாந்தாண்டி
எருக்காளம்பட்டி ஊரணியிலே தண்ணீரு வச்சிலங்கே
அன்னக்கி தோகவந்தான் பொட்டை தொந்தி மணல் அருகாமை
சாயங்காலம் மாடுகொண்டூ அவுத்திலங்கே
அப்போது பாலு கறந்திலங்கே
அண்ணண்ணேன் நம்மளுடய அக்கா
சின்னஞ்சிறுசிலயே நம்மளால பால்மோரறியாது
நம்பளோடய அக்காளுக்குப் பாலுபீச்சித் தாறேன்ணன்
இதக்கொண்டுபோயி நம்ம அக்காளெடம் குடுங்கன்னு சொல்லிலங்கே,

அப்போது குடுத்துமுக அனுப்பிச்சி வச்சிட்டு
சின்னாண்டி தானுமங்கே தோகவந்தான் பொட்டல் தொந்தி மணலுல தானும்
மாட்டயும் அடயமுக வச்சிலங்கே - அப்போது
தலய்க்கி மணல உசரமாகக் குமிச்சிலங்கே
துண்டயும் விரிச்சித்தானும் சின்னாண்டி படுத்துநித்திரயும் போறாரே.

அப்ப விடிஞ்சவொடனேதானும் அப்போது தானுமங்கே
சின்னாண்டி தானுமங்கே இந்த ஏழுகெட மாட்டெயும்
அப்போது தும்பப்பட்டி வயலிலே மாட்டெயும் கிளச்சிமுக விட்டுட்டு
சின்னாண்டி மாட்டுக்கு முன்பாகப் போகும்போதுதானும்

அந்தச் சிறுகொடி நாட்டுல
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகும்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் ஏழுதலமக்காரன் மாடும்
கள்ளம் பரம்புல கலந்தோடி மேயுதங்கே
செல்லம் பரம்புல பசு சிறந்தோடி மேயுதங்கே.

அங்கே ஏழுநல்ல பண்ணக்காரனுந் தானும்
பந்தடி மேடயிலே பந்து அடிச்சிமுக விளையாண்டு இருந்தவங்க
என்னாடா தும்பப்பட்டி வயலிலே மாடு வருகுதுடா
எந்தவூரு மாடோ வருகுது
மாட்டெ விரட்ட வேணுமுனு சொல்லி - இவன்

பந்தடி மேடையிலெ பேசிமுக பந்து அடிக்கும்போது
சின்னாண்டி அந்த எடத்திலே நின்டு இந்த எடத்திலே நின்டு
சின்னாண்டி பந்தடி மேடயும் வந்துநல்லெ சேந்தவுடனே
அப்ப ஏழுபேரு பண்ணக்காரனும்
எந்தவூரு மாடப்பா தம்பீயினு கேக்கும்போது
அண்ணண்ணோன் நம்மளுடைய மாடு புறமல தேசத்து மாடு
என்றுமங்கே சொன்னாரே சின்னாண்டி அப்போதும்.

அப்ப சொன்னவொடனே தானுமங்கே அப்போது கேப்பாரே
எங்கப்பா ஒங்க மாட்டுக்கார முதலாளி
என்றுமங்கே கேட்டவொடனே,
அண்ணண்ணோன் எங்களுடைய மாட்டுக்கார முதலாளி
எட்டு நாளக்கி முன்பாக வந்து
இந்தக் காட்டுல வந்துதானும்
காடுகளும் பாத்து இந்தவூரு முதலாளிய
மாடுஓட்டிவரச் சொன்னாகளாம்
அதற்காகக் காலய்யில எந்திரிச்சி அந்தவூருக்குப் போயிட்டார்கள்
என்றுமங்கே சொன்னவுடனே,

அப்போது ஏழுபேரும் சொல்லுவானே
எங்கவூரு முதலாளியதான்ம்ப்பா நம்ப எல்லாரும் ஓரெடத்திலே
மாடுகள் அடய வப்பும் என்றுமங்கே சொல்லிவிட்டு
இவுக பந்து விளையாடும்போது - அப்ப சின்னாண்டி கேப்பாரே
அண்ணண்ணோன் நானும் வாறேன்
பந்தடிக்க என்னயும் சேத்துக்கிங்க
என்றுமங்கே கேட்டாரே அப்போதும்.

அப்ப கேட்டவொடனே தானும் இவன் ஏழுநல்லெ பேரும் சொல்லுவானே
அப்பப்பா! நீ சின்ன புள்ளயாவும் இருக்கெ
உனக்கு உத்தியாளும் கிடயாது - உன்னால
பந்தடிக்க முடியாது என்றுமங்கே சொன்னவுடனே

அப்ப சின்னாண்டி சொல்லுவாரே - அண்ணண்ணோன்!
நீங்க எல்லோரும் ஒருபக்கம் நில்லுங்க
நான்மட்டும் ஒருபக்கம் நிக்கிறேன் - நீங்களே
முதலிலே பந்தடிங்க நான் பந்தா புடிக்கிறேன்
என்றுமங்கே சொன்னவுடனே
அப்ப எழுநல்லபேரும் கேட்டானே,
என்னாடாப்பா, எங்களிலியும் நீ வல்லவனா - என்றுமங்கே கேட்டவுடனே
இல்லண்ணோன் ஒருதடவ நின்டு பாப்பமுன்னு சொல்லிலங்கே
சின்னாண்டி ஓடீ பந்தா அடிச்சாரே - அப்ப
ஏழுபேரும் அடிச்சபந்த நின்டு தானுமங்கே
நின்ட இடத்தவிட்டு அசயாம பந்துபுடிச்சி குடுத்துமுகக் குடுத்தாரே.

அப்போது சின்னாண்டி திருப்பித் தானுமங்கே பந்து அடிக்கும்போது
ஏழு மணிக்குத் தானும் பந்து அடிச்சவுடனே
ஏழு மணிக்கி அடிச்ச பந்து முக்காதம் போயிருச்சி - அப்ப
ஏழுநல்லெ பேருகளும் பந்து புடிக்க ஓடுனவய்ங்கெ - அப்போது
ஏழுமணிக்கிப் போனவன் பனிரெண்டு மணிக்கு ஒருமணிக்கிதான்
வந்துதான் சேர்ந்தார்கள் - அப்போது
மறுபடி சின்னாண்டி திருப்பி அடிச்சாரே - அப்போது
பந்துபுடிக்க முடியாதபுடிக்கி பந்தயும் விட்டுத்தானும்
மறுபடியும் தானுமங்கே ஓடிமுக போறானே பந்து எடுக்கிறதிற்கு-
அப்போது
பந்து எடுத்து வாரதிற்கு நாலுமணி ஆயிருச்சி - அப்போது
ஏழுபேரு பண்ணக்காரன் மாடுந்தானும்
கன்டூகும் மாடுமாக ஒன்னாக் கலந்திலங்கே
கோடநல்லெ கேப்பக்கருது சிறுகொடி நாட்டிலேயும் - அந்தக்
கோடநல்லெ கேப்பக்கருதுல மாடுகளும் மேஞ்சிமுக வருகுதங்கே.

அப்ப ஏழுபேரு முதலாளிகளுந்தானும்
சாயங்காலமா பாக்கலயம் எடுத்திலங்கே வரும்போது
கன்டூகும் மாடுமாக ஒன்னாக் கலந்திலங்கே - அப்போது
கேப்பக் கருத்திலே ஒருபக்கமாக மேஞ்சிமுக வருகுதங்கே
மாட்டயும் பத்திலங்கே அடயவச்சித் தானும்
ஏழுகட்டு புளியாக்கையும் வெட்டிமுக போட்டுகிட்டு
உக்காந்து இருக்கார்கள்.

இவன் ஏழுநல்லெ பேருந்தானும் பந்துஎடுத்துக் கெண்டாந்து குடுத்துட்டு
அப்பப்பா! குறபந்து நாளய்க்கி வந்து எடுத்துத் தாறோம் - எங்களுட
கவுசகுண்டலம் ஈடு வக்கிறோம் வெள்ளிமோதிரம் ஈடு வக்கிறோம்
என்றுமங்கே சொன்னவுடனே அதெல்லாம் வேணாம்
அப்போதுதானுமங்கே சின்னாண்டி சொல்லுவாரே அப்போதுதானும்
ஒன்னுடய முதலாளி ஏழுநல்லெ பேர்களயும்
நாளய்கிப் பொழுது கிளம்பய்ல
தோகவந்தான் பொட்டெல் தொந்தி மணலுக்கு யுத்தத்துக்கு வரச்சொல்லு
அப்படி யாருன்னு கேட்டாக்கா
மன்னவன் முதச்சோன பெற்றெடுத்த சின்னாண்டின்னு
சொல்லுங்கடான்னு சொல்லிலங்கே
அப்போது விரட்டிமுக விட்டாரே அப்போதும்.

அப்ப விரட்டிமுக விட்டவொடனே தானுமங்கே
ஏழுநல்லெ பேருகளும் ஓடிமுக போனவுடனே தானும்
எங்கடா மாட்டெ விட்டுட்டுப் போனிங்கடான்னு கேட்டவுடனே -
அப்போது
சிறுகொடி எசமான்களே - எங்கள
அடியுங்கள் புடியுங்கள் இம்சிகள் பண்ணுங்கள்
நாங்கள் சொல்லுவதக் கேட்டு - நம்மளொடய மாடு

கள்ளம்பரம்புல கலந்தோடி மேஞ்சிதங்கே
செல்லம்பரம்புல நம்பபசு சிறந்தோடி மேஞ்சிதங்கே - நாங்க
பந்து அடிக்கிற மேடயிலெ எப்போதும் போல
பந்து அடிச்சி விளையாண்டு இருக்கும்போது
காலெயிலெ தும்பப்பட்டி வயலிலே
ஏழுகெட மாடு அங்கே கிளஞ்சிமுக மேஞ்சிமுக வந்தீது
எந்தவூரு மாடோ வருகுது மாட்டெ விரட்ட வேணுமுனு சொல்லி
நாங்க கூடியாடிப் போசி விளையாடும்போது
அந்த மாட்டுக்கு முன்னாலெ ஒருபையந் தானுமங்கே
அங்கனெ நின்டு இங்கனெ நின்டு பந்தடி மேடயும் வந்துநல்லெ
சேர்ந்தார்கள்.

எந்தவூரு மாடுன்னு கேக்கும்போது
எங்களுடய மாடு புறமல தேசத்து மாடு
என்றுமங்கே சொன்னார்கள்
அப்ப உங்க மாட்டுக்கார முதலாளி எங்கென்னு கேக்கம்போது
நம்மஊரக் கையக் காமிச்சி
இந்த ஊருல எட்டு நாளக்கி முன்பாக
எங்களுடய முதலாளி வந்துதானும் காடுகள் பாத்து
இங்கேயும் மாடு ஓட்டிவரச் சொல்லியிருக்காங்கன்னு சொல்லி
விடியமின்னே போயிட்டார்கள்ன்னு சொன்னவுடனே
அப்ப நம்ப எல்லோரும் ஒரெடத்தில மாடு அடய வப்பும்ப்பான்னு
சொல்லி

நாங்க பந்து அடிக்கும்போது
நானும் பந்தடிக்க வாறமுன்னு கேட்டாரே.

அப்ப கேட்டவுடனே - உனக்கு
உத்தியாளும் கிடயாது நீ சின்ன புள்ளயாவும் இருக்காயின்னு சொன்னேன்

இல்ல நீங்க எல்லோரும் ஒருபக்கம் நில்லுங்க
நான்மட்டும் ஒரு பக்கம் நிக்கிறேன்
நீங்களே முதலிலே அடிங்கன்னு சொல்லி
ஓடி பந்து மறச்சாரு நாங்க ஏழுபேரும் அடிச்ச பந்தெ
அந்த இடத்திலயே நின்டு அசயாதெ புடிச்சிமுக குடுத்தாரு
அவரு அடிச்ச பந்து காலய்யில ஏழுமணிக்கி அடிச்சபந்து
பன்னெண்டு மணிக்கி எடுத்துவந்து குடுத்தெம்
பன்னெண்டு ஒருமணிக்கி அடிச்சபந்து
நாலுமணி ஆயி போயிரிச்சி பந்தெடுத்து வந்து சேருதற்கு
அப்போது பந்த கொண்டாந்து குடுத்து - எங்க
காதுல கிடந்த கவுசமும்தானும் ஈடுவச்செம்
வெள்ளி மோதுரத்த ஈடுவச்சென்
வெள்ளி அரணாவ ஈடுவச்சென்
இத்தாதியும் வேணாம் நாளய்க்கி ஒன்னுடய மொதலாளிய
பொழுது கிளம்பயில யுத்தத்துக்கு வரச்சொல்லு
யாருன்னு கேட்டாக்கா

மன்னவன் முதற்சோன பெற்றெடுத்த சின்னாண்டியின்னு சொல்லுங்கடா
அப்படி யுத்தத்துக்கு வல்லையினு சொன்னாக்கா
உங்க பொண்டாட்டி புள்யெல்லாம் - அவருடைய
உருண்டச்சோறு திங்கும் உப்பாநல்லெ கறுப்பனாம்
வச்சசோறு திங்கும் வகுத்து முனியனாம்
நந்நாழிக் கன்டுகளாம் மூனுநல்லெ பேரெயும்விட்டு
சிறபுடிக்கச் சொல்லுவாராம் என்றுமங்கே சொன்னவுடனே - அந்த
ஏழுநல்லெ பேருகளும் அந்த இடத்திலேலே பாற்கலயத்தைத்
தூக்கித் தானுமங்கே அடிச்சானே அப்போதும்.

எதுரெல்லா கோட்டய்க்கி எதுருவந்து சாச்சிதடா
வாதில்லா கோட்டய்க்கி வாதிவந்து சாச்சிருச்சி
என்று சொல்லி ஏழுநல்லெ பேருகளும்
போறானே சிறுகொடி நாட்டுக்கே.
அப்ப போயித்தானும்,
ஏழுநல்லெ பேருகளும் அவருடைய அரண்மனையே போயி
ஏழுநல்லெ பேருகளும் யோசினெ பண்ணுறானே - அப்ப
யோசினெ அம்பலம் சொல்லுறானே,
அண்ணண்ணேன் நான் சொல்லுற யோசினெபுடிக்கி செய்தேமானாக்கும்
அவன் தகப்பன்தலய அறுத்ததுபோல அறுத்து - நம்ம
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலிலே - அங்கே
எட்டுநாள பாவக்கூத்துப் போடுறதற்குக் கொண்டுதான் போயிறலாம்.

என்னாடா யோசினெ? யினுங் கேட்டானே
நம்ம பொழுது கிளம்புறதிற்கு முன்பாக
நம்மளுடைய பண்ணக்காரன் ஏழுபேரயும் ஓடித்தானும்
பந்தெடுத்துக் குடுக்கிறதுமாரியா ஓடவுஞ் சொல்லுவம்
அவன் படுத்து நித்திரயும் போவான்
படுத்த படுக்கையிலயே நம்ப புடிச்சிக்கிற சொல்லுவும்
அவனுந் தானுமங்கே புடிச்சவுடனே - நம்ம
படய படதிரட்டி பட்டாளத்த முன்னெவிட்டு
அவன்தகப்பன் தலய அறுத்ததுபோல அறுத்துருவுமுன்னு சொன்னானே
அப்போதும்.

அப்ப சரியின்னு சொல்லிலங்கே
அதேபிரகாரம் ஏழுநல்லெ பேரயுங் கூப்பிட்டு
அடடே! நீங்க காலெய்யில எந்திரிச்சி
பொழுது கிளம்புறதற்கு உள்ளாகப்
பந்தெடுத்துக் குடுக்கப்போறதுமாரியா ஓடித் தானுமங்கே
அவன் படுத்து இருப்பான்
படுத்த படுக்கையோட புடிச்சிக்கிங்கடா நாங்க
படய படதிரட்டி பட்டாளத்த முன்னெவிட்டுவாரமுனு சொல்லிலங்கே
அவெங்கள விடியமுன்னெ ஏழுமணிக்கி முன்பாக
விரட்டிமுக விட்டார்கள்.
அதேபிரகாரம் ஏழுநல்லெ பேருகளும் ஓடிமுக போறானே.

சின்னாண்டி தானுமங்கே,
தோகவந்தான் பொட்டெ தொந்தி மணலிலே தானும்
அப்போது மணல உசரமாகக் குமிச்சிலங்கே
வடக்கே தலயவச்சி தெக்கெ காலயும் நீட்டிப்
படுத்துமுக நித்திரயும் போறாரே.

அப்ப ஏழுநல்லெ பேருகளும் போயித் தானுமங்கே
ஒன்னுமேல ஒன்னு விழுந்துதான் அமுக்கிமுக புடிச்சிமுகக் கிடக்குறானே.

அப்போதுதானும்,
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் அந்த மூளிக்குட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்லெ வீரப்பன் ஏழுதலமக் காரனும்
படய படதிரட்டி பட்டாளத்த முன்னெவிட்டு
ஆயிரம் படய அங்கே வருகுதங்கே - அப்போது
எண்ணெக் குடத்தீலே எறும்புவந்து சூழ்ந்ததுபோல்
தண்ணிக் குடத்தீலே தவளவந்து சூழ்ந்ததுபோல்
படையும் வரும்போது விட்டுடாதெ நாங்க வந்துர்றமுன்னு சொல்லிலங்கே
கிட்டெ நெருக்கிமுக வரும்போதுதானும் - சின்னாண்டி தானுமங்கே
என்னடா இந்தமாதிரி வந்து புடிச்சி அமுக்கிமுக கிடங்காங்களெ
என்னா காரணமுனுதானும்
வடக்கெ தலவச்சிருந்தத தானுமங்கே
அப்ப தலயயும் சாச்சிலங்கே மேறுக்கே முகமாக ஏறிட்டுப்பாத்தாரே
படயும் வருகுதங்கே சரியினு சொல்லிலங்கே
முடியாதவன்போலெ பாசாங்கம் பண்ணித்தானும் படுத்து இருந்தாரே
கிட்டெ நெருக்கியும் படயும் வந்தவுடனே - அந்த
ஏழுபேரயும் தூ க்கிகிட்டு சின்னாண்டி நட்டாமயே எந்திரிச்சி
கிடா துலுக்குனதுபோல துலுக்குனவுடனே
ஏழுபேரும் ஓடி பொத்து பொத்துன்னு விழுந்தானே அப்போதும்.
அப்ப விழுந்தவொடனேதானும் அப்போது தானுமங்கே
தெக்கே வருகுதுடா மாமா வலரி வடக்கே ஒதுங்கடா மாமா
வடக்கெ வருகுதுடா மாமா வலரி தெக்கெ ஒதுங்கடான்னு சொல்லிலங்கே
சின்னாண்டி ஆயிரம் படயயும் அடிச்சிமுக அறுத்துக் குமிச்சாரே.

அப்போது ஆறாக ஓடுதங்கே - அப்ப பாக்கும்போது
ஏழு பேருகளும்தான் நீங்கலாகவே போறார்கள்
அப்போது ஏழுபேரும் தலகாலு கிழிஞ்சிமுக
அப்போது சிறுகொடி நாடுதானும் புறப்பட்டுப் போனார்கள்
அப்போது சின்னாண்டி தானுமங்கே - அப்போது
மாட்டெயும் கிளச்சிலங்கே
தும்பப்பட்டி வயலிலே கிளச்சிமுக விட்டுட்டுத் தானுமங்கே
சின்னாண்டி தானுமங்கே,
தோகவந்தான் பொட்டெ தொந்திமணல் ஊரணியிலே

விழுந்து குளிச்சி முழுகிலங்கே
சின்னாண்டி புறப்பட்டாரே வெள்ளலூரு நாட்டுக்கே.

அப்ப வெள்ளலூரு நாடு போயித் தானுமங்கே,
அப்போதுதானும் பேப்பெருமாவக் கூப்புட்டு
அண்ணண்ணேன்! நம்மளுடைய மாடு - அங்கே
தும்பப்பட்டி வயலிலே மேஞ்சிமுக நிக்கிது-மாடு
தும்பப்பட்டி கிராமத்ல மேஞ்சி அடயட்டும்
இன்னமே நான் மாட்டுக் கிடய்க்கி வரமாட்டேன்
என்று சொல்லிவிட்டுத் தானுமங்கே - சின்னாண்டி தானுமங்கே
வெள்ளலூரு அரண்மனயே இருக்கும்போது,
இவன் சிறுகொடி நாட்டுக்குப் போயித்தானும்
ஏழுநல்லெ பேருகளும் யோசினெ பண்ணுறானே
என்னடா யோசினெ இவன்தலய அறுக்க வேணுமே
என்றுமங்கே தானுமங்கே யோசினெ பண்ணும்போது - அப்போது
எல்லாத்துக்கும் யோசினெ அம்பலம் சொல்லுவானே,
அண்ணண்ணேன் நான்சொல்லுற யோசினபுடிக்கிச் செஞ்சமானாக்கும்
அவன் தகப்பந்தலய அறுத்ததுபோல அறுத்துறுவமுனு
சொன்னானே அப்போதும்.

என்னடா யோசினெயினு கேக்கும்போது - நம்ப
பதினெட்டுல கிராமத்துல குடிபடயிலெகிட்டெ தானுமங்கே
வாவாட்டிக்கி அரரூபா கைம்பொண்டாடிக்கி காரூபா வச்சிலங்கே
வரியும் வச்சித் தானுமங்கே
சின்னாண்டிக்கி இருபங்கு நமக்கு மூனுபங்குமுனு சொல்லி
பகுத்துக் குடுக்கச் சொன்னமானாக்கும் - அவன் வந்து
சில்லறயகளப் பாத்துப் பகுந்து இருக்கம்போது
நான் பக்கத்திலெ நின்டு - அவன் தகப்பந்தலய
அறுத்ததுபோல அறுத்துருவமுனு சொன்னானே அப்போதும்.

சரின்னும் சொல்லிலங்கே
அதே பிரகாரம் அந்தப் பதுனெட்டுல உள்ள கிராமத்லியும்
வாவாட்டிக்கி அரரூபா கைம்பொண்டாட்டிக்கிக் காரூவா வச்சிலங்கே
வரிவச்சித்தானும் அப்போது கொண்டாந்து வைத்துகிட்டு
அப்போது காகிதமும் எழுதினார்கள் சின்னாண்டிக்கி
காகிதத்த வாங்கிமுக வாசிச்சி பாத்துட்டுதானும்,
அக்கையடி அங்கெ! நம்மளுடைய மாமாமாரு தானும் - அங்கே நம்ம
கூட்டப்புளி ஊரணியிலே மந்தக்கூட்டம் போட்டுருக்கார்களாம்
என்னெய வரச்சொல்லி காகிதம் வந்திருக்கக்கா
என்றுமங்கே சொன்னொடனே,

காராள புறந்த கருத்தவனம் அப்போது தானுமங்கே
ஆக்குனா சோறுகள் ஆவரம் புச்சைகளிலே
பொங்குனா சோறுகள் புளியம் புச்சைகளிலே - அங்கே

பதுனெட்டு வகக்கறியும் சின்னாண்டிக்கிப் பாங்குடனே தான்சமைத்துச்
சாதம் படைத்தாளே சாப்பிட் டிளப்பாறிர் சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளப்பாறி இன்னங் கொஞ்சம் ஏப்பமிட்டு
கட்டோட வெத்திலயும் கமுகும் இளம்பாக்கும்
செப்போட சுண்ணாம்ப அங்கே சேர்ந்தெழைத்துத் தான்போட்டு
சின்னாண்டி தானுமங்கே
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெயில குருதயில ஏறிமுக உக்காந்தவுடனே - அப்ப
காராள புறந்த கருத்தவனம்
வாழ்த்தி வரங்குடுத்தாள் தம்பிக்கி வலதுபுறங் கைகுடுத்தாள்
போற்றி வரங்குடுத்தாள் தம்பிக்கி போகவர கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும் சின்னாண்டி தங்கமுகமாக வரவேணும் - அங்கே
நடுப்படயே போனாலும் சின்னாண்டிக்கி மறுப்படக் கூடாதுன்னு
அப்போது தானுமங்கே அனுப்பிச்சி வச்சாளே அப்போது.

சின்னாண்டி மூனேயமுக்கா நாழிகளுக்கு உள்ளாக
கூட்டப்புளி ஊரணியும் போயிநல்லெ சேந்தவுடனே
அப்போது தானுமங்கே
குருதமேல இருந்துக்கிட்டு கொண்டாங்கனு சொல்லிலங்கே
அவெங்களுக்கு ஒருபங்கும் சின்னாண்டிக்கு இருபங்குமாகப் பிரிச்சிமுக
எறிஞ்சாரே.

அப்போது அவெங்களும் வாங்கிகிட்டு
இதுலயும் வெற்றிகொண்டு போயிட்டான்னு சொல்லி
ஏழுநெல்லெ பேருகளும் சிறுகொடி நாடு திரும்பிமுக போனார்கள்.

அப்போது சின்னாண்டி தானுமங்கே,
இந்தப் பணத்த அற்பத்தனமாகக் கொண்டா போறதுனு சொல்லி
அவுகளெயும்தானும் வந்த மனுவெர்களெடம் சூரையிட்டுத் தானும் -
சின்னாண்டி
வெள்ளளூர் நாடு திலும்பிமுக வந்தாரே.

அப்ப வந்து இருக்கும்போது,
இவன் ஏழு தலமக்காரனும் போயி யோசினெ பண்ணுனானே.
என்னாடா யோசினெ! இவன எந்த விதத்திலெயாச்சும்
அவன் தகப்பந்தலய அறுத்ததுபோல அறுக்க வேணுமுனு சொல்லி
அப்ப யோசினெ பண்ணும்போதுதானும்,
அப்போது சொல்லுவானே யோசினெ அம்பலமும் தானுமங்கே
சாவக்கட்டு சண்டைகள் வக்க வேணும்-அந்த
சாவகட்டு சண்டயில வந்து நின்டானாக்கும்
அவன் சாவக்கட்டு சண்டயில குறியாக நிப்பான்
நான் பக்கத்தில நின்டு
அவன் தகப்பந்தலய அறுத்ததுபோல அறுத்திடுவமுன்னு சொல்லிலங்கே
அப்போது காகிதங்கள் எழுதுங்கன்னு சொல்லிலங்கே
அப்போது வெள்ளளூரு நாட்டுக்குக் காகிதமும் எழுதினார்கள்

அப்போது சின்னாண்டி காகிதத்தயும் வாங்கிநல்லெ
வாசிச்சிப் பாத்துட்டுதானும்
சரியின்னு வாரமுனு வதுலுகளும் எழுதிமுக விட்டுட்டு
சின்னாண்டி தானுமங்கே இருக்கும்போது - இவன்
ஏழுநல்லெ பேருகளும் ஒவ்வொருதன் சாவலும்
ஏரநூறு முந்நூறு போட்டுத்தானும்
சண்டய்க்கி உள்ள சாவல வாய்ங்காந்து வைத்து இருக்கார்கள்.

சின்னாண்டி தானுமங்கே குளிச்சி முழுகிலங்கே
அப்போது தானுமங்கே,
அக்கையடி அக்கெ! நம்மளுடயெ மாமன்மாரு
நம்ம கூட்டப்புளி ஊரணியிலெ
சாவக்கட்டு சண்டய்கள் வச்சிருக்கார்களாம்
என்னய வரச்சொல்லி காயிதம் வந்திருக்ககா
என்றுமங்கே சொன்னொடனே
அப்போது தானுமங்கே காராள புறந்த கருத்தவனம்
ஒத்தக்கன்னு பொட்டக்குஞ்சி
ஆங்குஞ்சி பொங்குஞ்சி தெரியாத ஒருகுஞ்சிய புடிச்சிலங்கே
அங்கேயும் கத்தியவும் கட்டிலங்கே
தம்பி குருதமேல ஏறி உக்காந்தவுடனே - இந்தக்
குஞ்சியவும் கையிலேயும் தாங்குடுத்து - அப்போது தம்பிக்கி
வாழ்த்தி வரங்குடுத்தா வலதுபுறங் கைகுடுத்தா
போற்றி வரங்குடுத்தா தம்பிக்கி போகவர கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும் சின்னாண்டி தங்கமுகமாக வரவேணும்
நடுப்படயே போனாலும் சின்னாண்டிக்கி மறுப்படக் கூடாதுனு
அனுப்பிச்சி வச்சவுடனே - சின்னாண்டி
மூனேயமுக்கா நாழிகளுக்குள்ளாக
கூட்டப்புளி ஊரணியே போயிநல்லெ சேந்தாரே.

போயிநல்லெ சேந்தவுடனே தானுமங்கே
அவுகளுடய சாவலயும் துறந்துமுக விட்டார்கள் - சின்னாண்டி
குருதமேல இருந்துகிட்டு - இந்த
ஒத்தக்கண்ணு பொட்டக்குஞ்சிய தூக்கி எறிஞ்சாரே,
ஏழுபேரு சாவலயும் ஒவ்வொரு போட்டோட
முண்டம் வேற துண்டம் வேறயா ஓடி விழுந்துதங்கே அப்போது
ஏழுதலமக்காரனும் அப்போது தானுமங்கே
இவன் இதுலயும் வெற்றிகொண்டு போயிட்டான்னு சொல்லி
அங்கே சிறுகொடி நாட்டுக்குத் திரும்பிமுக போனானே அப்போதும்.

அப்ப போனவொடனே தானுமங்கே சின்னாண்டி தானுமங்கே
அந்த ஏழுநல்லெ சாவலயும் தூக்கித் தானுமங்கே
வந்தவர்களெடம் குடுத்துட்டு சின்னாண்டி திரும்பி
வெள்ளலூ ரு நாடுவந்து இருக்கும்போது - இவன்
ஏழுதலமக்காரனும் போயி யோசினெ பண்ணும்போது

யோசினெ அம்பலம் சொல்லுதங்கே - அண்ணென் நம்ம
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலிலே
எட்டுநாளப் பாவக்கூத்துப் போடவேணுமினு சொல்லி
காகிதமும் எழுதுங்கண்ணேன் - அவன்
அப்போது பாவக்கூத்துக்கு வருவான் - அவன்
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சிமட்டெ குருதெயில வரும்போது - நம்ம
சுத்திப் படுகிடங்கு வெட்டி வச்சிருந்த மானாக்கும்
அவன் குருதமேல வந்ததும் தானுமங்கே
வந்தவுடனே அந்தப் படுகிடங்குல விழுந்தவுடனே - அந்தக்
குருதயவும் அவனயும் அந்தப் படுகிடங்கிலயே
தாத்துப்புருவமுன்னு சொல்லிலங்கே
அப்போது காகிதமும் எழுதிமுக விட்டார்கள்.
அப்போது சின்னாண்டி,
காயிதத்தயும் வாங்கிநல்லெ வாசிச்சிப் பாத்துட்டு
சரி வாரமுனு சொல்லிலங்கே,
வதுலுகளும் எழுதிமுக விட்டுட்டுத்தானும் - அப்ப
காராள புறந்த கருத்தவனத் தெடத்தில் போயிலங்கே
அக்கையடி அக்கெ! நம்ம மாமம்மாரு தானுமங்கே - நம்ம
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலிலே
எட்டுநாள பாவக்கூத்து நடத்துறார்களாம்
என்னைய வரவும் சொல்லியிருக்கார்க ளக்கா
என்றுமங்கே சொன்னாரே.

அப்போது தானுமங்கே இவுக ஏழு தலமக்காரருகளுந்தானும்
பாவக்கூத்துக்குள்ள ஆளுகள கூட்டிமுக வந்திலங்கே
அங்கே, வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலிலே
வைத்துத்தானும்
ஏழுபேரு பொண்டாட்டி புள்ளய்களுக்கு எல்லோருக்குந்தானும்
ஏறுபரணி போட்டு அதுலயும் உக்காந்து இருக்கார்கள்.

அப்போது தானுமங்கே சின்னாண்டி தானுமங்கே
இங்கே சொன்னவுடனே,
காராள புறந்த கருத்தவனம் - அடடே தம்பி!
உனக்கு ஆண்வேசம் போட்டா அறுத்தலாவே இருக்கும்
உனக்குப் பெண்வேசம் போட்டா பொருந்தியிருக்குமுடா தம்பியினு
சொல்லிலங்கே

அப்ப காராள புறந்த கருத்தவனம்
தம்பிய குளிச்சி முழுகிலங்கே வரவும் சொன்னவுடனேதானும்,
அப்போது சின்னாண்டி,
தெப்பக் குளமெறங்கி அங்கே குளிச்சி முழுகிலங்கே வந்தவுடனே தானும்
அக்கா போடும் நகையள பூரா போட்டுத் தானுமங்கே
அக்கா உடுத்துந் துகில எடுத்திலங்கே கட்டித்தானும்

அப்போது சின்னாண்டிய பாக்கும்போது - அங்கே
நிலக் கண்ணாடியில பார்க்கும்போது
சந்திரனும் சூரியனும் ஒளிவிட்டது போல இருக்குது
சின்னாண்டி தானுமங்கே
அங்கே பாப்பார பொண்ணு வடிவு எடுத்திலங்கே
ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெயில குருதயில ஏறி உக்கார்ந்தவுடனே
அப்ப காராள புறந்த கருத்தவனம் - தம்பிக்கி
வாழ்த்தி வரங்குடுத்தா தம்பிக்கி வலதுபுறங் கைகுடுத்தா
போற்றி வரங்குடுத்தா தம்பிக்கிப் போகவர கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும் சின்னாண்டி தங்கமுகமாக வரவேணும்
நடுப்படயே போனாலும் சின்னாண்டிக்கி மறுப்படக் கூடாதுனு
அனுப்பிச்சி வச்சாளே.

மூனேயமுக்கா நாழிகளுக்கு உள்ளாக - சின்னாண்டி
கூட்டப்புளி ஊரணி அருக போயி
மேகரப் புளியிலே குருதய கட்டிமுக வைத்துட்டுதானும் - சின்னாண்டி
பிராமணப் பொண்ணு வடிவெடுத்துப் புறப்பட்டாரே - அந்த
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலுக்கே.

அப்ப போனவொடனே தானுமங்கே
அப்போது இந்த ஏழதலமக் காரனும்
என்னாடா அங்கெ ஒரு பாப்பார பொண்ணு மாதரியா வருகுதடா
சின்னாண்டிக்கி வெட்டுன படுகிடங்குல விழந்துரப் போவுது
போயி கூட்டிமுக வாங்கடான்னு சொல்லிலங்கே - அப்ப
ஆளுக்கு ஆளு விட்டு அப்போது போயிநல்லெ சின்னாண்டி எடத்தில,
எந்த ஊரம்மா? நீங்க எந்த ஊருன்னு கேக்கம்போது
நாங்களுந்தானுமங்கே புறமல தேசத்துப் பாப்பார பொண்ணுங்கய்யா
எட்டு நாளய்க்கி முன்பாக இங்க பாவக்கூத்து நடத்துறாகன்னு சொல்லி
இங்கெ பத்திரிக்க வந்திருந்திது
அதற்காக வந்தமின்னு சொன்னொட னே
அப்போது அவனுந்தானும் அழச்சிமுக வரும்போது
இங்கிட்டுப் போயிறாதம்மா சின்னாண்டிக்கி வெட்டுன படுகிடங்கு இருக்குது
இங்கிட்டுப் போயிறாததே சின்னாண்டிக்கி வெட்டுன படுகிடங்கு இருக்குதுனு

கூட்டிவந்துதானும் அவகளுடய
பெண்டாட்டி பிள்ளைக இருக்குற பரணியிலெ போயித்தானும்
அந்த எல்லாத்துக்கும் இளையவள்மக பக்கத்திலே கொண்டுபோயி
சின்னாண்டிய ஒக்கார வச்சார்கள்.

அப்ப வச்வொடனே தானுமங்கே,
சின்னாண்டி உக்காந்து இருக்கும்போது இவன் ஏழுதலமக்காரனும்
என்னாடா இந்த சின்னாண்டிய காணமடா
இன்னம் வரக் காணமினு இவன் ஏசுறான் பேசுறாங்க.

அப்ப சின்னாண்டிக்கி
கண்ணூ சிவக்குதங்கே கடுங்கோப மாகுதங்கே
மூக்கூ சிவக்குதங்கே முன்கோப மாகுதங்கே - அங்கே
கொங்கமுழி கண்க ரெண்டும் கொழுந்துவிட் டெரியுதங்கே
நீலமுழி கண்க ரெண்டும் நெருப்புத்தன லாடுதங்கே - அங்கே
வண்ணமுழி கண்க ரெண்டும் வாட்டிப் போராடுதங்கே - நம்ம
இப்பேரியபட்ட வடிவெடுத்து இங்கெ வந்து இருக்கெம்
இவன் ஏசுறானே பேசுறானே
எந்த விதத்தில் நம்ப போயி வாறது
என்றுசொல்லி யோசினெ பண்ணிலங்கே
அப்போது சொல்லுவாரே அந்த யோசினெ அம்பலம் மக
எல்லாத்துக்கும் இளையவன் மகளெடத்திலே
அக்கையடி அக்கே! வெளிய வாரது மாதிரியா இருக்குதுடிஅக்கெ
வாடியக்கா அப்புடிபோயி இருந்துட்டு வந்துருவமுனு
கூப்புடும்போதுதானும் அவ சொல்லுவாளே அப்போது
அக்கையடி அக்கெ! சின்னாண்டி தானுமங்கே
நாவுலயும் இருப்பான்டி தூ ணுலயும் இருப்பான்டி
துரும்புலயும் இருப்பான்டி
வந்தாலும் வந்துருவான் என்றுமங்கே சொன்னவுடனே,
அவருதான் குருதமேல வருவாருன்னும் சொல்லுறியே
நம்ம குருத வாரதென்ன நமக்குக் கண்ணு தெரியாமயா இருக்கு
நம்ம ரெண்டூ குதிகுதிச்சி வந்துருவமுன்னு சொல்லிலங்கே
சின்னாண்டி தானுமங்கே
பரணிமேல இருந்தவள சின்னாண்டி தந்தரமா அப்போது
பரணியவிட்டுக் கீழஇறங்கி இறக்கித்தானும்
கூட்டிமுகப் போறாரே - கொஞ்சத் தொல போயி
வெளிய போறது மாதிரியா பாவன காமிச்சி - அப்போது சொல்லுவாரே
அந்த தெரியிது பாரக்கா
நான் வரும்போது அந்த ஊரணியிலெ தண்ணீ கிடந்திது
காலலம்பிக்கிட்டு வந்துருவம்என்றுமங்கே கூப்பிட்டவுடனே
அதுதானே சின்னாண்டி வாற வழிப்பக்கம்
என்றுமங்கே சொன்னாளே அப்போது
எப்படி வந்தாலும் குருதமேலதானே வருவாயினு சொல்லுறா
நம்ம ரெண்டு குதிகுதிச்சி ஓடி வந்துருவோமுன்னு சொல்லித்தானும்
சின்னாண்டி தந்தரமா அழச்சிமுக போறாரே.

கூட்டப்புளி ஊரணிகரயும் போயித்தானுமங்கே
அந்த ஊரணியே போயிலங்கே தண்ணியிலே இறங்கி
காலலம்புற பாவனயா அங்கே காலு அலம்பும்போது
அப்போதுதானும் இந்த எல்லாத்துக்கும் இளயவன்மக தானும்
ஏறிட்டுப் பாத்தாளே அங்கே கீவேட்டி தெரிஞ்சிதங்கே
அப்ப வேட்டிய பாத்தவுடனே
அடட சண்டாளப் பாவி! கட்டத் துறவி

முன்னுங் குடிகெடுத்து இப்ப பின்னாலயுமா குடிகெடுக்க வந்தாயினு
கேட்டவுடனே தானுமங்கே
அப்போது கேப்பாரே சின்னாண்டி
அடியடியே! நீந்தான்டி சொன்னெ, சின்னாண்டி
நாவுலயும் இருப்பான்டி துரும்புலயும் இருப்பான்டி
தூணுலயும் இருப்பான்டியினு நீந்தானே சொன்னெ
இப்ப ஒன் நாவுலயும் இருப்பெனடி நான் துரும்புலயும் இருப்பெனடி
என்று சொல்லித் தானுமங்கே
அந்த இடத்திலயே அந்த நகநாணயம் பூரா கழட்டிலங்கே
அந்தத் துயிலயும் கழட்டி பொட்டணமாகக் கட்டிலங்கே
வைத்துகிட்டு தானுமங்கே
ஏழுமலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டேல குருதய அவுத்து
அவளயும் குருதமேல தூ க்கிவச்சி சின்னாண்டி புறப்பட்டாரே
வாணி கருப்பசுவாமி வல்லடியான் கோவிலுக்கே.

அப்ப புறப்பட்டவுடனே தானுமங்கே
இவன் ஏழுதலமக்காரனும் ஏறிட்டுப் பாத்தானே - அப்போது
குருதமேல இருக்குறது என்னடா நம்ம கருத்தவனம் மாதரியா இருக்குதே?
இங்கே பிராமணப் பொண்ணு வடிவெடுத்து வந்தவன் சின்னாண்டி

தான்டான்னு சொல்லி
இவரு கோயிலுக்குக்கோட போவல
அவன் பொண்டாட்டி புள்ளயெல்லாம் கூட்டிகிட்டுத் தானுமங்கே
அப்போது சிறுகொடி நாட்டுக்குப் புறப்பட்டுப் போனானே.

சின்னாண்டி கோயிலிலே போயித்தானும்
வந்திருந்த பாவக்கூத்துக் காரனுக்கு
பீஸி பேசினதத்தானும் குடுத்துட்டுத்தானும் அப்போது
அப்போதுதானும் இந்த எல்லாத்துக்கும் இளயவன் மகளத்தானும்
கொண்டுகிட்டுத்தானும் வெள்ளலூரு நாடுவந்து சேந்தானே அப்போதும்.

அப்ப சேந்தவொடனேதானும் அப்போது தானுமங்கே
இந்த ஏழுநல்லெ பேருகளும் போயித்தானும்
இன்னமெதானும் அவன நம்ம எதுவும் செய்ய முடியாது
இன்னமெ அவன் சரவயில் நம்மளும் போகக்கூடாது
என்று சொல்லித் தானுமங்கே - இவன்
ஏழுதலமக் காரனும் சிறுகொடி நாட்டுல போயி
இருக்கும்போதுதானும் சின்னாண்டியுந்தானும்
சிறுகொடி நாட்டுப் பயலுக பயந்து இருந்துட்டாங்க
என்று சொல்லித் தானுமங்கே - சின்னாண்டியும்
வெள்ளலூரு நாட்டுல அவரு இருக்கும்போது தானுமங்கே
அப்போது அழகாக்கோட்ட சிங்கணிப் பட்டியில இருந்து
வாறானே அப்போது அழகக்கோட்ட சிங்கணிப்பட்டி பயலுக

வந்துதானுமங்கே வெள்ளலூரு நாடு வந்து
அப்போது சின்னாண்டி எடத்திலெ வந்து
வெள்ளலூர் எசமானே! உங்களுக்கு உங்களுடைய மாமனாராக்குந் தானும்
எப்போதுந்தானும் ரோதம் ரோதமாதானும் இருக்கீது
அவுகளுடைய மட்டெ ஓட்டிக் குடுத்துருங்க
நாங்க அழகாக்கோட்ட சிங்கணிப்பட்டிக்கு
ஓட்டிமுக போயிறமுனு கேட்டானே அப்போதும்.

அப்ப கேட்டவுடனே தானுமங்கே
காராள புறந்த கருத்தவனம் அங்கே
அந்தப்புறமும் ராணி தலவாசலுமா இருக்கும்போதுதானும்
இந்தச் சத்தம் காத்துல விழுந்தவுடனே
அப்போது புறப்பட்டு வந்து தானுமங்கே,
அடடே தம்பி சின்னாண்டி தானும்
நம்ம மாமன்மார்களோட எத்தன யுத்தத்துக்குப் போனாலும் நீ போ
இந்தப் பசுபதிககிட்ட மட்டும் போகாதென்னு சொல்லிகிட்டு
காராள புறந்த கருத்தவனம் தானுமங்கே
அந்தப்புறமும் ராணிதல வாசலுமா இருக்கும்போது
இவன் அழகாக்கோட்ட சிங்கணிப்பய
எட்டோட எட்டு நாளா அங்கெதானும்
சின்னாண்டி காலுலயும் கிடக்கானே அப்போது.

அப்ப சின்னாண்டி சொல்லுவாரே
அடட அழகாகோட்ட சிங்கணிப்பட்டி பயலுகளா
அந்த மாட்ட ஓட்டுறதா இருந்துதானாக்கும்
என் வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரன் கோவிலிலே
அங்கே பம்பக் கிடாயறுத்து
ரத்தமும் சோறும் ஒன்னா பிரட்டித் தின்னுட்டு
ஆனமலக் கடவாயிலே ஓடியாருவியானாக்கும்
நான் பின்னாலெ வாறமுனு சொன்னாரே அப்போதும்.

அப்ப அதே பிரகாரம்
அழகாக்கோட்ட சிங்கணிப்பட்டி பயலுகளும் போயித் தானுமங்கே
பம்பக் கிடாயறுத்து ரத்தமும் சோறும்
ஒன்னா பிரட்டிமுக தின்டுட்டுத்தானுமங்கே
ஓடித்தான் ஆனமலக் கடவாயிலே ஓடி ஏறுனானே

கண்ணூ தெரியாதபுடிக்கி தலகால உருளுறானே
அப்ப சின்னாண்டி ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டெயில குருதயில ஏறித்தானுமங்கே
அப்போது போயிநல்லெ பாக்கும்போது - இவன்
அழகாக்கோட்ட சிங்கணிப்பட்டி பயலுக - அப்போது
கண் தெரியாத புடிக்கி - அப்போது
மலயிலயிருந்து கீழ உருண்டுமுக கீழ கிடக்கும்போது

இப்படித்தானடா ஓங்க பாட்டமூட்டு மாட்டெ
ஓட்டிப் போறியான்னு சொல்லிலங்கே
சின்னாண்டி ஆனமலக் கடவாய ஆகாசமா தாண்டிலங்கே
போயித்தான் பாத்தாரு
ஏழுபேரு மாடும் அடஞ்சிமுக இருந்துதங்கே
ஏழுபேரு பண்ணக்காரனும் படுத்து நித்திரயும் போனானே.

அப்ப ஏழுபேரயும் வெட்டிச் சம்காரம் பண்ணிலங்கே
மாட்டக் கிளச்சாரு, மாடுதான் ரத்தவாடதட்டி மாடு கிளயவில்லை
அப்போது தானுமங்கே
ஒரு பேத்த கன்டெ புடிச்சிலங்கே
குடலச் சொரிஞ்சிதானும் ஒதப்பி எறியுதங்கே
அப்போது உதறிவிட்டுக் கிளப்புறவுடனே
ஏழுகெட மாடும் புறப்பட்டு வந்தவுடனே - இவன்
அழகாக்கோட்ட சிங்கணிப்பட்டி பயலெடத்தில பத்திமுக குடுத்துட்டு
சின்னாண்டி ஏழு மலயாளம் பொண்டுக ராச்சீயம் - அங்கே
பூச்சி மட்டெயில குருதயில வரும்போது
இந்த ரெத்த வாட தட்டி லங்கே
தன்னுடய்க்கி இல்லாம - அங்கே
சோழவந்தான்பட்டி தொந்திமணலில
குருதயவிட்டு கீழே விழுந்துமுக கிடக்காரே.

அப்ப கிடந்தவொனேதானும் விடிஞ்சவுடனேதானும்
ஏழுபேரு பண்ணக்காரனுடய பொஞ்சாதி தானுமங்கே
அப்போது சோறுகளும் கொண்டிலங்கே ஓடிமுக வாறாளே
கள்ளம்பரம்புல வந்து பார்க்கும்போது
மாட்டெயும் காணோமே அப்போது சொல்லுவாளுகளே
அடியடியே தங்கச்சிமாரே! நம்மளுடய மாடூ
கள்ளம்பரம்புல போயி கலந்தோடி மேயுமடி
செல்லம்பரம்புல நம்மப சிறந்தோடி மேயுமடி
நம்மளுடய கணவங்க ஏழுபேருகளும்
பந்தடி மேடையிலே பந்து அடிப்பார்கள்
இன்னக்கி இதுவரய்க்கும் மாட்டெ காணுமே
வாங்கடி மாடு அடஞ்செடத்திலெ போயி பாப்பமுனு ஓடி
ஆனமல கடவாய ஆஞ்சிமுக பாத்தாளே
ஏழுபேரும் முண்டம்வேற துண்டம் வேறயா கிடந்தார்கள்
அந்த இடத்திலேயே கஞ்சிக்கலயத்தப்போட்டு உடச்சிபிட்டு
ஏழுபேரும் ஒப்பாரி வச்சிலங்கே போறாளே அப்போது.

சிறுகொடி நாடுதானும் போயித்தானும்
அடடே சண்டாளப் பாவி, கட்டத் துறவி பயலுகளா - இன்னக்கி
அவன் செத்துப்போனா நீ எடுத்துக்குறுவெ
நீ செத்துப்போனா அவன் எடுத்துக்கிறுவான்

எங்க ஏழஎளியவ தாலி அறுத்திட்டாளடா
ஒன்னுடய மருமாயமுனு சொல்லிலங்கே
போயித்தானும் ஒப்பாரி வச்சவுடனேதானும்

அப்போது தானுமங்கே ஏழுநல்லெ பேருகளும்
நம்ம பயந்து இருந்தமுனு சின்னாண்டி ஓடஓட துரத்துறான்டா
என்று சொல்லித் தானுமங்கே அப்போது தானுமங்கே
படய படதிரட்டி பட்டாளத்த முன்னெவிட்டு
ஆயிரம் படயுமங்கே வருகுதங்கே
எண்ணெ குடத்துல எறும்புவந்து சூழ்ந்தததுபோல்
தண்ணிக் குடத்துல தவளவந்து சூழ்ந்ததுபோல்
படயும்வந்து தானுமங்கே
சோழவந்தான் பொட்டெ தொந்தி மணலிலே வந்து பாக்கும்போது - சின்னாண்டி

தன்னுணர்ச்சி இல்லாமெ கீழெ கிடக்காரு
குருதயும் நிக்கிதங்கே அப்போது சுத்தி வளஞ்சிலங்கே
சின்னாண்டிய கைப்புடியா புடிச்சவுடனேதானும்
அப்ப சின்னாண்டி தானுமங்கே - அப்போது
எந்திரிச்சி தானுமங்கே சொல்லுவாரே அப்போதும்
மாமன்மாரே மச்சான்மாரே அண்ணன்மாரே தம்பிமாரே
இன்னக்கி ஒங்க கையினாலே நான் வெட்டுப்பட்டு
சாகுறது சாகத்தான் போறேன்
எனக்குத் தண்ணித்தாவமா நாவறட்சி கொள்ளுது
எனக்குத் தண்ணியகுடுத்து என்னெய வெட்டுங்கன்னு சொன்னாரே அப்போதும்.

அப்ப சொன்னவுடனே தானுமங்கே அப்போது தானுமங்கே
சின்னாண்டி சொன்னவுடனே அப்போது அதுல ரெண்டுபேரு சொல்லுவானே

ஏச்சிபுருவான்டா சின்னாண்டி என்றுமங்கே சொன்னவுடனே
அதுல ரெண்டுபேரு சொன்னான் அவனுடய தகப்பன வெட்டி
பனிரெண்டு வருசமாக பஞ்சநாடா போயிரிச்சி மழமாரி இல்லாம
இப்ப இவனத் தண்ணித் தாவத்தோட வெட்டுனமானாக்கம்
அது ஒரு கருமுசமா நின்டுகிருமுடா
படய சுத்தி வளஞ்சிலட நம்ம அவனத்
தண்ணி குடிக்க விடுங்கடான்னு சொல்லிலங்கே
படயுந் தானுமங்கே நாலுபக்கத்து ஊரணிக்கரய
சுத்தி வளஞ்சிலங்கே உருவுன கத்தியோட நிக்கிதங்கே - அப்போது
சின்னாண்டிய தானுமங்கே தண்ணி குடிக்கவும் விட்டார்கள்

அப்போது.

போறாரே சின்னாண்டி சோழவந்தான் பொட்டெ தொந்திமணலூரணியிலே
முழங்காலு மட்டுந் தண்ணியிலெபோயி நின்டிலங்கே

தண்ணிய அள்ளித்தானும் மூஞ்சியக் கழுவிலங்கே
அப்போது தானுமங்கே
நாலுதிசயும் நாப்பத்தாறு கோணலயும் அளவிட்டுத் தானுமங்கே - அப்ப
என்னப் படச்சவனே என்தகப்பா ஈஸ்வரனே - நான்
உத்தமீ பத்தினியாள் ஒருசொல்லு பாதகத்தி
வகுத்திலே புறந்திருந்தே னானாக்கும் - என்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரனே
உனக்கு அடியேன் அடித்தேரு ஓட்டி வப்பேன்
நான் இந்தத் தண்ணிக்குக் கீழே முக்குளிக்கும்போது
எனக்கு ஒரு மொட்டெ வலரியாக்கி என்கையிலெ அப்புறம் வேணுமுனு சொல்லி
அங்கே சாமிய தோத்தரவு செய்திலங்கே
சின்னாண்டி தண்ணிக்கீழே லவக்குன்னு முக்குளிச்சான் - அப்போதும்

அப்ப முக்குளிச்ச வொடனேதானும் அப்போது சின்னாண்டி
மூனேயமுக்கா நாழியறுதி தண்ணிக்கீழே கிடந்திலங்கே
ஒரு மொட்டெ வலரியெடுத்துக் கையிலேயும் தான்புடிச்சி
தெக்கே வருகுதுடா மாமா வலரி வடக்கே ஒதுங்குடா
வடக்கே வருகுதுடா மாமா வலரிதெக்கே ஒதுங்குடா
என்று சொல்லித்தானும்
ஆயிரம் படயும் சின்னாண்டி அறுத்து குமிச்சிலங்கே
விரட்டிமுக விடும்போது
மாமாமாரு எழுபேரு தலதான் நீங்கலாகவே இருக்கிது
அப்போது ஏழுநல்ல பேருகளும் அங்கே
சிறுகொடி நாடு திரும்பிமுக போயிட்டார்கள்.

அப்போதுதானும் சின்னாண்டி
ஏழுமலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சிமட்டெயில குருதயில ஏறி வெள்ளலூரு நாடுதான் போயித்தானும்
அப்ப குருதகட்டும் சாவடிய குருதய கட்டீ வைத்துட்டுத்தானும்
சின்னாண்டி தானுமங்கே அப்போது
மேவீடு மெத்தமேல ஏறிலங்கே
சாஞ்சிமூஞ்ச கட்டிலிலே சாஞ்சீ படுத்திலங்கே
இருக்கும்போது தானும் - அப்போது
அழகர்கோட்ட சிங்கணிபட்டியிலே எட்டுநாளெ நாடகம் நடக்குதங்கே
அந்த எட்டுநாளெ நாடகத்துக்குப் பேப்பெருமாதானும்
தும்பப்பட்டி வயலிலே மாடு அடயிறது
அதோட பேப்பெருமா - அந்த
அழகர்கோட்ட சிங்கணிபட்டிக்கி நாடகத்துக்குப் போயிட்டாரே.

அப்போது சிறுகொடி நாட்டுலதானும் ஏழுதலமக்காரனும் - அந்தக்
சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் முனையாளி அம்பலம்

மூளிநல்லெ வீரப்பன் அந்த ஏழு தலமக்காரனும்
காரளன் சீராளன் கருநீல வன்னியரு தேசம்போயி - அந்தக்
காராளன் சீராளன் கருநீல வன்னியரெ கொண்டுவந்து
அப்போது சின்னாண்டி மாட்டெயும் ஓட்டிமுக விட்டார்கள்.

அப்ப பேப்பெருமா தானுமங்கே,
அழகர்கோட்ட சிங்கணிப்பட்டியில எட்டுநாள நாடகமும் முடிஞ்சவுடனே
வந்துதானும் மாட்டெயும் பாத்தாரு மாட்டெயும் காணமே
அப்போது பேப்பெருமா தானுமங்கே
எண்ணீ நினச்சாரே எண்ணமற்ற சிந்தையிலே
பாற்றா நினைத்தாரே பலகோடி யோசினயெ
ஆறெ நினைத்தாரோ அளவற்ற சிந்தையிலே
நம்மளுடய மாமன்மாரு நம்மளுடய மாட்டெ
காராளன் சீராளன் கருநீல வன்னியரெ கொண்டுவந்து
நம்ம மாட்டெயும் ஓட்டிக் குடுத்துட்டார்கள்
என்று சொல்லித்தானும்
பேப்பெருமா வெள்ளலூரு நாடு வந்து,
அடடே தம்பீ சின்னாண்டி
நம்ம அழகர்கோட்ட சிங்கணி பட்டியிலே
எட்டு நாள நாடகம் நடந்தாது - நான்
நாடகத்துக்குப் போயிட்டேன்
நம்மளுடய மாமன்மாரு தானுமங்கே
நம்ம மாட்டெ தானுமங்கே
காராளன் சீராளன் கருநீல வன்னியரெ கொண்டுவந்து
நம்ம மாட்டெயும் ஓட்டிமுக கொண்டு
குடுத்துமுக விட்டார்கள் என்றுமங்கே சொன்னவுடனே

அப்ப சின்னாண்டி தானுமங்கே
இன்னூங் கவல அடஞ்சி இனிக்கவல தானடைந்து
வல்லவனுக்கு வல்லவன் வையத்திலெ ஒருதன்
இருந்துதானெ இருக்கான்
நம்ம மாட்டெயும் ஓட்டிப் போற துக்கினு சொல்லி
கவலய அடஞ்சிலங்கே மூனேயமுக்கா நாழியறுதி
அப்ப சின்னாண்டி தானுமங்கே
மூனேய முக்கா நாழிய கழிச்சி
அப்போது சின்னாண்டி சிரிச்சி மகிழ்ந்திலங்கே

அப்போது காராள புறந்த கருத்த வனத்தெடத்திலெ
அக்கையடி அக்கெ! நம்ம மாட்டெ போயி
நான் ஓட்டீ வரவேணும் - இனக்கு
வாழ்த்தி வரங்குடக்கா வலதுபுறங் கைகுடக்கா
போத்தீ வரங்குடக்கா இனக்குப் போகவர கைகுடக்கா
என்றுமங்கே கேட்டவுடனே - அப்போது
காராள புறந்த கருத்தவனம் - தம்பிக்குத் தானுமங்கே

வாழ்த்தி வரங்குடுத்தா வலதுபுறங் கைகுடுத்தாள்
போற்றி வரங்குடுத்தா தம்பிக்கிப் போகவரக் கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும் சின்னாண்டி தங்கமுகமாக வரவேணுமுனு
சொல்லி

அனுப்பிச்சி வய்க்கிம்போது தானுமங்கே
ரெண்டு பீத்தெ செருப்பெடுத்துக் கையிலெயும் தான்புடிச்சி
கோண கருவக்கம்பு ஒன்னு கையிலெயும் தானெடுத்து
ஒரு அழுக்கு வேட்டியெ இடையிலெயும் கட்டிலங்கே
ஒரு துணி தலயிலயும் போட்டிலங்கே
போட்டுத்தானும் சின்னாண்டி தானுமங்கே
காராளன் சீராளன் கருநீல வன்னியரு
தேசந்தானும் புறப்பட்டாரு அப்போது.

புறப்பட்டுப் போகும்போது
காராளன் சீராளன் கருநீல வன்னியரு தேசம் எட்டுநாள பயணம்
எட்டுநாள பயணத்த எட்டு நாழியளுக்கு உள்ளாக - அங்கே
காராளன் சீராளன் கருநீல வன்னியரு தேசம்
போனவுடனே தானுமங்கே,

அப்போது போயி பாக்கும்போது தானும் - இந்த
ஏழுகெட மாட்டெயும் ஏழு பிருவாக்கி - அங்கே
கன்டு ஈத்தான் மாடு வேறெ விருதல மாடு வேற
பெருங்கன்டுத்தான் மாடு வேறெ சினக்கிடேரி வேற
இப்படி ஏழு பிருவாகப் பிரிச்சி லங்கே
மாடுகும் மேஞ்சிமுக வருகுதங்கே.

அப்ப
சின்னாண்டி போயித்தானும்,
அந்த ஏழுகெட மாடு பிருவுலபோயி நின்டிலங்கே
அப்போது அவங்களொடம் போயித் தானுமங்கே -அப்போது சின்னாண்டி
என்னெய சம்பளத்துக்கு வச்சிக்கிறுவாகளா?
என்று கேக்கும்போது சொல்லுவாய்ங்க
எந்த ஊருப்பா உனக்கு? எந்த தேசம்?ன்னு கேக்கும்போது
எனக்குப் புறமல தேசத்து நான் சக்கிலிய புள்ளயய்யா
எனக்குத் தாயுங் கிடயாது தகப்பனுங் கிடயாது-அப்போது
என்னய சம்பளத்துக்கு வச்சிக்கிறுவாகளா?
என்றுமங்கே கேட்டானே அப்போதும்.
அப்ப கேட்டவொடனே அவெங்க சொல்லுவார்கள் அப்போது
எங்களுடய முதலாளி சாய்ங்காலமா மாட்டுக்கிடய்க்கி வருவாங்க
அப்போது ஒன்னெடத்திலே எங்க மொதலாளியெடஞ் சொல்லி
ஒன்னெய சம்பளத்துக்கு வச்சிக்கிற சொல்லுறமுனு சொல்லிலங்கே
அப்ப கூட்டிமுக போகும்போது சின்னாண்டி மாட்டுக்கு முன்பாக
மாடு அதட்டுற பாவனயா மாட்டெ அதட்டிமுக போயிலங்கே

அப்போது
காராளன் சீராளன் கருநீல வன்னியரு
தேசத்திலே மாடு சாய்ங்காலம் போயித்தானும் அடயும்போது - அங்கெ
காராளன் சீராளன் அங்கெ கருநீல வன்னியரு
சாய்ங்காலம் நாலுமணியப்போலெ மாட்டுக்கிடய்க்கி வந்தவுடனே
என்னடா ஒருத்தன் அழுக்கு வேட்டிக்காரனா
அங்கெ மாட்டுக்கு முன்னால திரியிறானே
எந்த ஊரு எவடமுனு கேக்கும்போதுதானும்
அப்போது அவென்ங்களும் சொன்னார்கள்
அவன் புறமல தேசத்து சக்கிலிய புள்ளெயாம்
தாயுங் கிடையாதாம் தகப்பனுங் கிடெயாதாம்
மாடுகன்னு ஒழுங்கா பத்துவான் போல இருக்குது
சம்பளத்துக்கு இருக்குறமுன்னு சொல்லுறான்னு சொன்னவுடனே
கூப்டுங்கடான்னு சொல்லி அழச்சிமுக வந்தவுடனே
அப்ப சின்னாண்டி தானுமங்கே - அப்போது
காராளன் சீராளன் கருநீல வன்னியரத் தானுமங்கே
கும்புடுறெஞ் சாமியின்னு கையெடுத்தார்
மகராசனா இருப்பா! நீ எந்த ஊரு எந்த தேசமுனு கேக்கம்போது
நான் புறமல தேசத்து சக்கிலிய புள்ளயய்யா
எனக்குத் தாயுங் கிடயாது தகப்பனுங் கிடயாது
நான் மாடுகன்டு ஒழுங்கா பத்தூவேன்
என்றுமங்கே சொன்னவுடனே
என்னா சம்பளங் கேக்குறாயின்னு கேட்டார்கள் அப்போதும்.

அப்ப சின்னாண்டி சொல்லுவாரே - நான்
மாடு மேய்க்கிறதப் பாத்து எனக்குச்
சம்பளங்கள் குடுங்கன்னு சொன்னவுடனே - அப்ப
காராளன் சீராளன் கருநீல வன்னியரு சொல்லுவாரு
அந்த சக்கிலிய புள்ளெ கையிலெ தொத்தகன்டும் மாடுமாக
ஒரு அம்பது மாட்டெ ஓட்டிமுக குடுங்கடான்னு சொல்லிவிட்டு
அவன் அரண்மனய்க்கி போயிட்டானே.

அதேபிரகாரம் சின்னாண்டிகிட்டெ தானுமங்கே
தொத்தகன்டும் மாடுமாக ஒரு அம்பது மாட்டெ
ஓட்டிமுகக் குடுத்தார்கள்.

அப்போது ஓட்டிக் குடுத்தவுடனே தானுமங்கே
காராளன் சீராளன் கருநீல வன்னியரு தேசத்து
அவருடய மகளெயும் தானுமங்கே
இந்தச் சக்கிலிய புள்ளெய்க்கி
சோறயுங் கொண்டுபோயி குடுக்கவும் சொன்னார்கள்
அப்போது சின்னாண்டி மாடு மேய்க்கிறது
காராளன் சீராளன் கருநீல வன்னியரு மக சோறுகொண்டு வாறதும்
வந்தவுடனேதானும் சின்னாண்டி உருவத்த மாத்துதறது

ரெண்டு பேரும் சென்டு குலாவுறது - இந்தப் பிரகாரமா
எட்டுநாளாக மாடு மேச்சிமுக இருக்கும்போது
இந்த நாளய்க்கி உள்ளாக
இந்த தொத்தகன்டும் மாடும் தானுமங்கே - மாட்டுல
மானத்துல மருவு இருந்தாகோட மாட்டு ரேகத்துல மரு கிடயாது
அந்தப் பிரகாரமா மாடு இருக்கீது - அப்போது
எட்டாவது நாளுத்தானும்
காராளன் சீராளன் கருநீல வன்னியரு சாய்ங்காலமா வந்து
இந்த சக்கிலிய புள்ளெ மேச்செ மாட்டெ பாக்கையிலெ
அப்போது தொத்தகன்டும் மாடுமாக இருந்தது - அப்போது
மானத்துல மரு இருந்தாகோட மாட்டு ரேகத்துல மரு கிடயாது
என்னாடா இப்படி மாடு மேச்சி வச்சிருக்கான்
நீங்க எளவட்டங்களா மாடு மேய்க்கிறவங்கே
மாடு தொத்தமாடாவே போகுதடா
எல்லோரும் சக்கிலிய புள்ளெ கையீலெ மாட்டெ ஓட்டிமுக விட்டுட்டு
கோடநல்லெ கேப்பக் கருதுக்கு தண்ணி இரைக்கவேணும்
விடியுமின்னெ வந்து சேருங்கடான்னு சொல்லிட்டு - அப்ப
காராளன் சீராளன் கருநீல வன்னியரு சொன்னவுடனே
அப்போது சொல்லுவாரே சின்னாண்டி
எல்லாத்தியும் நீங்க கூட்டிகிட்டு போங்கெ
நான் மாட்டெ எல்லா மாட்டெயும் ஒன்னாவே விட்டு
நான் மேச்சிக் கொண்டாந்து அடய வக்கிறமுன்னு சொன்னார் அப்போதும்.

அதே பிரகாரம் ஏழுபேரும் புறப்பட்டு
விடியுமின்னெ தானுமங்கே அப்போதும் போறானே - அப்போது
கேப்பக் கருத்துக்குத் தண்ணீ இரைக்கவும்
அப்போது காராளன் சீராளன் கருநீல வன்னியரு மக
சக்கிலிய புள்ளய்க்கி சாதமும் கொண்டிலங்கே
வந்துதானும் குடுத்தவுடனே அப்போது சொல்லுவாரே
அம்மம்மா! நாளய்க்கெல்லாம் நீ சோறுகொண்டு வரவேணாம்
அந்த ஊருல கிடெயுங் கேக்குறாக
எனக்குச் சோறுகளும் போடுறமுங்குறாக
என்றுமங்கே சொன்னவுடனே சரியென்றும் சொல்லிலங்கே
அதேபிரகாரம் அன்னய்க்கித் தானுமங்கே
மாட்டெ கிளச்சிமுக விட்டாரே காட்டுலயும் போகுதங்கே.

ஆவரங் குலயவயும் இத்தாதி மணிப்பிரண்ட குலயவயும் புடுங்கிலங்கே
மாட்டு மணியிலெ பொழுதோட சொருவிலங்கே
அங்கெ பொழுது அடையிறாப்புல
அவுங்க கண்ணுக்கப் பார்வய்க்கிக் கொண்டாந்து
மாடூ அடயிதங்கே அப்போது சின்னாண்டி தானுமங்கே
பொழுதா அடஞ்சொடனெ மாட்டெ கிளச்சிமுக விட்டாரு

பொழுது கிளம்புதங்கே
மாடு வெள்ளலூரு நாடுவந்து சேந்துதங்கே அப்போதும்.

அப்ப சேந்தவுடனே தானுமங்கே
அப்போது விடிஞ்சவுடனே தானுமங்கே
காராளன் சீராளன் கருநீல வன்னியரு மக
சின்னாண்டிய புடிச்சிலங்கே சாதங்கள் எடுத்துகிட்டு
அங்கெ ஓடிமுக வந்துதானும் பாத்தாளே
மாடு அடஞ்சிருக்கு மாட்டெயும் காணோமே - அப்போது
மாட்டுத்தடம் புடிச்சி அங்கே பொழுது அடயுதங்கே
காராளன் சீராளன் கருநீல வன்னியரு தேசத்து வன்னியருமகளும்
வெள்ளலூரு அரண்மனயும் வந்து சேர்ந்தாளே அப்போதும்.

அப்ப காராளன் சீராளன் அப்போது தானுமங்கே
மய்க்காந்நாளு என்னாடா மாட்டெ காணுமுன்னு பாக்கும்போது
அப்போது தானுமங்கே காராளன் சீராளன் - அங்கே
சக்கிலிய பிள்ளெ ரூபங்கொண்டு வந்தவன்
வெள்ளலூ ரு நாட்டு சின்னாண்டிதான்டா - அவன்
மாட்டுக்கு மாடும் பத்தி நம்ப பொண்ணுக்குப் பொண்ணுங் கொண்டு
போயிட்டான்னு சொல்லிலங்கே - அவன்
காராளன் சீராளன் கருநீல வன்னியரு
அவனுடய தேசத்துல அவனும் இருந்துட்டான்.

அப்போது இங்கே வெள்ளலூரு நாட்டில தானுமங்கேசின்னாண்டி
தானுமங்கே
மாடுக்கு மாடும் பத்தி பொண்ணுக்குப் பொண்ணுங் கொண்டு
வந்துட்டான்னு சொல்லிலங்கே பிரபலமா விளங்குதங்கே அப்போதும்.

அப்ப சின்னட வாகனம் பெரியட வாகனம்
மூத்தண்ண வாகனம் மூளிகுட்டி அம்பலம்
முளிச்சகுட்டி அம்பலம் முனையாளி அம்பலம்
மூளிநல்ல வீரப்பன் ஏழுதலமக்காரனுந்தானும் - அப்போது
எண்ணீ நினைத்தாரே எண்ணமற்ற சிந்தையிலே
பாத்தூ நினைத்தாரே பலகோடி யோசினய்கள்
ஆரெ நினைத்தானோ அளவற்ற சிந்தையிலே
இன்னமெ இந்த வையகத்திலெ
நம்மள சின்னாண்டி ஆளவிட மாட்டான்
என்றுசொல்லித் தானுமங்கே
நம்ம இருக்கவேணும் இல்லையினா அவன் இருக்கவேணுமினு
சொல்லிலங்கே
அப்ப ஏழுதலமக்காரனும் புறப்பட்டானே அப்போதும்

கட்டபொம்மன் ஊமத்தொர எடத்திலெ
கவுத்தாத்துக்குத் தெக்கேயங்கே
அப்போது வந்துதானும்

ஊமத்தொர எடம் வந்துதானும்
எட்டோட எட்டுநாளா காலுலயும் விழுந்துதானும்
எங்கள சின்னாண்டி தானுமங்கே
வாழவிட மாட்டேன் ங்குறான் எங்களத்தானும்
இல்லையினா அவன் இருக்கவேணும் இல்லையினா நாங்க இருக்க வேணும்
என்றுமங்கே சொல்லிலங்கே
இங்கே எட்டுநாளா காலுல விழுந்துமுக கிடந்திலங்கே
எட்டாவது நாளுத்தானும் கட்டபொம்மன் ஊமத்தொரதானும்
அப்ப அவுகளுடய பட்டாளத்த அனுப்பிச்சி வச்சிலங்கே
சிறுகொடி நாட்டுக்கு கொண்டுபோயி வைத்துகிட்டுத்தானும் - அப்போது
சின்னாண்டிக்கிக் காயிதமும் எழுதுனார்கள் அப்போதும்.

கவுத்தாத்துக்குத் தெக்கே கட்டபொம்மன் ஊமதொர பட்டாளம் வந்திருக்கு
சின்னாண்டி யுத்தத்துக்கு வரவேணுமுனு சொல்லிலங்கே
காயிதமும் வந்தவுடனே
சின்னாண்டி காகிதத்த வாங்கி வாசிச்சி பாத்துட்டுத் தானுமங்கே போறாரே அப்போது.

அக்காள, காராளபுறந்த கருத்தவனத்த கூப்புட்டு
அக்கையடி அக்கெ! நம்மளுடய மாமன்மாரு தானுமங்கே
கவுத்தாத்துக்குத் தெக்கெ போயி
கட்டபொம்மன் ஊமத்தொர பட்டாளத்தக் கொண்டுவந்து வைத்துகிட்டு
என்னெய யுத்தத்துக்கு வரச்சொல்லி இருக்கார்கள்
நான் யுத்தத்துக்குப் போக வேணுமக்கா
என்றுமங்கே சொன்னவுடனே
அப்போது காராள புறந்த கருத்தவனம் தானுமங்கே
ஈக்கஞ்சம்பா நெல்லெடுத்துத் தீட்டி மறுப் புறக்கி
ஆக்குனா சோறுகள் ஆவரம் பிச்சைகளிலே
பொங்குனா சோறுகள் புளியம் பிச்சிகளிலே
பதுனெட்டு வகக்கறியும் பாங்குடனே தான்சமச்சி
தங்கநல்லெ கும்பாவ தாங்கி தனிவிளக்கி
வெள்ளிநல்லெ கும்பாவ அங்கே விரும்பிநின்டு தான்விளக்கி
சாதம் படைத்தாளே தம்பிக்கி தானுமங்கே - சின்னாண்டி
சாப்பிட்டிளப்பாறீ சையோத்தி ஏப்பமிட்டு
இருந்து இளைப்பாறி இன்னங்கொஞ்சம் ஏப்பமிட்டு
கட்டோட வெத்திலயும் கமுகும் இளம்பாக்கும்
செப்போட சுண்ணாம்பும் சேர்ந்தெழைத்து தான்போட்டு
அப்போது தானுமங்கே ஓடித் தானுமங்கே
வலரிப்பொறிய போயி கத்திகள பாக்கும்போது
நாளுக்கு நாளாகச் சிறுகொடி நாட்டிலேயிருந்து வந்தவன்
அப்புறப் படுத்திட்டான்.

ஒரு மொட்டெ வலரிமட்டும் அங்கே வலரிபொறியீல கிடந்திது
அதயும் எடுத்துக் கையிலெயும் தான்புடிச்சி
ஏழுமலயாளம் பொண்டுக ராச்சீயம்
பூச்சி மட்டேயில குருதயில ஏறியும் உக்கார்ந்தவுடனே - அப்போது
காராள புறந்த கருத்தவனம்
வாழ்த்தி வரங்குடுத்தா வலதுபுறங் கைகுடுத்தாள்
போற்றீ வரங்குடுத்தாள் போகவர கைகுடுத்தாள்
எந்தமுகம் போனாலும் தம்பி தங்கமுகமாக வரவேணும்
நடுப்படயே போனாலும் சின்னாண்டிக்கி மருப்படவே கூடாதுன்னு
அனுப்பிச்சி வச்சாளே அப்போதும்.

அப்ப அனுப்பிச்சி வச்சவுடனே சின்னாண்டி
மூனேயமுக்கா நாழிகளுக்கு உள்ளாக
கூட்டப்புளி ஊரணியும் போயிநல்லெ சேந்தாரே.

போயிசேந்து தானுமங்கே
கட்டபொம்மன் ஊமத்தொரெ பட்டாளத்துக்கும் அப்போது
சின்னாண்டிக்கும்

எட்டுநாள சண்ட நடக்குதங்கே
எட்டுநாள் வரய்க்கும் சண்ட நடக்கும்போது
ஒருபக்கம் அறுக்குறது ஒருபக்கம் உயிரு உண்டாக்குறது
சக்காதேவிய விட்டுத்தானும்
இந்தப் பிரகாரமா எட்டுநாள் சண்டயும் நடக்குதங்கே

சின்னாண்டியுந்தானும் அசந்து தானுமங்கே - அப்போதுதானும்
இன்னமே இவென்ங்கள நம்ம ஒன்னுமே செய்ய முடியாது
என்று சொல்லித்தானுமங்கே
இவன் கைனாலயா நம்ம வெட்டுப்பட்டு சாகுறது
என்ற சொல்லித்தானுமங்கே
என்னப் படச்சவனே என்தகப்பா ஈஸ்வரனே - நான்
உத்தமி பத்தினியாள் ஒருசொல்லு பாதகத்தி
வகுத்திலே புறந்திருந்தே னானாக்கும் - என்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்வரனே - உனக்கு
அடியேன் அடித்தேரு ஓட்டி வப்பேன் நானுந் தானுமங்கே
வெள்ளலூரு நாடு போயி என்னுடய அக்காளெ
கைப்புடியா புடிச்சிலங்கே நான் ஆனமலெ ஓடிலங்கே
அழகர்கோவில் மலெயிலெ போயி
நான் போயித்தானும் கிழக்கெ மொகமா ஏறிட்டுப் பாக்கம்போது
என்னுடய வெள்ளலூரு அரண்மனே இடிஞ்சி தகரவேணும்
அப்போது நானும் கல்லா சமயவேணும்
அதுவரய்க்கும் தானுமங்கே
சண்டெ நடக்குறதுபோல சண்டெ நடக்க வேணுமுனு சொல்லி
சாமிய தோத்தரவு செய்திலங்கே சின்னாண்டி தானுமங்கே

திரும்பிமுக ஓடிவந்து அப்போது காராளபுறந்த கருத்தவனத்த
கையிலெயும் தான்புடிச்சி ஓடிமுக போறாரே.

அப்போது போயித்தானும் ஆனமலெ போயிலங்கே
அழகர்கோவில் மலெயிலெ ஓடீ
கிழக்கெ முகமாக ஏறிட்டுப் பாத்தாரே
அப்போது தானுமங்கே - அங்கே
வெள்ளலூரு அரண்மனயும்இடிஞ்சி தகந்துதங்கே - அப்போது
அக்கா வலதுபுறமும் தம்பி இடதுபுறமுமாக
கல்லா சமஞ்சார்கள் கருங்கல்லாவே நின்டார்கள்.

அப்ப நின்டவொடனே தானுமங்கே - அப்போது தானுமங்கே
அங்கேதானும் காணாப்போனது
கட்டபொம்மன் ஊமத்தொரயினுடய பட்டாளத்துக்குக்
கண்ணூ தெரிஞ்சிலங்கே,
அடடே சின்னாண்டிய வெட்டீ தகத்தாச்சி
வெள்ளலூ ரு அரண்மனயும் இடிச்சீ தகத்தாச்சி
இன்னமெ இந்த நாட்டெ ஆளுங்கடான்னு சொல்லிவிட்டு அப்போது
தானுமங்கே
ஊமத்தொர கூட்டந்தானும் அது கவுத்தாத்துக்குத் தெக்கே
புறப்பட்டுப் போயிருச்சி அப்போதுதானும்.

போனவொடனே தானுமங்கே அழகர்கோட்ட சிங்கணி
தும்பப்பட்டி துளசிப்பட்டி மாம்பட்டி வயலிலே
மாடுகளும் மேஞ்சி அடயும்போது
வழிப்போக்கிலெ போனவர்கள் சொல்லுவார்களே பேப்பெருமா
வெடத்திலெ
என்னண்ணேன் பேப்பெருமா இங்கேயும் மாடூ மேச்சிமுக நிக்கிறியளே
ஓங்களுடய தம்பியவயும் உங்களுடய அக்காவயும்
கவுத்தாத்துக்குத் தெக்கே போயி உங்களுடய மாமன்மாரு
கட்டபொம்மன் ஊமத்தொர கூட்டத்த கொண்டு வந்து
வெள்ளலூரு அரண்மனயும் இடிச்சி தகத்துட்டுப் போயிட்டார்களே
என்றுமங்கே சொன்னவுடனே - அப்போதுதானும்

பேப்பெருமா ஓடிமுக போறாரே வெள்ளலூரு நாடு போயி
வெள்ளலூரு அரண்மனயே போகும்போது இடிஞ்சி தகந்திருக்குது
அப்போதுதானும் யோசினே பண்ணுனாரே
நம்ம தம்பிய வெட்டுனதாவது
நம்ம அரண்மனய இவங்க இடிச்சி தகத்ததாவதுன்னு
அப்போது பேப்பெருமா ஓடிமுக போறாரே - அங்கே
ஆனமலெ அழகர்கோவில் மலெயிலெ போயி
அங்கே மொட்டெ மலெய பாக்கும்போது
அக்கா வலதுபுறமும் தம்பி இடதுபுறமுமாக
கல்லா சமஞ்சிலங்கே கருங்கல்லாவே நின்டார்கள்.

அப்போதுதானும் பேப்பெருமா தானுமங்கே
இவன இந்த வையகத்த ஆளவிடுறதா என்று சொல்லித்தானும்
திலும்பிமுக வந்திலங்கே - அப்போது சிறுகொடி நாட்டிலே
ஏழுபேரு மாமன்மாரயும் வெட்டி சம்காரம் பண்ணிலங்கே
அவருடய பொண்டாட்டி புள்ளயெல்லாம் சம்காரம் பண்ணிலங்கே
அவன் ஏழுபேரு அரண்மனயும் இடிச்சீ தகர்த்திலங்கே - அப்ப
ஏழுழவு உழுகச்சொல்லி எள்ளுகும் பருத்தியும்
கொட்டுகும் குறுக்குமாகக் கலந்து விதச்சிலங்கே
வச்சிட்டு தானுமங்கே - அப்போதுதானும்
பேப்பெருமாதானும் ஓடிமுக போறாரே.

ஆனமலெ அழகர்கோவில் மலெயிலெபோயி
தம்பிக்கி இடதுபுறமாகப் போயி நின்டுகிட்டு
என்னப் படச்சவனே என்தகப்பா ஈஸ்வரனே - நான்
உத்தமி பத்தினியாள் ஒருசொல்லு பாதகத்தி
வகுத்திலே புறந்திருந்தே னானாக்கும் - என்
வாணி கருப்பணசுவாமி வல்லடியான் ஈஸ்ரவனே - உனக்கு
அடியேன் அடித்தேரு ஓட்டிவப்பேன்
என்கண்ணுக்கு மின்பாக என்னுடய ஏழுகெட மாடும்
கொக்குங் குருவியுமாகப் பறந்துவந்து
இந்த ஆனெமலெ அருகில் உக்காரவேனும்
நானுங் கல்லா சமைய வேணுமுனு சொல்லி
அப்போதுதானும் பேப்பெருமா சாமிய தோத்தரவு செய்தவுடனே
அந்த ஏழுகெட மாடும் கொக்குங் குருவியுமாகப் பறந்துவந்து
ஆனெமலெ அருகிலே உக்காந்தவுடனே
பேப்பெருமாவும் கல்லா சமஞ்சாரு கருங்கல்லா நின்டாரு
அப்போது தானுமங்கே மீனாட்சி அம்மனுக்கு முதற்பூச
ரெண்டாவது தானுமங்கே
அங்கே பேப்பெருமா சின்னாண்டிக்கி பூசயும் நடந்தூ இருக்கு தங்கே.

# சொற்பொருள் அகரநிரல்

அக்கி - புதிதாக ஈன்ற கன்றின் மேல் இருக்கும் பிசின்
அருகுவெத்தி - அருகம்புல் பத்தல்
அலமாசு - அலமாரி
அறவீட்டுக் குழந்தை - பிறந்த குழந்தை
ஆத்துப்பொலி தூத்துப்பொலி - பதர்களை நீக்குவதற்காகத் தூற்றும் முறை
ஆவுசம் - ஆவேசம்
உருட்டுப்பால் திரட்டுப்பால் - இரண்டும் ஒன்றே
உழுகுதல - ஏர் உழுகின்ற இடம்
ஊட கிடக்குற - இடையே கிடக்கின்ற
ஏலச்சவுத்தி - ஏலத்தில் விடுவதற்காக ஜப்தி செய்தல்
ஏழுதலமக்காரன் - சிறுகுடி நாட்டு அரசர்கள் எழுவர்
ஏறிட்டுப் பார்த்தல் - நிமிர்ந்து பார்த்தல்
ஏறு பத்தரம் - கிரயப் பத்தரம்
ஓதப்பி - குடலை உருவி  எடுக்கும் சாணி
ஒண்டு வச்சி - தங்க வைத்து
கண்ணாடித் தம்பி - மாட்டின் பெயர்
கரண்டக்கால் - கெண்டைக்கால் வரை
கருத்தவனம் - மன்னவன் முதற்சோனயின் அக்காள்
கருமயிலத் தம்பி - மாட்டின் பெயர்
கருமாந்தம் - பாவச் செயல்
கவுச குண்டலம் - காதணி
கள்ளம் பரம்பு - இடப்பெயர்
காணிக்குரித்தாளி - காணிக்கு உரியவன்
காணிபூமி - நிலபுலம், மரபுத்தொடர்
காரங்குட்டி - காரை முள் குத்து
காராள புறந்த கருத்தவனம் - சின்னாண்டியின் அக்காள்
கார்மேகக் கோனார் - வெள்ளலூர் நாட்டில் வாழும் ஒருவர்
குடிபட - குடிமக்கள்
கும்பா - ஒருவகைப் பாத்திரம்
குறுக்கு - முட்செடி
கெர்ப்ப சங்க - கர்ப்பமுறுதல்
கைம்பொண்டாட்டி - விதவை
கொட்டுகு - கொட்டை முத்து
கொட்டோட குலவையோட - மேளம் கொட்டுதலும் வாயால் இடும் குலவையும்
கோடிக்கிப் பின்னால் - வீட்டுக்குக் கடைசியில்
சக்காதேவி - கட்டபொம்மனின் குலதெய்வம்
சஞ்சிகம் - ஏர்கலப்பை
சட்டாம்புள்ள - வகுப்புத் தலைவன்

சரவ - தொல்லை
சாமக் கிரயங்கள் - பூசைக்குரிய பொருட்கள்
சாம்பப் பறயன் - தூது சென்றவன்; ஒரு வகுப்பினன்
சிறை பிடித்தல் - திருமணமாகாத பெண்களைத் தூக்கிச் செல்லுதல்
சுரட்டி - துறடு; இலை தழைகளைப் பறிப்பதற்குப்பயன்படுத்தப்படும் கருவி
சுருமாடு - சும்மாடு
சூடா - சூடாமணி; கழுத்துக்கு அணியும் இளைஞர் சங்கிலி
சூட்டாங்கறி - அடுப்பில் சுட்ட கறி
செப்புப் பட்டயம் - உரிமைகளை எழுதிக்கொடுக்கும் பட்டயம்
செல்லம் பரம்பு - இடப்பெயர்
சொத்து சுகம் - மரபுத்தொடர்
தலமாடு - இடத்தின் கடைசிப்பகுதி
தாக்காட்டி - காக்கவைத்து
தாத்துப்புருதல் - மண்ணைத் தள்ளி மூடிவிடுதல்
திகட்டுதில - திகட்டவில்லை
திருமங்கிலியம் பூட்டுதல் - தாலி கட்டுதல்
தும்புறுக்கி - மாடு கட்டும் கயிற்றினை முறுக்கி
துள்ளுமறி - ஆட்டுக்கிடாயைக் கோயில்களில் வெட்டும்போது அது துள்ளினால் மட்டுமே வெட்டுவர். அவ்வாறு துள்ளுவது துள்ளுமரி எனப்படும்
தெத்தம் பண்ணுதல் - அப்படியே விட்டுக் கொடுத்தல்
தெம்மாடி - விவரமற்றவன்; தஞ்சை மாவட்டத்தில் இதனைத் தெக்கனாமுட்டி என்பர்.
தென்மடல் - துண்டு போடும் முறை; மற்றொரு முறை வடமடல்.
தொடுமால - இறைவனுக்காகக் கட்டப்படும் மாலை
தோத்தவுடனே - தோன்றியவுடனே
நாளு முழுத்தங்கள் - முகூர்த்த நாள்
நெடுமரத்துத் தண்ணி - தென்னங்கள்
நெருக்குங்காம - பயமில்லாமல்
பச்சப் பட்டத் தண்ணி - பனங்கள்
பாவுகம் பண்ணி - பாகம் பிரித்து
பில்லறியாத - பயப்படாத
புடி செம்புல கவுறு - மாடு பிடிக்கும் கயிறு
புலம்பிக் கறந்தாள் - பாடிக் கறந்தாள்
புளியாக்கை - மாட்டை அடிப்பதற்குரிய குச்சி
புள்ள புள்ள தலமொற - நிரந்தரமாக
பேத்த கன்டு - செத்த கன்று
மந்தைக் கூட்டம் - ஊர்க்கூட்டம்
மருகு போதல் - புதுமணத் தம்பதியர் தங்கள் வீடுகளுக்குச் செல்லுதல்
மழமாரி - மரபுத்தொடர்
மறுப்பொறுக்கி - வேண்டாதவற்றை ஒதுக்கி

முதற்சோன - வெள்ளஞூர் நாட்டு அரசன்

முதுகிலே பாலேறி - உரிய நேரத்தில் பால் கறக்காவிட்டால் மாட்டின் முதுகில் பாலேறும் என்பது நம்பிக்கை

முழுத்தக்கல் - முகூர்த்தக் கால்

முழுத்தோல - முகூர்த்த ஓலை

முன்னத்தேர் - முன்னே செல்கின்ற ஏர்

மேகரப்புளி - முதற்சோனை தமது குதிரையை நிறுத்துமிடம்

மோண்டு குடித்தல் - முகர்ந்து குடித்தல்

லேஞ்சி - வேட்டி

வலரி - கத்தி

வல்லவெட்டு - துண்டு போட்டுச் செல்லுதல்

வாவாட்டி - கட்டு கழுத்தி

வாயோட வார்த்தைகள் - வாய் வார்த்தைகள்

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தொல்காப்பியப் பொருளதிகாரம் ஆங்கில மொழிபெயர்ப்பு | 40.00 |
| சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு | 110.00 |
| நாடகமேடை நினைவுகள் | 160.00 |
| தமிழின் பா வடிவங்கள் | 35.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவன சுவடி விளக்க அட்டவணை (சித்த மருத்துவம்) | 75.00 |
| சுவடி விளக்க அட்டவணை (இலக்கியம்) | 70.00 |
| சுவடி விளக்க அட்டவணை (மெய்யியல் - நா.புறவியல்) | 70.00 |
| அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி - I | 110.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |
| பொருள் புதிது | 35.00 |
| புதிய அமைச்சகம் புரிந்த பணிகள் | 10.00 |
| சின்னணைஞ்சான் கதை | 75.00 |
| தொல்காப்பியம் இலக்கியக் கோட்பாடுகள் | 110.00 |
| இயற்கை மொழியாய்வு-தமிழ் | 75.00 |
| சூடாமணி நிகண்டு: ஒரு சொல் பல்பொருள் விளக்கம் | 65.00 |
| தமிழ் நாடகமேடை முன்னோடிகள் | 40.00 |
| இராசேந்திரன் (நாடகம்) (ம.ப.) | 50.00 |
| தமிழ் வள்ளல் பாண்டித்துரையார் | 25.00 |
| பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 1 | 95.00 |
| பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 2 | 60.00 |
| பாணினியின் அஷ்டாத்தியாயி-தமிழாக்கம் - பகுதி 3 | 90.00 |
| தேவநேயப் பாவாணரின் மொழியியல் வரலாற்றுக் கொள்கை (அ.சொ.) | 35.00 |
| தமிழ்த் தூது (ம.ப.) | 20.00 |
| யாப்பருங்கலம் (ம.ப.) | 170.00 |
| முல்லை | 25.00 |
| பரணர் | 85.00 |
| திராவிட மொழியின் மூவிடப் பெயர் (ம.ப.) | 40.00 |
| பாஸ மகாகவியின் இரட்டை நாடகங்கள் | 36.00 |
| **Persona in Tolkappiyam** | 50.00 |
| **Studies in Tamil Prosody and Poetics** | 45.00 |
| **Tamil India** | 40.00 |

| | |
|---|---|
| **மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல்** | **18.00** |